Sangathamil
சங்கத்தமிழ்
குரல் – 67 | சர்வதேச மின் செய்தித்தாள் | பெப்ரவரி 15 2024

# “தமிழரின் நாடு தமிழருக்கே” அதற்கு



# தமிழீழமே ஒரே தீர்வு

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
































விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203




## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**நாம்**
**ஒன்றுபட்ட மக்களாக,**
**ஒரே தேசிய**
**சத்தியாக,**
**அணிதிரண்டு, எமது**
**எதிரியின் சவாலை**
**எதிர்கொள்ள**
**வேண்டும்.**






# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
**437 345 4203**
**மின்னஞ்சல்** (Email)
**sangathamilcanada@gmail.com**
**இணையத்தளம்** (Website)
**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# மன்னார் மாவட்டத் தளபதி லெப். கேணல் வேணு

## மேஜர் சயந்தன். மேஜர் குகன், கப்டன் குட்டிமணி

"கண்ணிவெடித் தாக்குதல் நடந்ததாம். பத்து ஆமி செத்துப் போனாங்களாம்"

இரண்டு வரிகளில் இந்தச் செய்தி முடிந்துவிடும். ஆனால் இதனுடைய பெறுமதி இதன் பரிமாணம் மிகப்பெரியது.

இதே வேளை கண்ணிவெடித் தயாரிப்பு முயற்சிகளில் நாம் இழந்துள்ள செல்வங்களின் பெறுமதியை நினைத்தால் கைதடி, அடம்பன், நீராவியடி வஞ்சியன்குளம்... என்ன தவறு நடந்தது?

பெரும்பாலும் இதனைச் சொல்வதற்கு இதனுடன் சம்பந்தப்பட்ட எவருமே மிஞ்சுவதில்லை.

இவ்வாறான சம்பவங்களில் ஒன்று தான் மன்னாரை அதிரவைத்த வஞ்சியன்குளம் விபத்து. மன்னார்ப்பிராந்தியத் தளபதி லெப். கேணல் வேணு, மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணி ஆகியோரை எம்மிடமிருந்து பறித்தெடுத்த சம்பவம் அது. பூநகரியிலிருந்து முள்ளிக்குளம் வரையிலான இந்தப் பிராந்தியத்திலுள்ள மக்கள் இனைவருக்குமே இவர்கள் நன்கு பரிச்சயமானவர்கள். ஆகையால் இவர்களின் இழப்பு இப்பிராந்தியத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கிலும் எதிரொலித்தது.

இச்சம்பத்தில் எம்மால் இழக்கப்பட்டவர்களுள் ஒருவரான கப்டன் குட்டிமணி பேசாலையைச் சேர்ந்தவன். 1998 ஆம் ஆண்டு இந்தியப்படையினரின் நடவடிக்கைகள் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் எம்முடன் இணைந்து கொண்டவன். பயிற்சி முடிந்ததும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் பிரிவில் பணிபுரிந்தான். கண்ணி வெடிகள் வைப்பதில் கைதேர்ந்தவன். இந்தக் காடும், வெளியும் எமக்கே சொந்தம் என்பதை மதிவெடிகள் மூலம் இந்திய இராணுவத்தினருக்கு உணர்த்திக் காட்டியவன். சொந்தக்காலுடன் வந்த இந்திய இராணுவத்தை செயற்கைக் காலுடன் அனுப்பி வைத்தவன்.

மேஜர் குகன் - ஜேமஜர் சயந்தன் இருவருமே 1985 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இயக்கத்துடன் இணைந்து கொண்டவர்கள். இவர்களின் குகன் மன்னார்ப் பிராந்தியத்திற்கு அப்பாலும் அநேக போர்க்களங்களைக் கண்டவன். இந்திய இராணுவம் எமது மக்கள் மேல் போர் தொடுத்தபோது, இதை யாழ்ப்பாணத்தில் பல களங்களில் எதிர் கொண்டவன். முதன் முதல் இந்தியப் படையை ஆயுதங்களுடன் சரணடையச் செய்த தாக்குதலிலும் பங்குபற்றியவன். கொண்டச்சி, கஜுவத்தை, வஞ்சியன்குளம் என பல்வேறு இடங்களிலும் சிறீலங்காப் படையினருக்குப் பாரிய இழப்பை ஏற்படுத்தியவன்.

ஒருமுறை இராணுவ நிலைகளை வேவு பார்க்க சென்ற போது இளைய தோழன் ஒருவனால் இவனது பிரத்தியேக ஆயுதம் இழக்கப்பட்டது. அந்தச் செய்தி மட்டும்தான் விசேட தளபதி சுபனைச் சந்தித்தது, அடி பட்ட புலியாகத் திரிந்த இவன் மிகவும் ஆபத்தான பகுதி ஒன்றில் இரவு நேரம் வந்துகொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது தாக்குதல் தொடுத்து அவ்வண்டி எரிந்து கொண்டிருக்கையில நாலுக்கு மேற்பட்ட ஆயுதங்களைக் கைப்பற்றி அவற்றுடன் சென்றுதான் விசேட தளபதியைச் சந்தித்தான். இதுதான் புலிகளுக்கேயுரிய பாரம் பரியம். இந்த வழிவழியாக வந்த சொத்து என்னிடமும் உள்ளது என் பதை நிரூபித்துக் காட்டியவன்.

உப்புக்குளத்தைச் சேர்ந்த மேஜர் சயந்தன் தளபதி வேணுவுடன் இணைந்து மருத்துவக்குழுவில் பணியாற்றியவன். அத்துடன் போர்க்களத்தில் பணியாற்றத் தகுதி படைத்த சாரதியுமாவான் நீண்ட காலமாக தொழில் முறையில் வைத்தியம் பார்க்கும் வைத்தியர்களே வியக்கும் வண்ணம் மருத்துவப் பணிகளை ஆற்றியவன். தம்பனையில் நிகழ்ந்த சண்டையில் காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றி வாகனத்தில் கொண்டு செல்லும்போது குண்டு வீச்சு விமானம் ஒன்று அந்த வாகனத்தைத் துரத்தித் துரத்திக் குண்டுகளைப்போட்டது "எனது வேகத்திற்கேற்ப குண்டு வீசுவதற்கு இனிமேல்தான் நீங்கள் பழகவேண்டும்" என்று செய்தியை உணர்த்தும் வகையில், மிகவேகமாக வாகனத்தைச் செலுத்தி வந்து அவர்களைக் காப்பாற்றியவன்.

"ஆட்காட்டிவெளி" இந்தப் பெயரைக் கேட்டாலே சிங்கள இராணுவத்திற்கு மூக்குச் சிவக்கும். பொதுவாக அடம்பனுக்கு அப்பாலுள்ள இடங்கள், அவர்கள் வரைபடத்திலும் உயர இரந்து விமான மூலமுமே பார்க்க வேண்டிய பகுதிகளாகும். இப்பகுதிகளுக்கு கால் வைக்க முனையும் ஒவ்வொரு கட்டத்திலும் அச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட சிங்கள இராணுவத்தினர் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதபடியான தாக்குதல் நடக்கும் இங்கு தான் மன்னார் பிராந்தியத் தளபதி வேணுவும் உருவானான்.

விடுதலைப்போராட்டத்தோடு மிக நெருக்கமாக ஒன்றித்திருந்த அடம்பன் அருகே உள்ளது தான் ஆண்டான்குளம் கிராமம். இயற்கையோடு இணைந்த பசுமையான இந்த மண் தான்




ஆற்றலுள்ள போராளியான வேணு அண்ணனை விடுதலைக்கு தந்தது.

சிங்கள இராணுவ அடக்கு முறைக்கெதிராக போராட விரும்பிய இளைஞனான பிரான்சிஸ் றொபேட் சேவியர் என்ற வேணு அண்ணன் அவர்கள் 1984ல் தன்னை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைத்துக் கொண்டார்.

தமிழகத்தில் நடைபெற்ற 4வது பயிற்சிப்பாசறையில் இராணுவப் பயிற்சியை திறம்பட முடித்து ஒரு முழுமையான போராளியானார்.

மன்னார்த் தளபதியாக விளங்கிய லெப். கேணல் ராதாவின் பயிற்சி முகா மில் உருவாகியவன். மன்னார்த்தீவினுள் சிறீலங்கா இராணுவம் எமது இரு போராளிகளைச் சுட்ட போது மன்னார்க் கோட்டைக்குப் பக்கத்தில் லெப். கேணல் ராதாவின் தலைமையிலான அணி பதிலடி கொடுத்தது போல, 1988 ஆம் ஆண்டு அடம்பனில் எமது இரு போராளிகளைக் கைது செய்த சிறீலங்கா இராணுவம் அவர்களை இந்திய இராணுவத்திடம் கையளித் ததிற்கு பதிலடி கொடுக்கத் தீர்மானித்தான். அடம்பன் முகாமுக்கு மிகக் கிட்டிய தூரத்தில் ஜீப்பில் வந்த சிறீலங்காப் படை உயர் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி இராணுவ ரீதியில் பதிலடி கொடுத்தான்.

பயிற்சி முகாமில் இருந்து வெளிவரும் போது இவன் ஒரு வைத்தியனாகவே வந்தான். விஞ்ஞானப் பிரிவில் அவன் கற்ற கல்வி மருத்துவப் பயிற்சிகளை அவன் பெற்றுக்கொள்வதற்குப் பெரிதும் உதவியது. இவன் பங்குகொண்ட முதற் தாக்குதல் மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை மிக முக்கியமானதாகும்.

போராட்டத்தின் ஆரம்ப கட்ட தாக்குதல்கள் சிங்கள காவல் துறையை தமிழர் பகுதியில் செயலிழக்கப்பண்ணுவதாகவே இருந்தது. அவ்வகையில் மன்னார்த் தீவினுள் அமைந்திருந்த இந்த மாவட்டத்தின் பிரதான பொலிஸ் நிலையத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலும் பிரசித்தமானது.

கடல்வழியாக சாதாரண படகுகளில் தீவினுள் நுழைந்து, தளபதி விக்டர் தலைமையில் அந்த தாக்குதல் நடந்தது. மூத்த உறுப்பினர்களான லெப். கேணல் ராதா அண்ணை,

குமரப்பா அண்ணை போன்றோர் அணிகளை வழிநடத்த, தளபதி விக்டரின் வியூகத்தில் முற்றாக வீழ்ந்தது, மன்னார் மாவட்டத்தின் தலைமை பொலிஸ் நிலையம். 1985 முற்பகுதியில் நடந்த இத்தாக்குதலில் ஒரே ஒரு போராளி விதையாக, தாக்குதல் வெற்றியோடு நிறைவுக்கு வந்தது.

மன்னார்த் தீவினுள் அமைந்திருந்த இந்த மாவட்டத்தின் பிரதான பொலிஸ் நிலையத்தின் மீது நிகழ்த்தப் பட்ட தாக்குதலின் போது காயமடைந்த போராளிகளுக்கு வைத்தியனாகச் சென்றான். அன்றிலிருந்து மன்னார் மாவட்டப் போராளிகளைப் பொறுத்தவரை இவனே டாக்டர். ஆனாலும், இடையிடையே கிடைக்கும் போர்க்களங்களிலும் தனது முத்திரையைப் பதிக்க இவன் தவறவில்லை.

அன்றைய மன்னார் மாவட்ட தளபதி பாணு தலைமையில் புலிகள் முள்ளிக்குளம் புளட் முகாமை வெற்றிகொண்ட பின்னர், புலிகளின் அணிகளில் ஒன்றை அப்பகுதியில் தொடர்ந்து நிறுத்தி வைக்க முடிவு செய்தார்.




மிகுந்த நெருக்கடிககள், வழங்கல்களுக்கு சிரமம், பின்தள உதவிகளற்ற நிலையில், அங்கு நிலைகொண்ட அணிகளை லெப். கேணல் வேணு அவர்கள் பொறுப்பெடுத்து வழிநடாத்தினார்.

புளட் அமைப்பின் பலம்மிக்க கோட்டையாக இருந்த அப்பகுதியை புலிகளின் நிர்வாக பகுதியாக ஆளுகை செய்ததிலும், அப்பகுதியில் புளட் அமைப்பினர் மீள ஒருங்கிணைவதை தடுத்து அப்பிரதேசத்தைப் பாதுகாப்பதிலும் இவர் காண்பித்த ஆளுமை அளப்பரியவை.

மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த அப்பகுதியில் மக்களின் சமூக பொருளாதார முன்னேற்றங்களுக்கான முயற்சிகளில் இவர் காட்டிய ஆர்வம் அக்கிராம மக்களை போராட்டத்துடன் ஆழமாக ஒன்றிணைத்தது.

அப்பகுதியில் இருந்த இஸ்லாமிய மக்களோடும் நெருக்கமான உறவைப்பேணி, போராட்டத்தின் நியாயப்பாடுகளை அவர்களிடம் தெளிவுபடுத்தி, அந்த மக்களையும் அரவணைத்துச் சென்றார்.

இவ்விதமாக, தமிழ்மக்களின் பழம் பெரும் கிராமங்களில் ஒன்றான முள்ளிக்குளத்தையும் அதனோடிணைந்த வேறுபல கிராமங்களையும், வில்பத்து காட்டின் ஒருபகுதி எல்லையையும் தனது சிறிய அணியை கொண்டு பாதுகாத்து நின்ற தளபதி வேணு தலைமையிலான அந்த அணியின் நடமாட்டங்களை அவதானித்த சிங்களப்படைகள், அந்த அணிமீது திட்டமிட்ட, வலிந்த பதுங்கித்தாக்குதல் ஒன்றை திட்டமிட்டு மேற்கொண்டனர்.

பிறேமதாச அரசுடன் சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அந்த நாட்களிலேயே, சிறீலங்கா அரச சட்டத்துக்கு புறம்பானதும் பிறேமதாசவின் பிரத்தியேக கொலைகார படையணியுமான "பச்சைப்புலிகள்" (கொள கொட்டியா) என்ற இராணுவ அணியே இத்தாக்குதலை மேற்கொண்டது. JVP அமைப்புக்கு எதிராக காத்திரமான தாக்குதல்களை செய்த இராணுவத்தின் இந்த அணி, JVP அமைப்பைபோன்று புலிகளின் உறுதியையும் எடைபோட்டு தனது தாக்குதல் உத்தியை வகுத்திருக்க கூடும்?

17-01-1986 அன்று நாயாற்று வெளியில் அப்போதைய மன்னார் மாவட்டத் தளபதியான லெப். கேணல் விக்டரைக் குறிவைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஈடுபட்ட இராணுவத்தினரை, கண்டல் சந்தியில் வழிமறித்துத் தாக்கிய குழுவில் இவனும் ஒருவனாக இருந்தான். "பிச்சை வேண்டாம் நாயைப் பிடி" என்ற நிலையில் ஓடிய இராணுவம், நீண்ட காலத்திற்கு அந்தப் பக்கத்தையே நினைக்காமலிருந்தது.

பரப்புக் கடந்தான், வட்டக்கண்டல் போன்ற மிகப் பின்தங்கிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பலத்த போக்குவரத்துச் சிரமங்களின் மத்தியிலேயே மன்னார் அடம்பன் போன்ற வைத்திய சாலைகளுக்குச் செல்ல வேண்டும். இவனோ அந்த நிலையை மாற்றி மக்களைத் தேடி மருத்துவம் செய்யும் மருத்துவனானான். ஆட்காட்டிவெளியில் வைத்திய நிலையம் ஒன்றினை நிறுவி அப்பகுதி மக்களின் அன்புக்கு பாத்திரமானான். இரவு பகல் எந்த நேரமானாலும் பொதுமக்களுக்கோ, போராளிகளுக்கோ வேணுதான் டாக்டர்.

இக்காலத்தில் மக்களிடையே மிகவும் பிரபலமானான் வேணு. காரணம் அவர்களோடு அவன் பழகிய விதம் மக்களை அரவணைத்துச் செல்லும் பாங்கு என்பனதான். குடும்பத்தவர் எவருமே இந்த மண்ணில் இல்லாத நிலையில் இவன் மறைந்த போது, உனக்குச் சொந்தங்கள் நிறைய உண்டு எனக் கூறிற்று. பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தி வரண்ட பூமியாம் மன்னாரைத் தம் கண்ணீரால் ஈரமாக்கினர் அப்பகுதி மக்கள்.

07-11-1989 அன்று வில்பத்துக் காட்டில் "பச்சைப் புலிகள்" எனப்படும் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலை இவன் முறியடித்த விதம், சாதனைக்குரியதாகும். பெட்டியுடன் இணைக்கப்பட்ட உழவு இயந்திரத்தில், தனது 14 தோழர்களுடன் பயணமாகிக் கொண்டிருந்தான் இவன். அப்போது, மறைந்திருந்த சிறீலங்காப் படையினர் இவர்கள் மேல் தாக்குதல் தொடுத்தனர். பாதுகாப்பான நிலைகளில் இராணுவத்தினர், பாதகமான நிலைகளில் போராளிகள்.

இவ்வெட்டையின் நடுப்பகுதி நீர்நிறைந்த பகுதியாக காணப்படும். வில்பத்தின் காட்டுவிலங்குகள் நீர் அருந்தும் பிரதான பகுதி மேற்குறித்த வெட்டைகளே) பிரதேசத்தினுள் உழவு இயந்திரம் நுழைந்த போது காட்டின் ஓரமாக நிலையெடுத்து மறைந்திருந்த சிறீலங்காப் படையினர் இவர்கள் மேல் தாக்குதல் தொடுத்தனர்.

ஆனாலும் இவர் தன் அணியை ஒருங்கிணைத்து, தான் யணித்த உழவு இயந்திரத்தையே காப்பாக்கி நிலையெடுத்து, தம்மை தாக்கும் படையினர் மீது எதிர்த்தாக்குதல் தொடுத்தார்.

இவரது நா அந்த இக்கட்டான திடீர் அபாய சூழ்நிலையிலும் எந்த பதட்டமுமின்றி உத்தரவுகளை பிறப்பித்தது.

வெட்டவெளிக்குள் இருந்த தம் போராளிகளின் உள உரணை சிதறவிடாமல் உரமேற்றி, முற்றிலும் பாதுகாப்பான நிலைகளில் இருந்த எதிரிமீது பலமான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டார். இதுபோன்ற பாதகமான சூழ்நிலையில் இழப்புக்களை குறைப்பதற்காக, அடையாள தாக்குதலை செய்தவாறு பின்வாங்கி செல்வதே எந்தவொரு இராணுவ அமைப்பும் பின்பற்றக்கூடிய இராணுவ உத்தி.

ஆனால் இவரோ, தப்பியோடும், அல்லது பின்வாங்கிச்செல்லும் உத்தியை தவிர்த்து, எதிரியை எதிர்கொள்ளும் துணிச்சலான உத்தியை கையாண்டு சண்டையை எமக்குச் சாதகமாக மாற்றினார்.

கட்டளைகள் மட்டுமன்றி இவர் கையிலிருந்த M16 வகை துப்பாக்கியும் எதிரியை நிலைகுலையப்பண்ணின.

அதனால் உயிரிழந்த தமது சகாவையும் விட்டு விட்டு சிறீலங்காப் படையின் அந்த "கொளகொட்டியா" சிறப்பு அணி ஓடித்தப்பியது. கப்டன் சத்தியராஜ் மற்றும் வீரவேங்கை ஆழ்வாரை நாம் இழந்த போதிலும், உயிரிழந்த இராணுவத்தினது உடலுடன் AK LMG உட்பட ஒரு சில ஆயுதங்களையும் கைப்பற்றி சண்டையை எமக்குச் சாதகமாக மாற்றினான். அதனால் உயிரிழந்த தமது சகா ஒருவனை விட்டு விட்டு சிறீலங்காப் படை தப்பியோடியது. உயிரிழந்த இராணுவத்தினது உடலுடன் ஒரு சில ஆயுதங்களையும் கைப்பற்றி வந்தான்.

இத்தாக்குதலில் ஈடுபட்ட அணிக்குத் தலைவனும் இவனே. வைத்தியனும் இவனே. எமக்குச் சாதகமாக மாற்றினான். அதனால் உயிரிழந்த தமது சகா ஒருவனை விட்டு விட்டு சிறீலங்காப் படை தப்பியோடியது. உயிரிழந்த இராணுவத்தினது உடலுடன் ஒரு சில ஆயுதங்களையும் கைப்பற்றி வந்தான். இத்தாக்குதலில் ஈடுபட்ட அணிக்குத் தலைவனும் இவனே. வைத்தியனும் இவனே.

இதுபோன்ற திடீர் தாக்குதலை பதட்டமின்றி எதிர்கொள்ளும் அனுபவத்தை இவருக்கு வழங்கியதில் இந்தியப்படையினருடனான ஒரு முற்றுகை முன்னுதாரணமாக இருந்திருக்ககூடும்.

அது 1988. 10.10 ல் நடைபெற்ற துயரமான ஒரு நிகழ்வு.

புலிகளின் ஒரு அணிமீது இந்தியப்படைகள் மேற்கொண்ட ஒரு பதுங்கித்தாக்குதல் அது. இத்தாக்குதலின்போது தேசவிரோத அமைப்பொன்றும் இந்தியப்படைகளோடு இணைந்து கொண்டது. ஆண்டியா புளியங்குளத்துக்கு அண்மையில் இந்தியப் படைகளினதும்,

தேசவிரோத அமைப்பொன்றினதும் முற்றுகைக்குள் சிக்குண்ட புலிகளின் அணியில், முற்றுகையை உடைத்து வெளியேறி, உயிர்தப்பிய ஒரிருவரில் தளபதி வேணுவும், கப்டன் பாஸ்கரனும் இருந்தார்கள். (கப்டன் பாஸ்கரன் 22.03.1991 இல் சிலாவத்துறை முகாம் தாக்குதலில் விதையானார்)

மேஜர் தாடிபாலா, கப்டன் சைமன் என வரிசையாக 12 போராளிகளை இத்தாக்குதலில் இழந்தமை இவரது உள்ளத்தில் ஆழமான காயங்களை ஏற்படுத்தின.

இந்த அனுபவமே, "பச்சைப்புலிகள்" என்ற பிறேமதாசவின் சிறப்பு இராணுவ அணியின் பலமான முற்றுகை தாக்குதலை துணிவோடு எதிர்கொண்டு வெற்றி பெறவைத்திருக்ககூடும்.

தளபதி விக்டர் அவர்களின் காலத்திலிருந்தே களமாடி வந்த மன்னாரின் மூத்த போராளிகளுள் ஒருவரான தளபதி வேணு இந்தியப்படைகளுக்கு எதிரான யுத்தத்திலும் மன்னாரில் பெரும் பங்கு வகித்தார்.

இந்திய இராணுவத்துடனான போர் நிகழ்ந்த காலப்பகுதிதான் இவரை மன்னார் மாவட்டத்தின் எதிர்காலத் தளபதியாக இனங்காட்டியது.

இயக்கத்தின் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் வல்லவனாக - முனைப்பானவராக இவர் இருந்தார். அன்றைய மன்னார் மாவட்ட தளபதி பாணுவுடன் இணைந்து மன்னார் மண்ணை விடுதலைப்பாதையில் இவர் வழிநடத்திச்சென்றார்.

1989. 05.20 அன்று தளபதி பாணு அண்ணன் தலைமையில் முள்ளிக்குளம் புளட் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட பெரும்தாக்குதலில் தளபதி பாணு அவர்கள் கழுத்தில் கடுமையான காயத்துக்கு உள்ளானதால், சிகிச்சைக்காக தமிழகம் செல்லவேண்டி ஏற்பட்டது.

அதனால், அதுவரை தேசியத்தலைவரோடு நின்று மணலாறு களமுனையில் இந்தியப்படைகளுக்கு எதிராக தீரமுடன் போரிட்டுக்கொண்டிருந்த தளபதி சுபன் புதிய தளபதியாக நியமிக்கப்பட்டார்.

புதிய தளபதியான சுபனுடன் இணைந்து விடுதலைப்பாதையில் மன்னார் மண்ணையும் போராளிகளையும் சிறப்பாக வழிநடத்திக்கொண்டிருந்த போதே, 1990 ம் ஆண்டு முற்பகுதியில் மன்னார் மாவட்ட துணை தளபதியாக வேணு தேசியத் தலைவரினால் நியமிக்கப்பட்டார்.

இக்காலப்பகுதியில் இந்தியப்படைகள் யாழ் மாவட்டத்தை விட்டு முற்றாகவெளியேறிய பின்னர் தேசியத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் மன்னார் மாவட்ட அணியொன்றை தலைமையேற்று யாழ் சென்ற இவருக்கு, கல்லுண்டாய் தொடக்கம் காரைநகர் கடற்படை முகாம் வரையான பகுதியை நிர்வகிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது.

அது பிறேமதாசா அரசுடனான சமாதான காலப்பகுதி என்றபோதிலும், இந்தியப்படைகள் ஈழத்தை விட்டு முற்றாக வெளியேறி முடிந்த பின்னர் பிறேமதாச அரசு புலிகளுக்கு எதிராகவும், தமிழ் மக்களுக்கு எதிராகவும் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள இருப்பதை முன்கூட்டியே கணித்த இயக்கம் யாழ் மாவட்டத்தை முற்றுகையிடும் எதிரியின் நோக்கத்தை எதிர்கொள்ள தமது அணிகளையும் தயார்நிலையிலேயே வைத்திருந்தது. யாழ் மாவட்டத்தில் தனது அணிக்கு வழங்கப்பட்ட பணியை மிக நேர்த்தியாக தளபதி வேணு செய்து வந்தார்.

# வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: மேஜர் குகன்
நிலையான பெயர்: இராமலிங்கம் சிவஞானம்
வீரப்பிறப்பு: 06.10.1967
நிலையான முகவரி: புதுக்குடியிருப்பு, உயிலங்குளம்
நிகழ்வு: 06.01.1992 அன்று நறுவிலிக்குளம் என்னும் இடத்தில் சிறிலங்கா படையினருக்கு கண்ணிவெடி வைக்க முயன்றபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு

மாசிப்பனி மூசிப்பெய்யும் என்ற வயதானவவர்களின் கூற்று எவ்வளவு உண்மையானது என்பதை அனுபவமாய் அன்று நாங்கள் உணர்ந்துகொண்டோம். அந்த ஒரு முழு இராப் பொழுதையும் வெட்டையான வயல்வெளிகளில் நிலையெடுத் திருந்து, கொட்டும்பனியில் மொத்தமாய் நனைந்து தோய்ந்து, குளிரோடு இரவு முழுதும் கண்விழித்து 17.02.1991, பொழுது புலர்ந்தபோது, ஆளை ஆள் தெரியாத பனிமூட்டம் நிறைந்த அந்த அதிகாலை வேளையில் கொண்டச்சி எனும் இடத்தில் வெறும் 20நிமிடங்களே நீடித்த அந்த துணிகர தாக்குலில் 50 படையினரை ஒரே தடவையில் அழித்து, அவர்களின் அத் தனை ஆயுதங்களையும் அள்ளிவந்த அந்த தாக்குதலின் வெற்றியில் தளபதி சுபன் அவர்களுடன் இணைந்து இவரது பங்கும் அளப்பரியது.

மேஜர் ராதாரவி, மேஜர் சூரி உட்பட ஐந்து வேங்கைகள் விதை யாகிப் போனாலும், குறுகியகால அவகாசத்தில் நேர்த்தியாக மட்டுமன்றி வரலாறாகவும் பதிந்து நின்ற அந்த தாக்குதலின் வெற்றிக்காக சுபன் அண்ணையோடு இணைந்து நீ செய்த பணிகள் என்றும் எம் நினைவிலுண்டு.

அக்காலத்தில் மன்னாரில் உங்கள் இருவராலும் நிகழ்த்தப்பட்ட இதுபோன்ற தாக்குதல்கள், தமது திட்டங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலைமையைத் தோற்றுவித்தது சிறீலங்கா இராணுவத்தினருக்கு.

அனேகமாக 1991 ஏப்ரல் மாத நடுப்பகுதியில், மாவட்ட தள பதிகளின் நிர்வாக கட்டமைப்புகளில் ஒரு புதிய மாற்றத்தை தேசியத்தலைவர் ஏற்படுத்தினார்.

அதுவரை தளபதி, துணைத்தளபதி என்றிருந்த நிர்வாக ஒழுங்குகள், முறையே சிறப்புத்தளபதி, தளபதி, துணைத் தளபதி என்பதாக மாற்றியமைக்கப்பட்டது.

இயக்கத்தின் வளர்ச்சி, ஆளணி, அதிகரித்த தாக்குதல்கள் என் பவை காரணமாக ஏற்பட்ட வேலைப்பழுவை வினைத்திற னோடு கையாளும் நோக்கத்துக்காக இவ் நிர்வாக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது, அதுவரை தளபதியாக இருந்த சுபன் அவர்கள் சிறப்புத்தளபதியாகவும், துணைத்தளபதியாக இருந்த வேணு அவர்கள் தளபதியாகவும் நியமிக்கப்பட, இறுதிப்போர்வரை கள மாடிய லக்ஸ்மன் அவர்கள் துணைத்தளபதியாக நியமிக்கப் பட்டார்.

இக்காலப்பகுதியிலேயே சிலாவத்துறை முகாம் மீதான தாக் குதலை தொடர்ந்து எதிரி பலமான பல்வேறு இராணுவ நட வடிக்கைகளை மன்னாரின் பல பகுதிகள்மீது மேற்கொண்

அப்போது யாழ் மாவட்ட தளபதியாக பாணு அவர்கள் இருந்தார்.

தளபதி பாணு அவர்கள் ஏற்கனவே மன்னார் மாவட்டத்தளபதி யாக இருந்தபோது தளபதி வேணுவுடன் மிக நெருக்கமாக இணைந்து பணியாற்றியவர்.

எனவே, இப்போது மீண்டும் இருவரும் இணைந்து பணி யாற்றும் சந்தர்ப்பம் இருவருக்குமே ஆழமான புரிந்துணர்வு மிக்கதாக அமைந்தது.

எனினும் யூன் 10 1990 ல் பிறேமதாச அரசு தமிழ் மமக்கள் மீது யுத்தத்தை திணித்தபோது, யுத்தம் மன்னாரையும் ஆழமாக நெருக்கியதால், தன் அணியோடு மன்னார் சென்ற தளபதி வேணு அவர்கள், தளபதி சுபனுடன் இணைந்து இராணுவத் தினருக்கு எதிராக காத்திரமான பல தாக்குதல்களை ஒருங் கிணைத்தார்.

மேஜர் வசந்த் அவர்கள் விதையாக்கி, முதன்முதலில் "பவள்" கவசவாகனம் கைப்பற்றப்பட்ட கஜுவத்தை இராணுவ முகாம் தகர்ப்பின் பின் வில்பத்து ஊடாக எதிரி மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தடுப்புச் சமரின் போது பாரிய காயங்களுக்குள்ளாகி தமிழகம் சென்று, சிகிச்சை முடித்து, மிக குறுகிய ஓய்வோடு தாயகம் திரும்பினார். தாயகம் திரும்பிய உடனேயே சிலாவத்துறை தாக்குதலுக்கான முன்னாயத்தங்கள் இவர் தலைமையில் தொடங்கப்பட்டன.

பொற்கேணியில் தன் முகாமை போட்டு, தன்னோடு தன் கூடவே விதையான மேஜர் குகன் தலைமையில் அங்கே அணிகளை நிலைநிறுத்தி, அந்த பெரும் தாக்குதலுக்கான முன்னாயத்தங்களை இவர் நேர்த்தியாக செய்து முடித்தார்.

இவ்வாறான அந்த நாட்களில் ஒன்றில் தான் போராட்ட வரலாற்றில் மாபெரும் சாதனை ஒன்று நிலைநாட்டப்பட்டது.

அது 17.02.1991ல் நடந்தது.

டானியேல் தலைமையில் சிறிய அணியொன்று சிலாவத் துறைக்கும் கஜுவத்தைக்குமிடையில் உள்ள இராணுவ நட மாட்டம் குறித்த தகவல்களை சேகரிக்க சென்ற ஒரு அதி காலைப்பொழுதில், எதிரி முந்திக்கொண்டு அந்த அணிமீது தாக்குதல் தொடுக்க, இரண்டு இளம் போராளிகளை இழந்து டானியேல் துயரத்துடன் தளம் திரும்பினான்.

ஆனால் துன்பத்தை தந்தவனுக்கே அதை திருப்பி கொடு என்ற இயக்க வார்த்தைகளுக்கு ஏற்ப, மேற்குறித்த அந்த இராணுவ அணியை தாக்கியே ஆகணும் என்று உறுதியெடுத்து வெறும் ஐந்து நாட்களுக்குள்ளாகவே தாக்குதலுக்கான அனைத்து ஆயத்தங்களையும் துணைத்தளபதியாக நின்று செய்து முடித் தார்.

# வீரவணக்கம்



நிலையுடன் பெயர்: மேஜர் சயந்தன்
நிலையான பெயர்: தங்கராசா ராஜ்மோகன்
வீரப்பிறப்பு: 09.03.1969
நிலையான முகவரி: உப்புக்குளம், மன்னார்
நிகழ்வு: 06.01.1992 அன்று நறுவிலிக்குளம் என்னும் இடத்தில் சிறிலங்கா படையினருக்கு கண்ணிவெடி வைக்க முயன்றபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவு



டான். அவ்வாறான ஒரு முயற்சியின்போது நானாட்டான் பிரதேசத்தை கைப்பற்றிய எதிரி அங்கே பலமான தளம் அமைத்து நிலைகொண்டான்.

ஆக்கிரமிக்கப்பட்ட அந்த நிலத்தில் எதிரியை நின்மதியாக இருக்க விடாது தொந்தரவு செய்து எதிரியின் உளவியலை உடைக்கும் நோக்கத்தோடு, நானாட்டானுக்கும் வங்காலைக் கும் இடையிலான, அவனது விநியோக பாதைமீது தொல்லை தரும் தாக்குதல்களை செய்வது உனது உத்தியாக இருந்தது.

இதற்காக நீ தேர்ந்தெடுத்த தாக்குதல் முறை, கண்ணிவெடி ஃஅமுக்க வெடி என்பதாக இருந்தது. கண்ணிவெடி புதைப் பதற்கு குட்டிமணியை மட்டும் அனுப்பிவிட்டு நீ இருந்திருக்க முடியும். அல்லது உன்னோடு கூடவே விதையாகிப்போன, நீ அதிகம் விரும்பும் அணித்தலைவனான மேஜர் குகனை பணித்திருக்க முடியும்.

ஆனால் அதிக ஆபத்து மிக்க அந்த பிரதேசத்தினுள் நுழைந்து கண்ணிவெடி வைக்கும் செயலை ஒவ்வொரு தடவையும் நீயே நேரில் செய்தாய். ஒரு தளபதியாக இதை நீயே நேரில் செய்யவேண்டியதில்லைதான். ஆனால் எப்போதும் எதிரியின் நடமாட்டம் உள்ள அந்த வீதியில் எதிரியால் நேரக்கூடிய தாக் குதலை எதிர்கொள்ளும் வாய்ப்புக்காகவே நீ ஒவ்வொரு தட வையும் நேரில் சென்றாய். அப்படி ஒரு வாய்ப்பை எதிரி உனக்கு தந்திருந்தால் கொளகொட்டியா இராணுவ அணிக்கு எதிராக நீ எழுதிய வரலாற்றை மீண்டும் நானாட்டான் மண் ணிலும் எழுதியிருப்பாய்.

அந்த வீதியில் கண்ணிவெடி புதைப்பது இது உனது முதலாவது முயற்சியுமல்ல. ஏற்கனவே ஒரு கவசவாகனத்தை உனது அமுக்கவெடி சிதறப்பண்ணியிருந்தது.

ஆனாலும் இன்றையநாள் ஒரு கொடிய நாளாக எங்களுக்கு அமைந்தது ...

கண்ணிவெடி புதைத்துக்கொண்டிருந்தபோது ஏற்பட்ட வெடி விபத்தில், தளபதி வேணுவும் உன் நேசத்துக்குரிய தோழன் மேஜர் குகன், மேஜர் சயந்தன், கப்டன் குட்டிமணியோடு இணைந்து விதையாகிப்போனாய்.

கொண்டச்சியில் இராணுவ ரோந்து அணியை துவம்சம் செய்து நீங்களும் தளபதி சுபன் அவர்களும் எழுதிய வரலாற்றை இரண்டே மாதங்களில் 29.04.1991 ல் நீங்களே புதுப்பித்து புதுவரலாறாக எழுதினீர்கள்.

நீங்கள் கண்ணிவெடி புதைத்து திரிந்த இதே வீதியில், நீ விதையாகிப்போன இதே வஞ்சியன்குளம் மண்ணில்தான் உங்களுடன் தளபதி சுபன் அவர்களும் இணைந்து அந்த வரலாற்று சாதனையை புரிந்தீர்கள்.

கொண்டச்சியைப்போன்றே இங்கேயும், வங்காலையிலிருந்து நானாட்டான் நோக்கி ரோந்து சென்ற இராணுவ அணியை, இதே வஞ்சியங்குளத்தில், முற்றிலும் சாதகமற்ற ஒரு வெட்டை வெளி வயல்பிரதேசத்தில் பதுங்கியிருந்து தாக்கி, ரோந்து வந்த 60படையினரையும் 20நிமிடங்களுக்குள்ளேயே மொத்தமாய் அழித்து, போராட்ட வரலாற்றில் ஒரே தடவையில் அதிக படையினரை அழித்த தாக்குதலாக கொண்டச்சியில் நீங்கள் எழுதிய வரலாற்றை இங்கே மீண்டும் மாற்றி எழுதினீர்கள்.

பசீர் அண்ணன் இதற்கான தகவலை திரட்டி தாக்குதலில் முக் கிய பங்காற்ற லக்ஸ்மன் அண்ணை இச்சண்டையை நேரடி யாக வழிநடாத்தினார்.

இரண்டு வீரர்கள் மட்டும் விதையாகிப்போக, மேலும் நான்கு போராளிகள் சிறு காயங்களுக்கு உள்ளாக , இழப்புக்கள் மிக குறைந்த அந்த சண்டை எதிரியின் இராணுவ தந்திரோ பாயங்களையே மாற்றியமைக்க நிர்ப்பந்தித்தது.

வன்னிமாவட்ட தளபதிகளில் ஒருவராக இருந்த லெப். கேணல் கிறேசி அவர்கள் மன்னார் பரப்புக்கடந்தானில் விதையான பின் னரும், மன்னாரில் தங்கிநின்ற வன்னிமாவட்ட அணியி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகளையும் இணைத்துக் கொண்டு நீங்களும் தளபதி சுபன் அவர்களும் புரிந்த அந்த சாதனைத்தாக்குதல் காரணமாக எதிரி தமது ரோந்து நட வடிக்கைகான உத்திகளை மொத்தமாக மாற்றியமைத்தான்.

அன்று அது ஒரு கொடிய நாள், ஏற்கனவே மிகப் பெரிய வெற்றிகளையெல்லாம் (60 இராணுவத்தினர் பலியான சம்பவம் உட்பட) எமக்குத் தந்த வஞ்சியன் குளத்தில் எமக்கு ஒரு சோகம் காத்திருந்தது. சிறந்த தளபதி, திறமையான மருத்துவன் - மன்னார் மக்களின் அன்புக்குப் பாத்திரமான வேணுவை இழந்தோம்.

அவனுடன் மேஜர் சயந்தன், மேஜர் குகன், கப்டன் குட்டிமணி, என்று நால்வரை - எங்கள் நான்கு கண்மணிகளை வெடிமருந்து விபத்தில் நாம் இழந்தோம்.






# போராடாமல் வழியில்லை

## தமிழரசுக்கட்சி தலைவர் சிறீதரன் சிவஞானம்

பெப்ரவரி 02, 2023

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ம் திகதியை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி, யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தினால் கிளிநொச்சியில் ஒழுங் கமைக்கப்பட்டுள்ள எதிர்ப்புப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்குமாறு தமிழரசுக்கட்சி தலைவர் சிவஞானம் சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

திருமலை நடராஜன், 1957 ஆம் ஆண்டில் இலங்கை யின் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பைத் தெரிவித்து, திரு மலையில் ஏற்றப்பட்டிருந்த சிங்கக்கொடியை அகற்றி கறுப் புக்கொடியை ஏற்றியமைக்காக சிங்கள காவல்துறை யினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டு 67 வருடங்கள் கடந்தும், நாட்டில் தமிழர்களின் இறைமை இன்றளவும் அங்கீகரிக்கப்படவில்லை.

தமது பூர்வீக மண்ணில் கட்டமைக்கப்பட்ட இனப்படு கொலைக்கு உள்ளாக்கப்பட்டுவரும் தமிழ்த்தேசிய இனத் தின் இருப்பை நிலைநிறுத்த, அரசுக்கும் அரச கட்டமைப் புகளுக்கும் எதிராக எல்லாவழிகளிலும் போராட வேண்டும். இந்நிலையில் எமது மக்களது அக உணர் வுகளின் பிரதிபலிப்பாகவும், எமது மக்களின் குரலாகவுமே யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் எதிர்ப்புப் போராட்டம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகள் நிறை வேற்றப்படாதவரை, ஈழத்தமிழர்களை இறைமையுள்ள தேசிய இனமாக இலங்கைத் தேசம் அங்கீகரிக்காதவரை, நாட்டின் சுதந்திர தினம் தமிழ் மக்களின் கரிநாளே.

அதனை மீள வலியுறுத்தும் போராட்டத்தில், அரசியற் கட்சி மற்றும் கொள்கை வேறுபாடுகள் எவையுமற்று எமது இனத்தின் உரிமைக்கான ஏகோபித்த குரலாக எல் லோரும் இணைந்து, இதனை ஒரு மக்கள் திரட்சி மிக்க போராட்ட வடிமாக எழுச்சிபெறச் செய்ய வேண்டுமென



சிறீதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

# இலங்கையின் சுதந்திர தினமாக பெப். 4ம் திகதி கரிநாள் போராட்டத்திற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு!

பெப்ரவரி 02, 2024

இலங்கையின் சுதந்திர தினமாக பெப்ரவரி 4 ம் திகதி கரிநாளாக பிரகடனப்படுத்தியுள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அன்றைய தினம் கிளிநொச்சியில் கண்டனப்பேரணிக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இதனிடையே மாணவர்களது போராட்ட அழைப்பிற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட பல கட்சிகளும் தமது ஆதரவை தெரிவித்துள்ளன.

பெப்ரவரி 4 ம் நாள், 76 வருடங்களுக்கு முன்னர் தமிழர் தேசத்தின் இறைமையை பிரித்தானியரிடமிருந்து கையகப் படுத்திய சிங்கள - பௌத்த பேரினவாதம், தமிழ்த் தேசிய இனத்தின் சுதந்திரத்தை சூறையாடிய கருப்பு நாளாகும்.

முழுத் தீவினதும் ஆட்சியதிகாரத்தினைத் தனது கையில் வைத்துக் கொண்டு, தமிழர் நிலங்களை ஆக்கிரமித்தும், தமிழ் இனவழிப்பை மேற்கொண்டும், தமிழர் தேசம் மீதான திட்ட மிட்ட சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்புக்கள், அதன் தொடர்ச் சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பையும் சிங்கள பௌத்த பேரினவாதம் தொடர்ந்து வருகிறது.

முடிவின்றித் தொடரும் கட்டமைப்புசார் இனவழிப்பிலிருந்து தமிழர் தேசம் பாதுகாக்கப்படல் வேண்டுமாயின், தமிழ்த் தேசத்தின் இறைமையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்வு அமைய வேண்டும். இனவழிப்புக்கான பொறுப்புக்கூறலுக்கு சர்வதேச குற்றவியல் விசாரணை வேண்டும்.

அந்தவகையில் ஒற்றையாட்சிக்குட்பட்ட 13 ம் திருத்தத்தினை முற்றாக நிராகரித்தமை, திம்புப் கோட்பாட்டின் அடிப்படையி லான அரசியல் தீர்வை வலியுறுத்தியமை, பொறுப்புக்கூறலை வலியுறுத்தியமை உள்ளிட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஊடக அறிக்கையின் உள்ளடக் கமானது கவனத்திற்குரியது.

இதுவரைகாலமும் சர்வதேச அரங்கில் பொறுப்புக் கூறலி லிருந்து சிறீலங்காவை பாதுகாத்தவர்களையும், ஒற்றையாட் சிக்கு உட்பட்ட 13 ம் திருத்தத்தினை நடைமுறைப்படுத்துமாறு கடிதங்களை எழுதி, தமிழ் தேசிய அரசியல் அபிலாசைகளை நீக்கம் செய்யும் வகையில் பெய்யான கருத்தியலை விதைத்த



தரப்புக்களையும் அம்பலப்படுத்தியிருக்கிறது.

அந்தவகையில் - பெப்ரவரி 4 ம் நாள் யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் கிளிநொச்சியில் நடத்தவுள்ள பேரணிக்கு எமது ஆதரவை தெரிவிக்கின்றோம் என கட்சியின் பேச்சாளர் சுகாஸ் கனகரட்ணம் கருத்து வெளியிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எங்கும் கறுப்புக்கொடிகள்!

பெப்ரவரி 04, 2024

இலங்கையின் சுதந்திர தினமான இன்றைய நாள் யாழ் பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.






இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சுதந்திர நாள் நிகழ்வுகள் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்று வருகின்றன.



அந்நிலையில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் பகுதிகளில் சுதந்திரம் கரி நாளாக பிரகடனப் படுத்தி கறுப்புக்கொடி கொடிகள் பறக்கவிடப்பட்டு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

# நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட செயற்பாட்டாளரிடம் சிறீலங்கா புலனாய்வுத்துறை விசாரணை!

பெப்ரவரி 02, 2024

போரில் இறந்தவர்களை நினைவுகூர்ந்தமைக்காக கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாண சிவில் சமூக ஆர்வலர் ஒருவர் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு குறித்த நினைவேந்தல் தொடர்பில் சுமார் மூன்று மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

நீதிமன்றம் தன்னை விடுதலை செய்த போதிலும், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் தம்மிடம் கேள்வி எழுப்பிய விதம் உரிமை மீறல் என விமலசேன லவகுமார் குறிப்பிட்டுள்ளார்.

“மாவீரர் தினத்தை செய்வதற்கு உங்களுக்கு அனுமதி தந்தது யார்? அனுமதி எப்படி எடுத்தீர்கள்? புலம்பெயர் மக்களிடம் இருந்து உங்களுக்கு உதவிகள் வருகிறதா? டயஸ்போராவில் யாருடன் உங்களுக்கு தொடர்பு இருக்கிறது? மாவீரர் தின நிகழ்வுக்கு ஏன் சென்றீர்கள் எனக் கேட்டார்கள்? அவர்களது முழு விசாரணையும் உரிமைகளை மறுக்கின்ற விடயங்களை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.”

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் திகதி காலை வாழைச்சேனை பொலிஸார் அவரை 27ஆம் திகதி காலை மட்டக்களப்பு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வு பிரிவுக்கு வருமாறு அறிவித்தனர்.

காலை 11 மணியளவில் அங்குச் சென்ற தம்மிடம் மதியம் இரண்டு மணி வரை விசாரணை நடத்தப்பட்டதாக விமலசேன லவகுமார் பிரதேச ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டமை தொடர்பில் பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் தன்னிடம் கேள்வி எழுப்பியதாக விமலசேன லவகுமார் கூறுகிறார்.

“முள்ளிவாய்க்காலில் கொண்டாடியதற்காக நீங்கள் கைது செய்யப்பட்டீர்கள். இது எங்கள் உரிமை என்றேன். இறந்த ஆயிரக் கணக்கான மக்களை நினைவு கூர்வது நமது கடமை என்று நான் கூறினேன். ஏன் கஞ்சி கொடுக்கிறீர்கள்? கஞ்சி கொடுக்க என்ன காரணம் என்று கேட்டார். நான் அதை விளக்கினேன்.”

யுத்தத்தின் இறுதி நாட்களில் கடற்கரையில் குறுகிய நிலப் பரப்பில் சிக்கித் தவித்த தமிழ் மக்கள், கனரக ஆயுதத் தாக்குதலுக்கு மத்தியில் மனித அடிப்படைத் தேவைகளான மருந்து, உணவு போன்றவற்றை இழந்த நிலையில், பல நாட்களாக அரிசியுடன் நீரில் சிறிதளவு உப்பிட்டு சமைத்த கஞ்சியுடன் உயிர் பிழைத்தனர்.

அந்த உணவு முள்ளிவாய்க்கால் கஞ்சியாக வரலாற்றில் இடம் பிடித்துள்ளது.

பன்னிரண்டாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி மட்டக்களப்பு கிராண் கடற்கரையில் நினைவேந்தல் நடத்தியதாக குற்றஞ்சாட்டி விமலசேன லவகுமார் உட்பட 10 பேரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

அதே வருடம் டிசம்பர் 8 ஆம் திகதி, நீதிமன்றம் விமலசேன லவகுமாரை பிணையில் விடுவித்ததுடன், சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பேரில், நீதிமன்றம் 2022 மார்ச் மாதம் குற்றச்சாட்டில் இருந்து அவரை விடுவித்ததாக அவர் கூறுகிறார்.

2023 ஒக்டோபரில், யூடியூப் தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அரச அமைச்சர் ஒருவரைப் பற்றி அவர் வெளியிட்ட கருத்தின் பின்னர், விமலசேன லவகுமாரும் அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் கும்பலிடமிருந்து



கொலை அச்சுறுத்தல்ளை எதிர்கொண்டார்.

ஒக்டோபர் 3ஆம் திகதி மட்டக்களப்பு ஊடக மையத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய விமலசேன லவகுமார், ஒக்டோபர் 2ஆம் திகதி இரவு 11.33 மணியளவில் மட்டக்களப்பு கிராண் பகுதியில் உள்ள தனது வீட்டிற்கு ஆறு பேர் கொண்ட குழுவொன்று வந்து தம்மை அச்சுறுத்தியதாக குறிப்பிட்டார்.

“தீவுச்சேனை என்னும் மறைக்கப்பட்டிருந்த விடயம். அதனை கதைப்பதற்கோ அதனை மறுபடியும் தோண்டியெடுப்பதற்கோ நீங்கள் எத்தனிக்க கூடாது. அதனை செய்திருக்க கூடாது. இன்றைய நாளில் உங்களை கொல்லவே வந்தோம். ஆனால் முதலாவதாக உங்களை எச்சரிக்கின்றோம். உங்களைப் போன்றவர்களுக்காக எமது ஆயுதங்களை பழையபடி தூசி தட்டவேண்டிய நிலைமை வந்திருக்கின்றது. மீண்டுமொரு தடவை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டால் நிச்சயமாக உங்களை போடுவோம். என்று என்னை அச்சுறுத்தினார்கள் என அவர் குறிப்பிட்டிருந்தார்.

# அடிமை சாசனத்திலிருந்து விடுபடும் வரை தமிழர்களின் உரிமைக்குரலை எவராலும் நசுக்க முடியாது!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

பெப்ரவரி 02, 2023

ஜனாதிபதி உலகத்துக்கு ஒரு ஜனநாயக குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக்கொண்டு, தமிழ் மக்களை தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைபடுத்திக்கொண்டிருக்கிறார்.

எனவே தமிழர்கள் இந்த சிங்கள தேசத்தின் அடிமை சாசனத்தில் இருந்து விடுபடும் வரை தமிழ் மக்களின் உரிமைக்குரலை எவரும் நசுக்க முடியாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் கடந்த 2022ஆம் ஆண்டு நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் கீழ் பொலிஸார் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு, நேற்று முன்தினம் (31) விசாரணைக்காக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில் ஆஜராகி சுரேஸ் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு, கிழக்கு முழுவதும் எங்கள் மக்களை பிழையாக வழிநடத்தும் செயற்பாட்டுக்கு நீதிமன்றங்களை பொலிஸார் பிழையாக வழிநடத்திக்கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் எதற்கு தடை விதிக்கவேண்டும் என தெரியாமல் உத்தரவிடப்படுகிறது. சட்டத்துக்கு முரணான விடயங்களுக்கு வடக்கு, கிழக்கில் அனுமதி கொடுக்கப்பட்டு, எங்களுடைய இறந்த உறவுகளை நினைவுகூருவதற்கு தடை உத்தரவு பிறப்பிக்கும் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கில் வருடாவருடம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

அதற்காக மாறி வருகின்ற அரசுக்கள் அவற்றின் ஆட்சியை தக்கவைப்பதற்காக அவற்றுக்கு ஏற்ற வகையில் சட்டங்களை பிறப்பித்து, தமிழ் மக்களின் ஜனநாயக உரிமை குரல்களை நசிக்கி வருகின்றன.

அதன் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க, ராஜபக்ஷ ஆட்சியை நிலை நிறுத்துவதற்காக 5 சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றில் நிகழ் நிரல் சட்டம் பிரதானமானது. அது தமிழ் மக்களின் குரலை நசிக்கும் சட்டமாக இருக்கின்றது.

இந்த ஜனாதிபதி உலகத்துக்கு ஒரு ஜனநாயக குரலையும் நல்லிணக்கத்தையும் காட்டிக்கொண்டு வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை தனது சப்பாத்து காலால் மிதித்து அடிமைபடுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை எங்கள் மக்களும் சர்வதேசமும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

காசா மீது இசுரவேல் நடத்தி வரும் இனப் படுகொலையை உடன் நிறுத்தவேண்டும் என தென் ஆபிரிக்க சர்வதேச நீதிமன்றில் கோர, அந்த அறிக்கையை ரணில் ஆதரிக்கிறார் என்றால் இவரின் இரட்டை வேடம் சர்வதேச மட்டத்தில் எந்தளவுக்கு இருக்கிறது என்பதை மக்களும் புத்திஜீவிகளும் உணர்ந்



துகொள்ள வேண்டும்.

ஆகவே, இந்த சட்டங்கள் எல்லாம் பிறப்பிக்கப்படுவது, இந்த ஆட்சியையும் அரசையும் தக்கவைப்பதற்காகவே.

1948இல் இந்த நாட்டில் இருந்து ஆங்கிலேயர்கள் வெளியேறிய பின்னர், சிங்கள ஆட்சியாளர்களிடம் இந்த அதிகாரம் போன பின்னர், சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர்களை தொடர்ந்து அடிமைகளாக அடிமைப்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

எனவே, தமிழர்கள் இந்த தீவில் இருந்து அடிமை சாசனத்தில் இருந்து விடுபடும் வரை தமிழ் மக்களின் உரிமைக்குரலை எவரும் நசுக்க முடியாது என்பதுடன் எந்த விதமான தடைகள் வந்தாலும் தொடர்ந்து பயணிப்போம் என்றார்.

# இலங்கையின் கரி நாள் போராட்டம் கிளிநொச்சியில் பல்கலைக்கழக மாணவர்கள் நால்வர் கைது!

பெப்ரவரி 04, 2023

இலங்கையின் சுதந்திரதினத்தை கரிநாளாக பிரகடனப்படுத்தி கிளிநொச்சியில் பல்கலைகழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துவரும் அதேவேளை நான்கு மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறீலங்காப் பொலிஸாரின் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட மாணவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடு சந்தியிலிருந்து யாழ்பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் போராட்டம் இன்று ஆரம்பமானது.





# அம்பாறையில் கரி நாள் போராட்டம்!

பெப்ரவரி 04, 2023

இலங்கையின் 76வது சுதந்திர தினம் இன்றைய தினம் (04) அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அம்பாறையில் கறுப்பு நாள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இன்றைய நாளை கறுப்பு நாளாக முன்னேடுக்கக் கோரி வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினர், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் அழைப்பு விடுத்தன. அதன் அடிப்படையிலேயே இந்த கறுப்பு நாள் போராட்டம் இடம்பெறுகிறது.






இந்த போராட்டத்தில் சிவில் சமூக அமைப்பினர், காணாமல் ஆக்கப்பட்டவர்களது உறவுகள், பொதுமக்கள், தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் என்பன இணைந்து பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.







# ஈகையர் திருமலை நடராஜன் அவர்களின் 67வது வருட நினைவேந்தல்!

பெப்ரவரி 04, 2023

இலங்கையின் தேசிய இனமான தமிழினம், சுதந்திரம் மறுக் கப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டு இரண்டாந்தர பிரஜைகளாக் கப்பட்டு வாழும் நிலையை வெளிக்கொணரும் வகையில், தமிழர் தாயகத்தின் தலைநகராம் திருகோணமலை நகரில் 04.02.1957 அன்று கறுப்புக் கொடியேற்ற முனைந்த வேளை யில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகிய வீரத்தமிழ்ப் பொது மகன் தியாகி நடராஜனுக்கு (வயது 22) வீர வணக்க நினைவேந்தல்.





# யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக கரிநாள் போராட்டம்!





# கிளிநொச்சியில் கரிநாள் போராட்டம்!



































# முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக கரிநாள் போராட்டம்!








# யாழ். வட்டுக்கோட்டையில் சிறீலங்கா பொலிசாரினால் யாழ். பல்கலைக்கழக மாணவன் சித்திரவதை; மனிதவுரிமை ஆணைக்குவிடம் முறைப்பாடு!

பெப்ரவரி 05, 2024




யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை சிறீலங்கா பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறையில் வைத்து, தன்னை தலைகீழாக தூக்கி, அடித்து சித்திரவதைக்கு உள்ளாகியுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மாணவன் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தில் , பல்கலைக்கழக மாணவனான கருணாகரன் நிதர்சன் எனும் மாணவன் இன்றைய நாள் திங்கட்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட மாணவன் தெரிவிக்கையில் ,

வட்டுக்கோட்டை மாவடி பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் தன்னை வழிமறித்து, தான் மறிக்கும் போது ஏன் மோட்டார் சைக்கிளை நிறுத்தவில்லை என என்னுடன் முரண்பட்டார்.

அதற்கு நான் நீங்கள் மறித்ததை கவனிக்கவில்லை. என கூறி, ஆவணங்கள் அனைத்தும் என்னிடம் உள்ளன, என அவற்றை எடுத்து கொடுத்த போது, அதனை வாங்காது, மேலதிக பொலிஸார் அவ்விடத்திற்கு வரவழைத்தார்.

அதன் போது, சிவில் உடையில் வந்த 7க்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், எவ்வித விசாரணைகளும் இன்றி, என்னை வீதியில் வைத்து, மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கும் போதே கடுமையாக தாக்கினார்கள். என்னை தாக்கும் சம்பவம் அருகில் உள்ள கடையில் கண்காணிப்பு கமராக்களில் கூட பதிவாகியுள்ளது. அத்துடன் நானும் எனது கைபேசியில் என்னை தாக்குவதனை காணொளி எடுத்தேன்.

பின்னர் என்னை பொலிஸ் வாகனத்தில் ஏற்றி சென்று, பொலிஸ் நிலையத்தில் உள்ள இரகசிய அறைக்குள் என்னை அழைத்து சென்று என்னுடைய ஆவணங்கள், மற்றும் கைபேசி என்பவற்றை பறித்தார்கள்.

கைபேசியின் இரகசிய குறியீட்டை கேட்ட போது, அதனை தர முடியாது என மறுத்த போது, என் கால்களை பிடித்து தலை கீழாக தூக்கி கடுமையாக தாக்கினார்கள்.

என் ஆணுறுப்பை குறிவைத்தும் கடுமையாக தாக்கினார்கள். இதனால் எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. வியர்க்க தொடங்கியது.

அதனை அடுத்து என்னை அறையில் இருந்து, வெளியே அழைத்து வந்து, கதிரையில் அமர வைத்து விட்டு சென்று விட்டார்கள்.

பின்னர் நான் பொலிஸ் நிலையத்தில் இருந்து வெளியேறி வந்தேன். என்னை பொலிசாரின் இரகசிய அறைக்குள் அழைத்து சென்றதனை, பொலிஸ் நிலைய தடுப்பு காவலில் நேற்றைய தினம் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவர் கண்டார்கள்.

அறைக்குள் வைத்து, அடிக்கும் போது, நான் எழுப்பிய அவலக் குரல் அவர்களுக்கும் கேட்டு இருக்கும். அடித்த பின்னர் என்னை கைத்தாங்கலாக பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அழைத்து வந்து கதிரையில் அமர வைத்ததையும் தடுப்பு காவலில் தடுத்து வைக்கப்பட்டு இருந்த மூவரும் நேரில் கண்டார்கள்.

எவ்வித குற்றமும் இழைக்காத என்னை சிவில் உடை தரித்த பொலிசார் மூர்க்கத்தனமாக தாக்கி சித்திரவதைக்கு உள்ளாக்கியுள்ளனர். என்னை கொலை செய்யும் நோக்குடன் என் ஆணுறுப்பை குறித்து வைத்தும் தாக்கினார்கள்.

இந்நிலையில் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு உள்ளமையால் இன்றைய தினம் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளேன் என தெரிவித்தார்.

இதேவேளை, வட்டுக்கோட்டை பொலிசாரினால், கடுமை யான சித்திரவதைக்கு உள்ளான நகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் கடந்த நவம்பர் மாதம் 19ஆம் திகதி உயிரிழந்துள்ளார்.

குறித்த உயிரிழப்பானது ஆட்கொலையே என யாழ்.நீதவான் நீதிமன்றம் மரண விசாரணை கட்டளையில் குறிப்பிட்டுள்ளது

இளைஞனின் கொலை தொடர்பில் நேரடி சாட்சியான , இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன், சித்திரவதைக்கு தம்மை உள்ளாக்கியவர்கள் ஐவர் என அடையாளம் கூறிய போதிலும், பொலிசார் நால்வரையே கைது செய்து மன்றில் முற்படுத்தி வழக்கு விசாரணைகளை முன்னெடுத்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த வாரம், சுன்னாகம் பொலிசாரினால் திருட்டு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவரை சுன்னாகம் பொலிசார் கடுமையாக தாக்கி சித்திரவதைக்கு உள்ளாகிய நிலையில், கைதான இளைஞன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று இருந்தார்.

அச்சுவேலி பொலிசாரினால் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது, விசாரணைக்கு செல்லாத இளைஞனை அச்சுவேலி பொலிசார் வீதியில் வழிமறித்து கடுமையாக தாக்கியமையால் , இளைஞன் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார்.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பில் ஏற்கனவே மனிதவுரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில் தற்போது வட்டுக்கோட்டை பொலிசாரினால் தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை கிளிநொச்சியில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பேரணியில் பொலிசார் மாணவர்கள் , நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது என்பதை தெரிவித் துக்கொள்கின்றேன் என்றார்.

# ஐந்தம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு யாழில் மீனவ அமைப்புக்கள் போர்க்கொடி!

பெப்ரவரி 09, 2024

அரச அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவ அமைப்புக்களை தனது கைகளுள் முடக்கிவிட முற்பட்டுள்ள போதும் உரிமை களிற்காக மீனவ அமைப்புக்கள் மீண்டும் கூட்டாக செயற்பட முன்வந்துள்ளன.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் ஐந்தம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி கடற்றொழிலாளர்கள் கவனயீர்ப்பு பேரணியில் இன்று ஈடுபட்டனர்.

இன்று (09) யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன் ஆரம்ப மான பேரணி வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் வரை சென்றிருந்தது.

பின்னர், ஆளுநர் ஊடாக ஜனாதிபதியிடம் கையளிப்பதற்கு ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று ஆளுநரின் பிரதிச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டிருந்தது.

இலங்கை அரசினால் புதிதாக உருவாக்கப்பட்ட கடற்றொழி லாளர் சட்ட வரைபை நிராகரித்தல், வெளிநாட்டு மீன்கள் இறக்குமதி செய்தலை நிறுத்தல்.

வெளிநாட்டு படகுகளுக்கு இலங்கை கடலில் கடற்றொழிலை மேற்றெகொள்ள அனுமதி வழங்கக்கூடாது.

வெளிநாட்டு படகுகளால் இலங்கை கடற்றொழிலாளர் களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நஸ்ட ஈடு வழங்கக் கோரல்.

கடற்றொழிலாளர்களுக்கான வரவு-செலவு திட்டத்தை மீள் பரிசீலிக்க கோரல் என்பனவற்றினை முன்னிறுத்தியே போராட்டம் முன்னெடுக்கபப்ட்டிருந்தது.

கவனயீர்ப்பு பேரணியின் போது ஊர்காவற்றுறை கடற்றொழில் சமாசத்தின் செயலாளர் அ.அன்னராசா, கிளிநொச்சி மாவட்ட




சமாச தலைவர் ஜோசப் பிரான்ஸிஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாச தலைவர் எம்.தணிகாசலம், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சமாச தலைவர் ராஜா குருஸ், மன்னார் மாவட்ட பிரதேச சமாச தலைவர் ஜே.ஜோகராஜ் மற்றும் கடற்றொழிலாளர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கெடுத்திருந்தனர்.

# பாரதியார் பாடலைப்பாடி 'ஒற்றுமை' வகுப்பெடுக்கும் ரணில்; பாரததேசத்தைப்போன்று முழுமையாக அதிகாரங்களை பகிர்ந்தளிக்க முடியுமா?

## முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

பெப்ரவரி 09, 2024

பாரதியாரின் பாடலைப்பாடி ஒற்றுமை பற்றி வகுப்பெடும் அரச தலைவர் ரணில் விக்ரமசிங்கவால் பாரததேசத்தைப்போன்று முழுமையாக அதிகாரங்களை பகிர்ந்தளிக்க முடியுமா? என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ்பேசும் சிறு பான்மைச்சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்காது, பெரும்பாண்மையின ஆட்சி யாளர்கள் தொடர்ந்து தமிழ்பேசும் மக்களுக்குத் துரொக மிழைத்துவருவதாகவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின், ஐந்தாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வில் அரசதலைவர் ரணில் விக்ரமசிங்க ஆற்றிய கொள்கைவிளக்கவுரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஒன்பதாவது பாராளுமன்றத்தின், ஐந்தாவது கூட்டத்தொடரின் ஆரம்ப நிகழ்வில் அரசதலைவர் ரணில் விக்ரமசிங்க கொள்கை விளக்கவுரையாற்றியிருந்தார்.

அரசதலைவர் குறித்த தனது கொள்கைவிளக்கவுரையிலே நாட்டைக் கட்டியெழுப்பும் கனவை நனவாக்க தமிழ், முஸ்லிம் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட அழைப்பு விடுத்திருந்தார்.

அதேவேளை ஒற்றுமையை வெளிப்படுத்தும் பாரதியார் பாடல் வரிகளையும் குறிப்பிட்டு, அவ்வாறான எண்ணம் எமக்கு ஏன் வரவில்லை எனவும், எமது நாட்டு இளைய சமூகத்தின் எதிர் காலத்திற்காக ஒன்று படமுடியாதிருப்பது ஏன்? எனவும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்.

தேர்தல் ஒன்று நெருங்கிவருகின்ற சூழலில்தான், அரச தலைவர் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகளினதும், மக்களதும் ஒற்றுமையைப் பற்றிப் பேசுகின்றார். அரசதலைவரின் இத் தகைய பேச்சுக்கள் மிகவும் வேடிக்கையாகவுள்ளது.

குறிப்பாக அரசதலைவர் தனது உரையிலே,

"முப்பதுகோடி முகமுடையாள்-உயிர்

மொய்ப்புற வொன்றுடையாள்-இவள்

செப்பு மொழிபதினெட்டுடையாள்-எனிற்

சிந்தனை ஒன்றுடையாள்"

இவ்வாறு ஒற்றுமையை வெளிப்படுத்தும் பாரதியார் பாடல் வரிகளையே தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

பாரததேசம் முப்பதுகோடி மக்களைக்கொண்டிருந்தாலும் அதன் உயிர் ஒன்றுதான், பாரதநாட்டில் பதினெட்டு மொழிகள் இருந் தாலும் அவை வெளிப்படுத்தும் சிந்தனை ஒன்றுதான் என்பதே அந்த பாரதியாரின் பாடல்வரிகளின் பொருளாகும்.

உண்மையில் பாரதத்தைப் பொறுத்தவரையில் அங்கு பல்வேறு மொழிகளைப்பேசுகின்ற, பல்வேறு இன மக்கள் வாழ்ந்தாலும் அங்கு மிகச் சரியான விதத்திலே அதிகாரங்கள் பகிர்ந்துகொடுக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக காணி, பொலிஸ் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அதி காரங்கள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

எனவே பாரதத்தில் வாழ்கின்ற வெவ்வேறு மொழிகளைப் பேசு கின்ற, வெவ்வேறு இன மக்கள் தமக்கான பூரண அதிகாரங் களுடன் அவர்களுடைய மாநிலங்களில், அவர்களுக்குரித் தான கலை, கலாச்சார, பண்பாட்டு, வாழ்வியல் அம்சங்களுடன் மிகவும் மகிழ்ச்சியாக வாழ முடிகின்றது.

இத்தகைய அதிகாரப்பகிர்வால்தான் அவர்கள் இந்தியர்களாக ஒருமித்து ஒற்றுமையாக வாழ முடிகின்றது.

அத்தகைய ஒற்றுமையால்தான் பொருளாதார நிலையிலும், அறிவியல், விஞ்ஞானம், படைக்கட்டுமானம், விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் இந்தியா தற்போது மேம் பட்டு நிற்கின்றது.

இவ்வாறு இந்தியாவில் மாநிலங்களுக்கு முழுமையாக அதி காரங்கள் பகிரப்பட்டிருப்பதைப்போல், இங்கு இலங்கையிலும் மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரங்கள் பகிர்ந்தளிக் கப்பட்டுள்ளதா?

அவ்வாறு அதிகாரங்கள் பகிர்ந்துகொடுக்கப்படும் எண்ணங்கள் உரியவர்களுக்கு ஏற்படாதவரையில், நாட்டுக்காக ஒன்றுபடும் எண்ணங்கள் இனங்களுக்கிடையில் எவ்வாறு ஏற்படும்?

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ், சிங்களம் என இருவேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள் வாழ்கின்றனர்.

இவ்வாறு இருமொழிகளைப் பேசுகிறமக்கள் இந்த நாட்டில் வாழ்கின்றார்கள், சகலருக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப் படவேண்டும் என்ற எண்ணம் ஆட்சியாளர்களுக்கும், பெரும் பான்மை இனத்தவர்களுக்கும் வரும்போதுதான், பாரதியார் தனது பாடல்வரிகளில் குறிப்பிட்டிருப்பதைப்போல இந்தநாடு இருமொழிபேசுகின்ற மக்கள்கூட்டத்தைக்கொண்டிருந்தாலும் இந்நாட்டின் உயிரும், சிந்தனையும் ஒன்றாக இருக்கும்.

அரசதலைவர் முதலில் இந்த நாட்டில் சிறுபான்மையாக வாழ் கின்ற தமிழ்பேசும் மக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை வழங்கவேண்டும்.

தமிழ்பேசும் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய காணி, பொலிஸ் உள்ளிட்ட முக்கிய அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிர்ந் தளிக்கப்படவேண்டும்.

அவ்வாறு இந்தநாட்டில் அதிகாரங்கள் பரவலாக்கப்படுகின் றபோதுதான் நாட்டுமக்களிடையே ஐக்கியத்தைப் பேண முடியும்.

எனவே மாற்றமென்பது இங்கு வாழ்கின்ற தமிழ்பேசும் சிறு பான்மை மக்களின் மனங்களிலிருந்து வரவேண்டியதல்ல. இங்குள்ள பெரும்பான்மையின மக்களிடமிருந்தும், ஆட்சி யாளர்களிடமிருந்துமே நாம் மாற்றங்களை எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக் கூடாது என்கிற குறுகிய மனப்பாங்கிலிருந்து முதலில் ஆட்சி யாளர்களும், பெரும்பாண்மையினத்தவர்களும் மாற வேண்டும்.



அத்தகைய மாறுதல்தான் இந்தநாட்டில் இன ஐக்கியத்தை ஏற் படுத்தி, இந்த நாட்டில் பொருளாதாரத்தை முன்னேற்ற வழி வகுக்கும்.

அரசததலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது பாரதியார் பாடலைப் பாடுகிறார் என்பது முக்கியமல்ல, இதைவிட எம் மாலும் மிகச்சிறப்பாக பாரதியார் பாடல்களைப் பாடிக்காட்ட முடியும்.

ஆகவே அரசதலைவர் ரணில் பாரததேசத்தில் இருப்பதைப் போன்று இலங்கையிலும் அதிகாரங்களைப் பரவலாக்க முன்வரவேண்டும். அதுவே மிகமுக்கியமானதாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தொடர்ச்சியாக தமிழ் பேசும் சிறுபான்மைச் சமூகத்திற்கு முழுமையான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு எந்த ஆட்சியாளர்களும் முன்வர வில்லை. தொடர்ந்து மாறி மாறி வருகின்ற ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் சிறுபான்மைச் சமூகத்திற்கு துரோகமிழைத்து வருகின்ற வரலாற்றையே காண்கின்றோம்.

அத்தகைய அரசியலை தொடர்ந்தும் முன்னெடுத்து தமிழ்பேசும் மக்களுக்கு அரசதலைவர் ரணில் துரோகமிழைக்கப்போகின் றாரா, அல்லது பாரதியாரின் பாடல் வரிகளுக்கு செயல்வடிவம் கொடுக்கப்போகின்றாரா என்பதை அவரே தீர்மானிக் கவேண்டும்.

வெறுமனே வார்த்தைகளால் ஒற்றுமைக்கான அழைப்பை விடுப்பதன்மூலம் இந்தநாட்டில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டுவிடாது என்றார்.

# வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் நோக்கி தமிழ் மீனவர்கள் பேரணி!

பெப்ரவரி 10, 2024

ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு கோரி மீன வர்கள் யாழ்ப்பாணத்தில் நேற்று கவனயீர்ப்பு பேரணியை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன் ஆரம்பமான குறித்த பேரணி வடக்கு மாகாணத்துக்கான சிறீலங்கா ஆளுநர் செய லகம் வரை சென்றது. பின்னர், ஆளுநர் ஊடாக சிறீலங்கா ஜனாதிபதியிடம் கையளிப் பதற்கு ஐந்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜரொன்று ஆளுநரின் பிரதிச் செயலாளரிடம் கையளிக்கப்பட்டது.






அந்த மகஜரில் உள்ளடக்கப்பட்டுள்ள ஐந்து அம்சக் கோரிக் கைகளாவன :

1. புதிதாக உருவாக்கப்பட்ட மீனவர் சட்ட வரைபை நிராகரித்தல்

2. வெளிநாட்டு மீன்கள் இறக்குமதி செய்தலை நிறுத்தல்

3. வெளிநாட்டு படகுகளுக்கு இலங்கை கடலில் மீன்பிடிக்க அனுமதி வழங்கக் கூடாது.

4. வெளிநாட்டு படகுகளில் இலங்கை மீனவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு நஷ்ட ஈடு வழங்க கோரல்

5. கடற்றொழிலாளர்களுக்கான வரவு-செலவு திட்டத்தை மீள்பரிசீலிக்க கோரல் – என்பனவாகும்.

இந்த கவனயீர்ப்பு பேரணியின்போது ஊர்காவற்றுறை கடற் றொழில் சமாசத்தின் செயலாளர் அ.அன்னராசா, கிளிநொச்சி மாவட்ட சமாச தலைவர் ஜோசப் பிரான்ஸிஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாச தலைவர் எம்.தணிகாசலம், மன்னார் மாவட்ட கடற்றொழிலாளர் சமாச தலைவர் ராஜா குருஸ், மன்னார் மாவட்ட பிரதேச சமாச தலைவர் ஜே.ஜோக ராஜ் மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட் டோர் கலந்துகொண்டனர்.

# மாமனிதர் சந்திர நேருவின் 19ஆம் ஆண்டு நினைவேந்தல்!

பெப்ரவரி 08, 2024

பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அரிய நாயகம் சந்திர நேருவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.




அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் தமிழ் தேசிய கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் அரிய நாயகம் சந்திர நேருவின் 19ம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வியாழக்கிழமை (8) நடைபெற்றது.



இதன் போது பெரிய நீலாவணை, மற்றும் பாண்டிருப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர் புஸ்பாராஜ் துஷானந்தன் தலைமையில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத் தினர்

அரியநாயகம் சந்திரநேரு அம்பாறை மாவட்டம், திருக் கோவிலைச் சேர்ந்தவர்.இவரது தந்தை “அறப்போர்” கே. ஏ. டபிள்யூ. அரியநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தீவிர ஆதரவாளர். புரட்டஸ்தாந்துக் கிறித்தவர்.

சந்திரநேரு ஆரம்பத்தில் கல்பிட்டி மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றினார். பின்னர் அரச சேவையில் இருந்து விலகி மாலைதீவுக் கப்பல் ஒன்றில் இரண்டாம் அதிகாரியாகப் பணி யில் சேர்ந்தார்.

ஆறு ஆண்டுகளில் கப்பல் காப்டனாக பதவி உயர்வு பெற்றார். பல ஆண்டுகள் மாலைதீவுக் கப்பலில் பணியாற்றினார். இக் காலத்தில் சிங்களப் பெண் ஒருவரைத் திருமணம் புரிந்தார்.

எண்பதுகளின் நடுப்பகுதியில் விடுமுறையில் நாடு திரும்பிய போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பூசா தடுப்பு முகாமில் ஓராண்டுக்கும் மேலாகத் தடுத்து வைக்கப்பட்டார்.

சிறை வாழ்க்கை அவரை தமிழ்த் தேசியத்தின் பால் ஈர்த்தது. ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளிக்க ஆரம்பித்தார்.

1990களில் இறுதியில் பணியில் இருந்து ஓய்வு பெற்று திருக் கோவில் திரும்பினார். அங்கு அவர் பல கடைகளைக் கொல் வனவு செய்து தொழிலதிபரானார்.




2001 நாடாளுமன்றத் தேர்தலில் சந்திரநேரு அம்பாறை மாவட் டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளராகப் போட்டி யிட்டு 26,282 விருப்பு வாக்குகள் பெற்று வெற்றி பெற்று நாடாளுமன்றம் சென்றார்.

2004 தேர்தலில் போட்டியிட்டு 25,572 விருப்பு வாக்குகள் பெற்றுத் தோல்வியடைந்தார்

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையே அமைதி ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த காலகட்டத்தில், 2005 பெப்ரவரி 7 அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப் பின் மட்டக்களப்பு-அம்பாறை அரசியல் பொறுப்பாளர் இ. கௌசல்யனுடன் சந்திரநேரு பயணம் செய்த போது இவர்கள் சென்ற வாகனம் பொலன்னறுவை மாவட்டத்தில் தாக்குதலுக் குள்ளானதில் கௌசல்யன், மற்றும் மேஜர் புகழன் (சிவலிங்கம் சுரேஷ்), மேஜர் செந்தமிழன் (தம்பிராசா கந்தசாமி), 2ம் லெப். விதிமாறன் (சிவபாதம் மதன்) ஆகிய மூன்று விடுதலைப் புலிகள், ஊர்தி ஓட்டுனர் விவேகானந் தமூர்த்தி ஆகியோர் கொல்லப் பட்டனர்.




படுகாயமடைந்து பொலன்னறுவை மருத்துவமனையில் அனு மதிக்கப் பட்ட சந்திரநேரு அடுத்த நாள் பெப்ரவரி 8 காலையில் உயி ரிழந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்பு சந்திரநேருவிற்கு “நாட்டுப்பற் றாளர் விருது”, மற்றும் “மாமனிதர்” விருதுகளை வழங்கிக் கௌரவித்தது.

19, வருடங்கள் கடந்தும் அவர் களின் கொலைக்கான நீதி இது வரை கிடைக்கவில்லை.

# வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேசுவரர் ஆலயத்திற்குள் சப்பாத்துக கால்களுடன் சென்ற ஆக்கிரமிப்புப்படை!

பெப்ரவரி 11, 2024

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பௌத்தபிக்குகள் தலைமையிலான குழு ஒன்று இன்றைய நாள் ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்திருந்தனர்.







இராணுவத்தின் பாதுகாப்புடன் குறித்த குழுவினர் அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது ஆலயத்தின் நிர்வாகத்தினரும் அங்கு பிரசன்னமாகியிந்தனர்.



இது தங்களது இடம் என குறித்த குழுவால் தெரிவிக்கப்பட்ட நிலையில், அதனை மறுத்த ஆலய நிர்வாகத்தினர் இது தமது மூதாதையர்களால் பூர்விகமாக வழிபடப்பட்டு வந்த பிரதேசம் என தெரிவித்திருந்ததாக தெரியவருகின்றது.



# கிளிவெட்டி – குமாரபுரம் படுகொலையின் 28வது ஆண்டு நினைவேந்தல்!

பெப்ரவரி 11, 2023

கிளிவெட்டி - குமாரபுரம் படுகொலையின் 28வது ஆண்டு நினைவுநாள் இன்று ஞாயிற்றுக்கிழமை (11) குமாரபுரத்தில் உணர்வுபூர்வமாக நினைவுகூறப்பட்டது.

இதன்போது பொதுமக்கள் உயிரிழந்தவர்களின் புகைப்படங்களுக்கு மலர் தூவி, விளக்கேற்றி வணக்கம் செலுத்தினர்.

நினைவேந்தலில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் க.லவகுசராசா, தவத்திரு வேலன் சுவாமிகள் உட்பட பொது மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

1996ஆம் ஆண்டு பெப்ரவரி 11ஆம் திகதி மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி – குமாரபுரம் கிராமத்தில் அத்துமீறி நுழைந்த ஆயுததாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வாள்வெட்டு தாக்குதலில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்தோடு, 15 வயது சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமையும் இடம்பெற்றது.

இப்படுகொலை சம்பவம் தொடர்பாக 1996ஆம் ஆண்டு மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெகிவத்தை இராணுவ முகாமில் சேவையில் இருந்த 8 இராணுவ வீரர்கள் சாட்சியாளர்களினால் அடையாளம் காணப்பட்டு, அவர்களுக்கு எதிராக குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

பின்னர், இவ்வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது.

அடுத்து, இந்த வழக்கு அனுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது.

இது தொடர்பான வழக்கு விசாரணை ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில், 20 ஆண்டுகளுக்குப் பின்னர் 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27ஆம் திகதி எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவ வீரர்களும் (பிணையில் இருந்தபோது இருவர் இறந்துவிட்டனர்) அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டதுடன், அனைத்து குற்றச்சாட்டுக்களில் இருந்தும் விடுவிக்கப்பட்டனர்.

இந்த படுகொலைச் சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட உறவுகள் 28 ஆண்டுகளாக தமக்கு கிடைக்கப்பெறாத நீதியினை கோரி வருகின்றனர்.

இந்த இனப்படுகொலையால் பாதிப்புக்குள்ளான மக்கள், துயரிலிருந்து மீள முடியாமலும், பொருளாதார ரீதியில் மிகுந்த சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றமையும் பெரும் பிரச்சினையாக காணப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தில் உயிரிழந்தோர்:

சுப்பையா சேதுராசா
அழகுதுரை பரமேஸ்வரி
அருமைத்துரை வள்ளிப்பிள்ளை
கிட்ணன் கோவிந்தன்
அருணாசலம் தங்கவேல்
செல்லத்துரை பாக்கியராசா
வடிவேல் நடராசா
இராஜேந்திரம் கருணாகரம்
சண்முகநாதன் நிதாந்தன்
இராமஜெயம் கமலேஸ்வரன்
கந்தப்போடி கமலாதேவி
சிவக்கொழுந்து சின்னத்துரை
சிவபாக்கியம் நிசாந்தன்
பாக்கியராசா வசந்தினி
அமிர்தலிங்கம் ரஜனிகாந்தி
தங்கவேல் கலாதேவி
ஸ் ரீபன் பத்துமா
சுந்தரலிங்கம் பிரபாகரன்
சுந்தரலிங்கம் சுபாஜினி
கனகராசா சுவாதிராசா
சுப்பிரமணியம் பாக்கியம்
விநாயகமூர்த்தி சுதாகரன்
ஆனந்தன் அன்னம்மா









விஜயகாந் லெட்சுமி
அருமைத்துரை தனலெட்சுமி உள்ளிட்ட 26 பேர் உயிரிழந்தவர்கள் ஆவர்

# வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

பெப்ரவரி 12, 2024

பெரும்பான்மை தேசத்தில் கரைந்து செல்லும் கிழக்கை பாது காக்க கிழக்குடன் வடக்கு இணைக்கப்பட வேண்டும் அதற்கு மக்கள் விழிப்படைய வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்



தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கல்லடியிலுள்ள ஊடக கற்கை வளநிலையத்தில் நேற்று (11.02.2024) இடம்பெற்ற ஊடக மாநாட்டிலே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில், தமிழ் மக்களின் போரட்டம் கருணா, பிள்ளையானின் உச்சகட்ட பிரதேசவாதம் ஊடாக அழிக்கப்பட்டது. அவ்வாறு மீண்டும் பிரதேசவாதம் ஊடாக வடக்கு கிழக்க தமிழ் மக்களை அழித்து ஒழிப்பதற்காக செயற்பட்டுவரும் நாடாளுமன்ற உறுப் பினர்களின் போலி முகங்களை மக்கள் இனங்கண்டு ஒரங்கட்ட வேண்டும்.

கடந்த காலங்களில் இந்திய ஒப்பந்தம் மூலம் கொண்டுவரப்பட்ட வடகிழக்கு இணைப்புக்கு எதிராக ஜே.வி.பி நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து அந்த இணைந்த வடகிழக்கு இணைப்பை பிரித்தது இந்திய அரசாங்கத்திற்கு எதிரான செயற்பாட்டையும் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பட்டுக் கொண்டிருந்த ஜே.வி.பி கட்சி அனுரகுமார திஸாநாயக்கவை இந்தியா அழைத்துள்ளனர்.

1970ஆம் ஆண்டு பகுதியில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்து இந்தியா தமிழ் இளைஞர்களை அழைத்து அவர்களுக்கு ஆயுத பயிற்சியளித்து ஆயுதங்களை கொடுத்து ஆதரவு செய்துவந்தது.

இந்த நிலையில் தமிழ் மக்கள் உரிமை சார்ந்த விடயங்களில் இருந்த இயக்கங்களில் விடுதலைப் புலிகள் கடைசிவரை உறுதி யாக இருந்துவந்தனர். இந்த நிலையில் விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு ஒத்தாசை வழங்கி தமிழ் மக்களின் ஆயுத போராட்டத்தை மௌனிக்க செய்தனர்.

இருந்தும் இந்த போராட்டம் மௌனிக்கப்பட்டு 14 வருடம் கடந்தும் தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை எட்டாது மாறாக முன்னால் கிளர்ச்சி படையான ஜே.வி.பியை அழைத்து சந்தித்தமை தமிழ் மக்களுக்கு பெரும் கவலையளித்துள்ளது.

இந்தியா தமிழ் மக்கள் மீது ஒரு துளி கூட அக்கறையில்லாது தன்னுடைய பிராந்திய நலனுக்கு மாத்திரம் தமிழ் மக்களை பகடைக்காயாக பயன்படுத்தி கொண்டு வருகின்றமை இதில் இருந்து தெட்டதெளிவாக தெரிகின்றது.

எனவே இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றவேண்டும் வட கிழக்கு மக்கள் தான் இந்தியாவுக்கு எப்போதும் உறுதுணை யாக இருப்பார்கள் இந்தியாவை தமிழ் மக்கள் நேசிக்கின்றனர்.

இருந்தும் ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட் பின்னர் கூட விடுதலைப் புலிகளின் தடையை நீக்காமல் தங்களுக்கு எதிராக செயற்பட்டவர்களை மாத்திரம் அழைத்திருப்பது ஒரு வேடிக்கை யானது ஜனாதிபதி 9ஆவது நாடாளுமன்ற 5 ஆம் கூட்டத் தொடரில் பொருளாதார நெருக்கடிக்கு அரசியல் தீர்வு அவசியம் அல்ல என தெரிவித்தார்.

அது தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சுமந்திரன், சி. சிறீதரன் தெரிவித்தகருத்துக்கள் வேடிக்கையானது என்றனர்.

ஆனால் உண்மையில் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் நகைப்புக்குரியது கடந்த 2015 நல்லாட்சி காலத்தில் மைத்திரிபாலவும் தற் போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு கண்ணை மூடிக் கொண்டு எந்த விதமான நிபந் தனையும் செய்யாது தெருத் தெருவாக துண்டுபிரசுரங்களை வழங்கி ஆதரித்து ஆட்சிக்கு கொண்டுவந்தனர்.




இவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த நிலையில் எம்.சுமந்திரன் அப்போது பிரதமர் போல இருந்தார். ஆனால் தமிழ் மக்களுக் குரிய அடிப்படை பிரச்சினையை கூட தீர்க்கவில்லை அவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றுயதுடன் தொடர்ந்து பின்கதவால் வந்த ஜனாதிபதியின் வரலாறு தெரிந்தும் அவருக்கு ஒரு சர்வதேச ரீதியில் ஒரு அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்துள்ளனர்.

ஆனால் இன்று ஜனாதிபதியின் உரையை பார்த்து இன்று நீதி கேட்பதாக நீலீக்கண்ணீர் வடித்து மீண்டும் மக்களை ஏமாற் றும் நாடகத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே ஜனாதிபதியின் கடந்த கால செயற்பாடு தொடர்பாக தமிழ் மக்கள் மிக விழிப்பாக இருக்கின்றதுடன் தமிழ் மக்களை அழித்து ஒழித்துவரும் ஒவ்வொரு சந்தர்பங்களையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி வெளிபடுத்தி வருகின்றது என தெரிவித்துள்ளார்.

# யாழ். பலாலியில் காணி சுவீகரிப்பு முயற்சி; மக்களின் போராட்டத்தால் கைவிடப்பட்டது!

பெப்ரவரி 12, 2023

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கில் மக்களின் வாழ்விடங் களில் இருந்து 500 ஏக்கரை சுவீகரிக்கும் நோக்குடன் அளவீட்டு பணிகளை முன்னெடுக்க எடுக்கப்பட்ட முயற்சி இன்றைய நாள் திங்கட்கிழமை அப்பகுதி மக்களின் போராட்டத் தால் கைவிடப்பட்டது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய அபிவிருத்தி என்னும் பெயரில் மேலும் 500 ஏக்கர் நிலத்தைச் சுவீகரித்துத் தருமாறு விமான போக்குவரத்து அதிகார சபை கோரிக்கை விடுத்தது எனக் கூறியே இந்த முயற்சி இடம்பெற்றது.

இதற்குத் தாம் ஏற்கனவே கடும் எதிர்ப்பை வெளியிட்டு அவசர சந்திப்புக்கு மாவட்ட செயலருக்கு எழுத்தில் கடிதம் வழங்கிய போதும் அவர் வாய்மூடி மௌனியாக இருக்கின்றார் என்றும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இந்நிலையில், இன்றைய நாள் குரும்பசிட்டி, வசாவிளான், கட்டுவன், கட்டுவன் மேற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிரா மங்களை உள்ளடக்கிய வகையில் 500 ஏக்கரை சுவீகரிக்கும் வகையில் இரகசியமாக நிலங்களை அளவிடும் முயற்சி



இடம்பெறுகின்றது என அறிந்து அப்பகுதியில் குவிந்த மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டு தமது நிலங்களை அளவீடு செய்ய அனுமதிக்க முடியாது எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் போராட்டத்தையடுத்து நில அளவையைக் கைவிட்டு அதிகாரிகள் திரும்பிச் சென்றனர்.

# தாயகத்தில் நாட்டுப்பற்றாளர் சத்தியமூர்த்தி மற்றும் ஈகைப்போராளி முரகதாஸ் ஆகியோரின் நினைவேந்தல்! 12.2.2024







# மட்டக்களப்பு மயிலத்தமடுவில் காடுகளுக்கு தீ வைப்பு... உயிரிழக்கும் மாடுகள்!

பெப்ரவரி 13, 2024

மட்டக்களப்பு மயிலத்தமடு பகுதிகளில் காடுகளுக்கு தீ வைக்கப்படுவதாக பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.






மட்டக்களப்பு மயிலத்தமடு பகுதிகளில் உள்ள மேய்ச்சல் தரை நிலங்களுக்கு சட்டவிரோத குடியிருப்பாளர்களால் தீ வைக்கப் பட்டுள்ளதோடு இரசாயன பதார்த்தங்களையும் பாவித்துள் ளதால் மாடுகள் உயிரிழப்பதாக பண்ணையாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

தொடர்ச்சியாக மயிலத்தமடு, மாதவனை பகுதிகளில் அத்து மீறிய பயிர் செய்கையில் ஈடுபட்டு வரும் சட்டவிரோத குடியேற் றவாசிகள் அங்கிருந்து வெளியேற மறுத்து வரும் நிலையில் தற்போது மகாவலி அபிவிருத்தித் திணைக்களத்தினால் சட்ட விரோத குடியிருப்பாளர்களால் பகுதிகளில் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன. மட்டக்களப்பு எல்லையில் உள்ள மேய்ச்சல் தரை நிலங்களில் அத்துமீறிய பயிர் செய்கையில் ஈடுபட்டு வரும் சட்டவிரோத குடியேற்றவாசிகளை வெளியேற்றுமாறு நீதி மன்றம் தீர்ப்பு வழங்கிய நிலையிலும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அத்துமீறிய பயிர் செய்கையில் ஈடுபட்டு வரும் குடும்பங்களுக்கு அம்பாறை மாவட்டத்தில் அவர்களது பகுதி களிலேயே விவசாயம் செய்ய காணிகளை வழங்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் மேய்ச்சல் தரை நிலங்களை ஆக்கிரமித்து சட்ட விரோத குடியிருப்பாளர்களை தடுப்பதற்காக தனியான பொலிஸ் நிலையம் ஒன்று அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள போதிலும் இவற்றை எல்லாம் மீறி அப்பகுதியில் தொடர்ச்சியாக காடுகள் அழிக்கப்பட்டு பயிர் செய்கை நடவடிக்கைகளில் அத்துமீறிய பயிர் செய்கையாளர்கள் ஈடுபட்டு வருகின்றதாக மயிலத்தமடு பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. குடும்பிமலையில் சட்டவிரோத மின்சார வேலியில் சிக்கி இரு விவசாயிகள் பலி!

பெப்ரவரி 13, 2024

மட்டக்களப்பு குடும்பிமலை பிரதேசத்தில் பண்ணை ஒன்றில் சட்டவிரேதமாக அமைக்கப்பட்ட மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி மாமன் மருமகனாகிய இரு விவசாயிகள் உயிரிழந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை (13) சடலமாக மீட்கப் பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிசார் தெரிவித்தனர்.

குடும்பிமலையைச் சேர்ந்த 51 வயதுடைய ஆறுமுகம் லோக நாதன் மற்றும் பலிபாய்ந்த கல்லைச் சேர்ந்த 21 வயதுடைய விநாயகமூர்த்தி சுதர்சன் ஆகிய இருவரும் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள குடும்பிமலை ஈச் சையடி பகுதியில் முன்னாள் பிரதி அமைச்சர் ஒருவருக்கு சொந்தமான பண்ணையை வாழைச்சேனையைச் சேர்ந்த நபர் ஒருவர் குத்தகைக்கு எடுத்து செய்துவரும் நிலையில், காட்டு விலங்குகள் உள்நுழைவதை தடுப்பதற்காக சட்ட விரோதமாக மின்சாரத்தை பெற்று பண்ணையை சுற்றி மின்சார வேலி அமைத்துள்ளார்.

இந்நிலையில், குறித்த பண்ணை பகுதிக்கு அருகில் நேற்று வேளாண்மை அறுவடைக்கு மாமனாரும் மருமகனும் சென்ற நிலையில் மின்சார வேலியில் மின்சாரம் தாக்கி உயிரிழந் துள்ளனர்.

இன்றைய நாள் காலை பண்ணைக்கு சென்ற உரிமையாளர் மின்சாரம் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதை கண்டு பொலி சாருக்கு தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிசார் நீதிமன்ற உத்தரவை பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்கு ஒப் படைப்பதற்கான நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை சிறீலங்கா பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்.



# யாழில். போதைக்கு எதிராக ஒன்றுகூடிய மதகுருமார்கள்!

பெப்ரவரி 14, 2024

போதைப் பொருளுக்கு எதிரான போராட்டம் ஒன்று நேற்றைய நாள் செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

"போதைப் பொருள் பெருந்தீமையிலிருந்து எம்மையும், எமது சந்ததியினரையும் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்திற்கு முன்பாக யாழ் மாவட்ட சர்வமத பேரவையின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் யாழ் மாவட்ட சர்வமத பேரவை தலைவர் சிவஸ்ரீ கிருபானந்த குருக்கள், செயலாளர் அருட்பணி இ.ராஜ் குமார், யாழ்ப்பாணம் நாக விகாரையின் விகாராதிபதி ஸ்ரீ விமல தேரர், மௌலவி வி.ஏ.எஸ்.சுபியான் உள்ளிட்ட சில மத தலைவர்கள் கலந்துகொண்டனர்.









# மன்னர் சார்லஸ் அவர்கள் புற்றுநோயால் பாதிப்பு!

பக்கிங்ஹாம் அரண்மனை

பெப்ரவரி 05. 2024

இங்கிலாந்து அரச பரம்பரையின் தற்போதைய அரசர், மூன்றாம் சார்லஸ் (வயது 75). இவரது தாயார் அரசி இரண்டாம் எலிசபெத் கடந்த 2022-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் காலமானார்.




அதை தொடர்ந்து மூன்றாம் சார்லஸ் அரசராக பதவி ஏற்றார். சில மாதங்களாக புரோஸ்டேட் சுரப்பி வீக்க பிரச்சினையால் அரசர் சார்லஸ் அவதிப்பட்டு வந்தார்.

இதற்காக அவர் லண்டனில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.

இந்நிலையில் அரசருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளதாக பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது.

புரோஸ்டேட் சிகிச்சைகாக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்ற போது புற்றுநோய் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக கூறப்பட்டு உள்ளது.

பக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்ட அறிக்கையில், “புரோஸ்டேட் சிகிச்சைகாக மருத்துவ பரிசோதனைகள் நடைபெற்ற போது மேலும் சில பிரச்சனைகள் இருப்பது தெரிய வந்தது.

அதன்பிறகு நடந்த பரிசோதனையில் அவருக்கு புற்றுநோயின் ஒரு வகை கண்டறியப்பட்டு உள்ளது.

இதற்காக மன்னருக்கு வழக்கமான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மன்னர் சிகிச்சையில் இருப்பதால் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.


ROYAL COMMUNICATIONS

A STATEMENT FROM BUCKINGHAM PALACE

During The King's recent hospital procedure for benign prostate enlargement, a separate issue of concern was noted. Subsequent diagnostic tests have identified a form of cancer.

His Majesty has today commenced a schedule of regular treatments, during which time he has been advised by doctors to postpone public-facing duties. Throughout this period, His Majesty will continue to undertake State business and official paperwork as usual.

The King is grateful to his medical team for their swift intervention, which was made possible thanks to his recent hospital procedure. He remains wholly positive about his treatment and looks forward to returning to full public duty as soon as possible.

His Majesty has chosen to share his diagnosis to prevent speculation and in the hope it may assist public understanding for all those around the world who are affected by cancer.

ENDS

# கனடாவில் வெளிநாட்டவர்கள் வீடு கொள்வனவு செய்வதற்கான தடை இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பு!

பெப்ரவரி 05, 2024

வெளிநாட்டவர்கள் கனடாவில் வீடு கொள்வனவு செய்வதற்கான தடை நீடிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் கனடாவில் வீடுகள் கொள்வனவு செய்வதற்கான தடை மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் நிதி அமைச்சர் கிறிஸ்டியா பீரிலாண்ட் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2027ம் ஆண்டு வரையில் வெளிநாட்டவர்கள் கனடாவில் வீடுகள் கொள்வனவு செய்வதற்கான தடை நீடிக்



கப்படுவதாக அவர் அறிவித்துள்ளார்.

வெளிநாட்டு பிரஜைகள், நிறுவனங்கள் கனடாவில் வதிவதற்காக வீடுகள் கொள்வனவு செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கனடிய மக்களுக்கு மலிவு விலையில் வீடுகளை கொள்வனவு செய்யக் கூடிய சூழ்நிலையை உருவாக்கும் நோக்கில் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், தற்காலிக தொழில் அனுமதிகள், ஏதிலிக் கோரிக்கையாளர்கள் மற்றும் சர்வதேச மாணவர்கள் உள்ளிட்ட தரப்பினர் சில நிபந்தனைகளின் அடிப்படையில் வீடு கொள்வனவு செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

# கனடாவின் கியூபெக் மாநிலத்தில் பல்கலைக்கழக வகுப்புக் கட்டணங்கள் அதிகரிப்பு!

பெப்ரவரி 06, 2024

கனடாவின் கியூபெக் மாகாணத்தில் வகுப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வகுப்பு கட்டண அதிகரிப்பு மாணவர்களை பாதிக்கும் என ஏற்கனவே அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

கியூபெக் மாகாணம் தவிர்ந்த வெளி மாகாணங்களை சேர்ந்த மாணவர்களிடமிருந்து கூடுதல் வகுப்பு கட்டணம் அளவீடு செய்யப்பட உள்ளது.

எதிர்வரும் காலங்களில் கியூபெக் மாகாண அரசாங்கம் இவ்வாறு கூடுதல் வகுப்பு கட்டணத்தை அளவீடு செய்ய உள்ளது. சுமார் 30% வகுப்பு கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கியூபெக் பல்கலைக்கழகம் ஒன்றில் கற்கும் வெளி மாகாண மாணவர் ஒருவர் செலுத்த வேண்டிய கட்டணம் இவ்வாறு உயர்த்தப்படவுள்ளது.

பொதுவாக 9 ஆயிரம் டாலர்கள் செலுத்த வேண்டிய மாணவர் ஒருவர் 12000 டாலர்கள் வரையில் செலுத்த நேரிடும் என தெரிவிக்கப்படுகிறது.

வகுப்பு கட்டண அதிகரிப்பு தொடர்பில் மீள் பரிசீலனை செய்யுமாறு கியூ கியூபெக் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

கட்டண மாற்றம் தொடர்பில் ஆராய்வதற்காக நீக்கப்பட்ட குழு இந்த அறிவுறுத்தலை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்த பரிந்துரைகளை புறந்தள்ளி மாகாண அரசாங்கம் வகுப்பு கட்டணங்களை உயர்த்துவது மாணவர்



களுக்கு பெரும் நெருக்கடி நிலையை உருவாக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# ஒன்ராரியோ போக்குவரத்துப் பயணிகளுக்கான செலவைக் குறைக்க ‘ஒற்றைக்கட்டண’ திட்டம்!

பெப்ரவரி 07, 2023

கடந்த திங்கட்கிழமையன்று, ஒன்ராரியோ முதல்வர் டக் ஃபோர்டும் போக்குவரத்து இணை அமைச்சர் விஜய் தணிகாசலமும் இணைந்து ஒன்ராரியோ அரசாங்கம் பொதுப் போக்குவரத்துப் பயணிகளுக்கான செலவைக் குறைப்பதற்காக ‘ஒற்றைக்கட்டண’ திட்டம் ஒன்றினை அறிவித்தனர். இந்த ‘ஒற்றைக்கட்டண’ நடைமுறை மூலம் சராசரியாக 1,600 டொலர்களை பயணிகள் சேமிப்பர். பிப்ரவரி 26, 2024 முதல், ரொரான்ரோ பொதுப்போக்குவரத்துச் சேவை (TTC) மற்றும் ரொறன்ரோ பெரும்பாகத்திலுள்ள ‘கோ’ (GO) போக்குவரத்துச் சேவை உட்பட இத்திட்டத்தில் பங்குபற்றும் அனைத்து சேவைகளுக்குமிடையில் பயணிக்கும் பயணிகள் ஒருமுறை மட்டும் கட்டணம் செலுத்தினால் போதும்.




இதன்போது பேசிய முதல்வர் டக் ஃபோட், “ஒன்ராரியோவின் உழைக்கும் மக்களுக்கான செலவுகளைக் குறைக்கும் பணியில் எங்கள் அரசாங்கம் மும்முரமாக உள்ளது” என்று கூறினார். “ஒற்றைக்கட்டண முறையானது பல்கட்டண முறைமையை நீக்கி பயணிகளுக்கு 1,600 டொலர்களை வருடாந்த போக்குவரத்துச் சேமிப்பாக வழங்கும். இதேபோல், எரிவாயு வரிக்குறைப்பு, சாலைக் கட்டணக்குறைப்பு, வாகன உரிமத் தகட்டின் வருடாந்த கட்டண நீக்கம் போன்றவற்றின் மூலம் வாகன ஓட்டுநர்கள் நூற்றுக்கணக்கான டொலர்களைச் சேமிப்பதற்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்” எனவும் அவர் தெரிவித்தார்.



ஒன்ராரியோ அரசின் முழுமையான நிதியுதவியில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த ‘ஒற்றைக்கட்டண’ முறை ஆண்டொன்றுக்கு போக்குவரத்துத்துறையில் எட்டு மில்லியன் புதிய பயணங்களுக்கு வழிவகுக்கும். மேலும் ‘கோ’ போக்குவரத்து (GO Transit), ரொரான்ரோ பொதுப்போக்குவரத்து (TTC), பிரம்டன் போக்குவரத்து, டூரம் பிரதேச போக்குவரத்து, மிசிசாகா போக்குவரத்து (MiWay), யோர்க் பிரதேச போக்குவரத்து (York



Region Transit) ஆகியவற்றுக்கு இடையே பயணிக்கும் மாணவர்கள் மற்றும் முதியோர்களுக்கு குறைந்த கட்டணத்தில் வசதியான போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுக்கும்.

“பல குடும்பங்கள் நிதிநெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இவ்வேளையில், போக்குவரத்தை எளிமையாக்கும் எமது அரசின் இத்திட்டமானது, அவர்களுக்கு ஒரு நிவாரணமாக அமையும்” என போக்குவரத்து இணை அமைச்சர் விஜய் தணிகாசலம் தெரிவித்தார். “முதல்வர் ஃபோர்டின் தலைமையின் கீழ், பொதுப் போக்குவரத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்களை நாம் தொடர்ந்தும் மேற்கொள்வதன்மூலம் எமது மக்களின் சேமிப்பை அதிகரிப்போம்” என அவர் மேலும் தெரிவித்தார்.




ஒற்றைக்கட்டணத் திட்டத்தின் மூலம், ‘கோ’ (GO) போக்குவரத்துச் சேவை உட்பட பின்வரும் அனைத்து போக்குவரத்துச் சேவைகளுக்குமிடையில் பயணிக்கும் பயணிகள் ஒருமுறை மட்டுமே கட்டணம் செலுத்துவார்கள்:

Barrie Transit
Brampton Transit
Burlington Transit
Bradford West Gwillimbury Transit
Durham Region Transit
Grand River Transit
Guelph Transit
Hamilton Street Railway
Milton Transit
MiWay
Oakville Transit
TTC
York Region Transit

# கனடிய அரசாங்கம் சிலி நாட்டில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயை கட்டுப்படுத்த உதவுவதாக அறிவிப்பு!

பெ்பரவரி 11, 2023

கனடிய அரசாங்கம் சிலி நாட்டில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ அனர்த்தத்தை கட்டுப்படுத்த உதவுவதாக அறிவித்துள்ளது.

கனடிய தீயணைப்பு படையினரை அனுப்பி வைக்க உள்ளதாக பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

தீயணைப்பிற்கு பயன்படுத்தப்படும் சாதனங்கள் மற்றும் துறை சார் நிபுணர்கள் சிலி நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளனர்.

கனடாவில் ஏற்பட்ட காட்டுத் தீ பாதிப்புக்களின் போது சிலி நாட்டு படையினர் உதவிகளை வழங்கியிருந்தனர்.

இந்த பெறுமதிமிக்க உதவிகளுக்கு பிரதி உபகாரமாக கனடிய தீயணைப்புப் படையினர் சில்லி நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

சிலி நாட்டில் காட்டுத் தீ காரணமாக நூற்றுக் கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டதுடன் பாரியளவு பொருட்கள் சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சிலிக்கு அனுப்பி வைக்கப்பட உள்ள தீயணைப்புப் படை குறித்த விபரங்களை கனடிய அரசாங்கம் இன்னும் வெளியிடவில்லை.



# கனடாவில் தபால் கட்டணங்கள் அதிகரிப்பு!

பெப்ரவரி 11, 2024

கனடாவில் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய தபால் திணைக்களம் இவ்வாறு கட்டணங்களை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

தபால் முத்திரைகளின் விலைகள் 7 சதத்தினால் அதிகரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா மற்றும் சர்வதேச தபால் சேவை கட்டணங்கள் அதிகரிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உள்நாட்டு தபால் மற்றும் பதிவுத் தபால் கட்டணங்களும் அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




எதிர்வரும் மே மாதம் 6ம் திகதி முதல் இவ்வாறு கட்டண அதிகரிப்பு பதிவாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

பணவீக்கம் காரணமாக ஏற்பட்டுள்ள நிதிச் சுமையை கவனத்திற் கொண்டு இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது.“

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# ஒன்ராரியோவில் மீன் பிடிக்க சென்ற இருவர் பரிதாப உயிரிழந்துள்ளனர்!

பெப்ரவரி 13, 2023

ஒன்ராரியோவில் மீன் பிடிக்கச் சென்ற இருவர் பரிதாபமாக







உயிரிழந்துள்ளனர்.

பனிப்பொழிவினால் நதிகளில் பனி படர்ந்துள்ள நிலையில் மக்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறு மீன் பிடித்துக்கொண்டிருந்த மூவர் திடீரென பனிப் பாறை உடைந்து நதியில் மூழ்கியுள்ளனர்.

இவ்வாறு நீரில் மூழ்கிய மூவரில் ஒருவர் உயிர் பிழைத் துள்ளார்.

ஏனைய இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்தக் காலப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடுவது ஆபத்தானது என பொலிஸார் மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோவின் கார்ல்ஸ்டன் நதியில் இந்த சம்பவம் பதிவாகி யுள்ளது.

ஓரளவு வெப்பநிலை நிலவும் காலப் பகுதியில் பனிபடர்ந்த பகுதி களில் நடமாடுவதனை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# கனடிய அரசாங்கம் பலஸ்தீனத்தை அங்கீகரிக்க வேண்டும்! என்.டி.பி கட்சி

பெப்ரவரி 13, 2024

கனடிய அரசாங்கம் பலஸ்தீன தேசத்தை அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் லிபரல் கட்சியின் கூட்டணி கட்சியான என்.டி.பி கட்சி இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.






பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதன் மூலம் மத்திய கிழக்கு சமா தான முனைப்புக்களை மேற்கொள்ள முடியும் என என்.டி.பி கட்சியின் வெளிவிவகாரத்துறை பொறுப்பாளர் ஹீத்தர் மெக் பிர்சன் தெரிவித்துள்ளார்.

பலஸ்தீன தேசத்தை சுதந்திர நாடாக அங்கீகரிப்பது குறித்த பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் - இசுரவேல் படையினருக்கு இடையிலான போர் முடி வுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் இசுரவேலிய தேசத்தை அங்கீகரிப்பது குறித்து கவனம் செலுத்தி வருவதாக பிரித் தானியா மற்றும் அமெரிக்கா என்பன தெரிவித்துள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பலஸ்தீன தேசம் தொடர்பிலான என்.டி.பி கட்சியின் யோசனைக்கு கனடிய வெளிவிவகார அமைச்சர் மெலெனி ஜோலியோ எதிர்க்கட்சிகளோ இதுவரையில் தங்களது நிலைப் பாட்டை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவுக்கு நீதிமன்ற பிறப்பித்துள்ள உத்தரவு!

பெப்ரவரி 14, 2023

கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ மற்றும் அமைச்சரவைக்கு அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவு ஒன்றை பிறப்பித்துள்ளது.

நாட்டில் நீதிமன்றங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது.

நீதிமன்றங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு குறுகிய காலப் பகுதியில் நியமனங்களை வழங்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது.

நீதிபதி ஹென்றி பிறவுண் இவ்வாறு பிரதமருக்கு உத்தர விட்டுள்ளார்.

லிபரல் அரசாங்கம் பதவி வெற்றிடங்கள் தொடர்பில் அசமந்தப் போக்கினைப் பின்பற்றியதாகத் தெரிவித்துள்ளார்.

பதவி வெற்றிடங்களினால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் சாத் தியங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் நீதிமன்றங்களில் சுமார் 75 பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



**Oshawaப் பகுதியில் வீட்டு வேலைக்கு பெண் வேலையாள் தேவை**
**நல்லச்சம்பளம் மற்றும் உணவு தங்குமிடம் வழங்கப்படும்!**
*மேலதிக தொடர்புக்கு: 416-616-6005*

# தமிழக செய்திகள்



# அரசியலுக்குள் வந்தார் நடிகர் விஜய்; கட்சியின் பெயரும் அறிவிப்பு!

பெப்ரவரி 02, 2023

தமிழ்நாட்டின் முன்னிணி நடிகரான விஜய் அரசியலுக்கு வருவார் என்ற நிலையில் அவர் இன்ற தனது கட்சியின் பெயரை “தமிழக வெற்றிக் கழகம்” அதிகாரபூர்வமாக அறிவித்தார். அவரது கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவரது கட்சியின் கொள்கைகளை இன்று வெளியிடவில்லை.

மக்களுக்கு முழுமையான சேவையை தொடர அரசியல் அதிகாரம் தேவைப்படுவதாக தெரிவித்துள்ளார். கடந்த மாதம் 25ம் தேதி சென்னையில் நடைபெற்ற மாநில பொதுக்குழு மற்றும் செயற்குழு கூட்டத்தில் கட்சியின் தலைவர் மற்றும் செயலக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பொதுக்குழு உறுப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதையும் குறிப்பிட்ட நடிகர் விஜய், தற்போதைய சூழலில் மக்களின் ஒற்றுமை மற்றும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் உள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார். வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று மக்கள் விரும்பும் அரசியல் மாற்றத்திற்கு வழிவகுப்பதுதான் நமது இலக்கு என்றும் தெரிவித்துள்ளார். இதனிடையே அவர் தொடர்ந்து நடிப்பில் ஈடுபடுவாரா என்ற கேள்விக்கும் அவர் இந்த அறிக்கையின்மூலமே பதிலளித்துள்ளார். தான் ஒப்புக் கொண்டுள்ள இன்னொரு திரைப்படத்தை முடித்துவிட்டு முழுமையாக அரசியலில் ஈடுபட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


தமிழக வெற்றி கழகம்
தமிழக வெற்றி கழகம்
தமிழக வெற்றி கழகம்

ஆரம்ப புள்ளி, ஈழப்போர் காலம்தான். போரை நிறுத்த வேண்டும் என்று 2008ல் முழங்கிய விஜய் அதன் பின்னர், இலங்கை கடற்படையின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த நாகை மீனவர்களுக்கு ஆதரவாக தனது ரசிகர் மன்றம் மூலம் போராட்டத்தையும் நடத்தினார். அதன் பின்னர் ராகுல் காந்தியுடன் சந்திப்பு, தன்னுடைய திரைப்படங்களில் அரசியல் வசனங்களை தெறிக்க விடுவது என அரசியலுக்குள் நுழைய கொஞ்சம் கொஞ்சமாக அடி எடுத்து வைத்தார்.

# அரிசி விலை உயர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும்!

## பாமக நிறுவனர் மருத்துவர் இராமதாஸ்

பெப்ரவரி 03, 2024

பாமக நிறுவனர் இராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் சாப்பாட்டுக்கான சன்னரக அரிசி விலை, கடந்த ஒரு மாதத்தில் மட்டும் கிலோவுக்கு ரூ.6 வரை உயர்ந்திருக்கிறது. தமிழகம் உள்ளிட்ட தென்னிந்தியாவில் நெல்லுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கும் நிலையில், அரிசி விலை கிலோவுக்கு மேலும் ரூ.12 வரை உயர்வதற்கு வாய்ப்பு இருப்பதாக வணிகர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இன்னொருபுறம் பருப்பு உள்ளிட்ட மளிகை பொருட்களின் விலையும் கடுமையாக உயர்ந்திருக்கின்றன. அதனால், தமிழக மக்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயரும் போது, அதை கட்டுப்படுத்த வேண்டியது தமிழக அரசின் கடமை. இதற்காகத்தான் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சரின் தலைமையில் விலை கண்காணிப்புக் குழு செயல்பட்டு வருகிறது.

அரிசி விலை உயர்வுக்கான காரணம், அதன் பற்றாக்குறை தான் என்பது தெளிவாக தெரியும் நிலையில், அதை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். அரிசி அதிகமாக விளையும் ஹரியாணா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழக சந்தைக்கு அரிசியை கொண்டு வருவதன் மூலம் விலையை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டும். இந்தியாவின் எந்த மாநிலத்திலும் அரிசி விலை குறைவாக இல்லை என்றால், சன்னரக அரிசியை நியாயவிலைக் கடைகள் மூலம் மானிய விலையில் விற்க அரசு முன்வர வேண்டும்.



# சிறீலங்கா கடற்படையின் அட்டூழியத்துக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்!

## பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் இராமதாஸ்

பெப்ரவரி 05, 2024

சிறீலங்கா கடற்படையின் அட்டூழியத்துக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சியின் ஸ்தாபகர் ராமதாஸ் இந்திய மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் 23 பேர் கைது செய்யப்பட்டது பற்றி வேதனையை பகிர்ந்துள்ள அவர் இது பற்றி கூறியிருப்பதாவது

வங்கக்கடலில் மீன்பிடிக்கச் சென்ற தமிழக மீனவர்கள் 23 பேரை கச்சத்தீவு அருகே சிங்களக் கடற்படையினர் கைது செய்திருக்கின்றனர். அவர்களின் இரு மீன்பிடி படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. கச்சத்தீவையொட்டிய இந்திய கடல் எல்லையில் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது சிங்களக் கடற்படையினர் அத்துமீறி நுழைந்து கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

கடந்த மாதத்தில் மட்டும் நாற்பதுக்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை சிங்களக் கடற்படை கைது செய்திருக்கிறது. அவர்களில் பலர் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டு விட்ட நிலையில் 18 மீனவர்கள் மூன்று நாட்களுக்கு முன்னர் தான் விடுதலை செய்யப்பட்டனர். அதற்குள்ளாகவே மேலும் 23 மீனவர்களை சிங்களக் கடற்படையினர் கைது செய்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரங்களை பறிக்க வேண்டும் என்பதற்காகவே அவர்களை சிங்களப்படை தொடர்ந்து கைது செய்து வருகிறது. இதற்கு மத்திய அரசு முடிவு கட்ட வேண்டும். இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான கடற்பரப்பு மிகவும் குறுகியது.




அதனால் தமிழக மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளும் நுழைவதை தவிர்க்க முடியாது. அதனால் தமிழக மீனவர்களும் இந்திய மீனவர்களும் காலம் காலமாக எந்தெந்த பகுதிகளில் மீன்பிடித்து வந்தார்களோ அதே பகுதியில் தொடர்ந்து மீன் பிடிக்க அனுமதிப்பது தான் சரியானதாகும். இந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரத்திற்கு தீர்வு காண மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக தமிழக மீனவர்கள் இலங்கை மீனவர்கள் தமிழக அரசு இலங்கை அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகள் பங்கேற்கும் பேச்சுக்களுக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். என அவர் தெரிவித்துள்ளார்

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 5 பேர் ஏதிலிகளாக தமிழகத்தில் தஞ்சம்!

பெப்ரவரி 07, 2024

இலங்கையிலிருந்து அகதிகளாக ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 குழந்தைகள் உட்பட ஐந்து பேர் இன்றைய நாள் (07) தமிழகத்தை சென்றடைந்துள்ளனர் நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்காக கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ளனர்.





வவுனியா நெடுங்குழி பகுதியை சேர்ந்த நந்தகுமார் அவரது மனைவி மற்றும் அவரது 3 குழந்தைகள் என ஒரே குடம்பத்தை சேர்ந்த 5 பேரே செவ்வாய்க்கிழமை (06) மன்னாரில் இருந்து படகில் புறப்பட்டு இன்று (7) அதிகாலை இராமேஸ்வரத்தையடுத்துள்ள தனுஸ்கோடி அரிச்சல்முனையை சென்றடைந்துள்ளனர். நீண்ட இடைவெளியின் பின்னர் இலங்கையிலிருந்து அகதிகளாக குடும்பம் ஒன்று தமிழகம் சென்றுள்ளமை கவனத்தை ஈர்த்துள்ளது

இவர்களுடன் சேர்த்து பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவில் தஞ்சமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 293ஆக அதிகரித்துள்ளது.

# கீழடி 1, 2ம் கட்ட அகழாய்வு அறிக்கை வெளியிடப்படுமா? மத்திய அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு!

பெப்ரவரி 07, 2024

கீழடியில் நடைபெற்ற முதல் 2 கட்ட அகழாய்வு அறிக்கையை வெளியிடக் கோரிய வழக்கில் மத்திய அரசு பதிலளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மதுரையை சேர்ந்த பிரபாகர் பாண்டியன், உயர் நீதிமன்ற கிளையில் தாக்கல் செய்த மனுவில், "சிவகங்கை மாவட்டம் கீழடியில் 2013 முதல் 2016 வரை மத்திய அரசு சார்பில் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் இராமகிருஷ்ணன் அகழாய்வு பணி மேற்கொண்டார். இந்த அகழாய்வின் போது 5000-க்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த பொருட்கள் கிடைத்தன. இந்நிலையில், திடீரென அமர்நாத் இராமகிருஷ்ணன் பணியிட மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் ஸ்ரீராமன் என்பவர் கீழடி தொல்லியல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். அவர் தலைமையில் நடைபெற்ற 3-ம் கட்ட அகழாய்வில் குறிப்பிடும்படியான கண்டுபிடிப்புகள் இல்லை.

முதல் 2 கட்ட கீழடி அகழாய்வு அறிக்கையை மத்திய அரசிடம் தொல்லியல் அறிஞர் அமர்நாத் இராமகிருஷ்ணன் தாக்கல் செய்துள்ளார். இந்த அறிக்கையில் கீழடியில் நிலவிய கலாச்சாரம், விவசாயம் செய்த பயிர்கள், விலங்குகள், நகர நாகரீகத்தை நோக்கி நகர்ந்த தன்மை குறித்து விரிவாக தெரிவித்துள்ளார். கீழடியில் கிடைத்த பொருட்களை ரேடியோ கார்பன் எனும் பகுப்பாய்வு முறையில் ஆய்வு செய்ததில் அந்த பொருட்கள் கிட்டத்தட்ட 2600 ஆண்டுகளுக்கு முந்தையது எனத் தெரிய வந்துள்ளது.

கீழடியில் தற்போது 4 முதல் 9ம் கட்ட அகழாய்வு பணிகளை மாநில அரசு மேற்கொண்டு அதுதொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுள்ளது. ஆனால், மத்திய அரசு மேற்கொண்ட முதல் 2 கட்ட அகழாய்வு பணிகள் குறித்த அறிக்கையை இதுவரை வெளியிடப்படவில்லை. 982 பக்கமுடைய அமர்நாத் இராமகிருஷ்ணன் அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டால் மட்டுமே கீழடி தொடர்பான தெளிவான வரலாற்று முடிவுகள் கிடைக்கும். எனவே, கீழடியில் தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் இராமகிருஷ்ணன் மேற்கொண்ட முதல் 2 கட்ட அகழாய்வு அறிக்கையை வெளியிட உத்தரவிட வேண்டும்" என்று மனுவில் கூறப்பட்டிருந்தது.



இந்த மனு நீதிபதிகள் டி.கிருஷ்ணகுமார், ஆர்.விஜயகுமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள் மனு தொடர்பாக மத்திய அரசு பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை 4 வாரங்களுக்கு நீதிபதிகள் ஒத்திவைத்து உத்தரவிட்டனர்.

# மீனவர் பிரச்சினையில் முதல்வர் ஸ்டாலினின் கடிதங்களால் எந்தப் பயனும் ஏற்படாது!

## பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் இராமதாஸ்

பெப்ரவரி 09, 2024

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதற்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் இராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், "வங்கக்கடலில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் 19 பேரை அவர்களின் இரு விசைப்படகுகளுடன் சிங்களப் படை கைது செய்திருக்கிறது. கைது செய்யப்பட்டவர்களில் இருவர் ஒடிசாவில் இருந்து வந்து மீன்பிடி தொழிலாளர்களாக பணி செய்து வந்தவர்கள் என்று கூறப்படுகிறது. தமிழக மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில், அத்துமீறி நுழைந்து தமிழக மீனவர்களை இலங்கைப் படை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

இராமேஸ்வரம் மீனவர்கள் 23 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தான் கைது செய்யப்பட்டனர். அவர்களை மீட்க இன்னும் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், மேலும் 19 மீனவர்களை இலங்கைப் படை கைது செய்திருப்பதை இயல்பான ஒன்றாக கருத முடியாது. தமிழக மீனவர்களுக்கு எதிரான திட்டமிட்ட நடவடிக்கையாகவே இதை பார்க்க வேண்டும்.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழிக்க வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்துடன்தான் அவர்களை இலங்கை கடற்படை கைது செய்து வருகிறது என்பதை பல நூறு முறை சுட்டிக்காட்டியிருக்கிறேன். இதை உணர்ந்து இந்த சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக மத்திய அரசுக்கு தமிழக முதல்வர் கடிதங்களை மட்டும் எழுதிக் கொண்டிருப்பது போதாது. அதனால், எந்தப் பயனும் ஏற்படாது.

தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல் கைது நடவடிக்கைகள் குறித்த வழக்கை சில நாட்களுக்கு முன் விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், மீனவர்கள் சிக்கலுக்கு தீர்வு காண ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்காதது ஏன் என்று வினா எழுப்பியிருந்தது. உயர் நீதிமன்றத்தின் கண்டனத்திற்குப் பிறகாவது மீனவர்கள் கைது செய்யப்



படுவதற்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வங்கக் கடலில் பாரம்பரியமாக தமிழக மீனவர்கள் மீன்பிடித்து வரும் பகுதிகளில் தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பது சட்டபூர்வ உரிமையாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்த வேண்டும். இப்போது கைது செய்யப்பட்ட 19 மீனவர்கள் உட்பட இலங்கை சிறைகளில் வாடும் அனைத்து மீனவர்களையும், இலங்கை அரசிடம் உள்ள அனைத்து படகுகளையும் மீட்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

# உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள முருகனை காப்பாற்ற வேண்டும்; தமிழக அரசுக்கு நளினி கடிதம்!

பெப்ரவரி 10, 2024

வேலூர் சிறையைவிட திருச்சி சிறப்பு முகாம் கொடுமையாக உள்ளதால், உயிருக்கு ஆபத்தான நிலையில்இருக்கும் முருகனைக் காப்பாற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு, முருகனின் மனைவி நளினி கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று, சிறையில் அடைக்கப்பட்டிருந்த முருகன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், சாந்தன் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீது சில வழக்குகள் நிலுவையில் இருப்பதால், திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ளசிறப்பு முகாமில் அடைக்கப்பட்டுஉள்ளனர்.

இதில், சாந்தன் உடல்நலக்குறைவு காரணமாக சென்னை மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேபோல, முருகன், ராபர்ட் பயாஸ் ஆகியோர், தங்களை போலீஸார் சுதந்திரமாக இருக்க விடுவதில்லை. எனவே, விடுதலை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, கால வரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழக அரசின் தலைமைச் செயலர், திருச்சி மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார்,காவல் ஆணையர் என். காமினி ஆகியோருக்கு முருகனின் மனைவி நளினி கடிதம் எழுதி உள்ளார்.

அதில், "நானும், எனது கணவர் முருகனும் கடந்த 11.11.2022ம் தேதி உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டோம். எனது கணவர் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர் என்பதால், திருச்சி முகாமில் அடைத்துள்ளனர். அங்கு அவர் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகிறார். அவர் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டாலும், காவல் துறை கட்டுப்பாட்டில்தான் உள்ளார். அவர் முன்பு இருந்த வேலூர் சிறையைவிட, திருச்சி சிறப்புமுகாம் கொடுமையாக உள்ளது.

எனது கணவர் 12 நாட்கள் சாப்பிடாமல், உயிருக்கு ஆபத்தான நிலையில் இருக்கிறார். அவருக்கு முகாமில் முதலுதவி சிகிச்சை



அளிக்கப்படாததால், உயிருக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படக்கூடும். எனவே, என் கணவரின் உயிரைக் காப்பாற்ற வேண்டும்.

இவ்வாறு கடிதத்தில் நளினி தெரிவித்துள்ளார்.

# சாந்தனை இலங்கைக்கு திரும்பி அனுப்புவதற்கான உத்தரவு ஒருவார காலத்தில் பிறப்பிக்கப்படும்!

பெப்ரவரி 13, 2024

ராஜீவ்காந்தி கொலைதொடர்பில் தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலையான நிலையில் தொடர்ந்தும் திருச்சி சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சாந்தனை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கான உத்தரவு ஒரு வாரகாலத்தில் வெளியாகும் என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தாயாரை கவனித்துக்கொள்வதற்காக தன்னை விடுதலை செய்யக்கோரி சாந்தன் தாக்கல் செய்த மனு சென்னை உயர்நீதி மன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தவேளை மத்திய அரசின் சார்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணையின் போது சாந்தன் இலங்கை திரும்புவதற்கான தற்காலிக பயண ஆவணத்தை இலங்கை துணை தூதரகம் அனுப்பியுள்ளது இலங்கை அரசாங்கம் அனுப்பிய ஆவணங்கள் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதேவேளை தமிழக அரசாங்கம் அனுப்பிய ஆவணம் இன்னமும் வந்துசேரவில்லை சாந்தனை இலங்கைக்கு அனுப்புவதற்கான உத்தரவு ஒரு வாரத்தில் பிறப்பிக்கப்படும் என மத்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.



# ஒரே நாடு ஒரே தேர்தல்; ஒத்து வராது என தமிழக முதல்வர் திட்டவட்டம்!

பெப்ரவரி 14, 2024

முதல்வர் மு.க.ஸ்டாலின் கொண்டு வந்த இரண்டு தனித் தீர்மானங்கள் தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.







தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையையும் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தையும் மத்திய அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி இரு தீர்மானங்களும் தாக்கல் செய்யப்பட்டன.

தீர்மானங்களை முதல்வர் முன்மொழிந்த பினனர் அவற்றின் மீதான விவாதங்கள் நடைபெற்றன.

அப்போது பேசிய முதல்வர் ஸ்டாலின், ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது தேர்தல் ஜனநாயகத்துக்கு எதிரானது என்றார்.

"நாடாளுமன்றத் தேர்தலைக்கூட ஒரே நேரத்தில் நடத்த முடியாத நிலை காணப்படுகிறது. இந்நிலையில் ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது அரசியல் சட்டத்தின் அடிப்படைக்கு எதிரானது," என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அனைத்து மாநிலங்களிலும் ஆட்சி அமைத்து, மத்தியில் ஆட்சி கவிழுமானால், அனைத்து மாநில அரசுகளையும் கலைத்து விட்டு தேர்தல் நடத்துவார்களா?

சில மாநிலங்களில் ஆட்சி கவிழ்ந்து தேர்தல் நடத்தும் சூழல் ஏற்பட்டால் மத்தியில் ஆட்சியில் இருப்பவர்கள் பதவி விலகுவார்களா? என்று அவர் பல்வேறு கேள்விகளை எழுப்பினார்.

எனவே, ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது நடைமுறைக்குச் சாத்தியமற்ற ஒன்று என்றும் அரசியல் சட்டத்தின் அடிப்படை அம்சத்திற்கும், அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள சுதந்திரமான, நேர்மையான தேர்தலுக்கு முற்றிலும் எதிரானது என்றும் முதல்வர் ஸ்டாலின் சாடினார்.

"ஒரே நேரத்தில் தேர்தல் என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்றங்களை முன்கூட்டியே கலைக்க வேண்டிய சூழல் ஏற்படும் என்பதும் அப்படி கலைப்பது அரசியல் சட்ட துரோகம் என்பதாலும் இந்த நடைமுறையை அனைவரும் எதிர்க்க வேண்டும்," என்று முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தினார்.

மற்ற கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் இரு தீர்மானங்களையும் ஆதரித்துப் பேசினர். இரு தீர்மானங்களையும் ஆதரிப்பதாக அதிமுகவும் தெரிவித்தது. இதையடுத்து அவை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார்.

# உலக செய்திகள்

## ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாடு; விவசாயிகள் பாரிய போராட்டம்!

பெப்ரவரி 02, 2024

பெல்ஜியம் பிரஸ்ஸல்ஸில் ஐரோப்பிய ஒன்றிய உச்சி மாநாட்டிற்கு செல்லும் சாலைகளை விவசாயிகள் 1,000 ஊழவூர்திகளைப் பயன்படுத்தி மறித்துள்ளனர் என்று பெல்ஜிய காவல்துறை தெரிவித்துள்ளது.

1,000 உழவூர்திகள் அல்லது விவசாய வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் இப்போராட்டத்தில் பங்கெடுத்ததாக காவல்துறை அதிகாரி சர்வதேச ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.



கோபமடைந்த விவசாயிகள் வரிகள், விலைவாசி உயர்வு, மலிவான இறக்குமதிகள், விதிகள் மற்றும் அதிகாரத்துவம் பற்றி முறைப்பாடுகளை முன்வைத்து இப்போராட்டத்தை நடத்தினர். அத்துடன் ஐரோப்பிய உச்சி மாநாட்டில் விவசாயிகளின் குரல் எழுப்பப்படும் என்று அவர்கள் நம்பினர்.

ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் சந்திக்கும் போது, பாதுகாப்புக்காக கலகத் தடுப்புப் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

ஐரோப்பிய நாடாளுமன்றக் கட்டிடத்திலிருந்து சில தொகுதிகள் மட்டுமே உழவூர்திகளால் சுற்றி வளைக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் சிலர் நாடாளுமன்ற கட்டிடத்தின் மீது முட்டைகளை வீசினர். மற்றவர்கள் பட்டாசுகளை வெடித்தும், தீ வைத்தும் கொளுத்தினர். சதுக்கத்தில் ஒரு சிலை சேதப்படுத்தப்பட்டது.

கண்ணீர் புகை மற்றும் தண்ணீர் பீரங்கிகளை பயன்படுத்தி காவல்துறையினர் பதிலடி கொடுத்தனர்.

“நீங்கள் பூமியை நேசித்தால், அதை நிர்வகிப்பவர்களை ஆதரிக்கவும்” என்றும் “விவசாயிகள் இல்லை, உணவு இல்லை” பதாகைகள் காட்டியன.

அவர்கள் ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களுக்கு ஒரு செய்தியை வழங்க வந்துள்ளனர், அதாவது அவர்களின் வணிகம் நிலையானது அல்ல. விவசாயிகள் விலை



உயர்வை அனுபவிப்பதாக கூறுகிறார்கள் - அவர்களின் வணிகத்தின் செலவு € 30,000 அதிகரித்துள்ளது. ஆண்டு,” உரம், மின்சாரம் மற்றும் எரிபொருளின் விலை உயர்வை சுட்டிக்காட்டினர்.

கார்பன் உமிழ்வைக் குறைக்க ஐரோப்பிய ஒன்றியம் நிர்ணயித்த லட்சிய இலக்குகள் குறித்து விவசாயிகள் கவலைப்படுவதாகவும், அவை எவ்வாறு செயல்பட முடியும் என்பதில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் கூறினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தாராள விவசாய மானியங்கள் பெரிய விவசாயிகளுக்கு பயனளிக்கும், அதேசமயம் சிறிய விவசாயிகள்தான் பிரஸ்ஸல்ஸில் போராட்டம் நடத்தினார்கள்.

## சிலி நாட்டில் பாரிய காட்டுத் தீ; 122 போல் பலி!

பெப்ரவரி 06, 2024

சிலி நாட்டில் பரவி வரும் பாரிய காட்டுத்தீயினால் இதுவரை 122 பேர் உயிரிழந்துள்ளதோடு, நூற்றுக்கணக்கானவர்களைக்



காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிலி வால்பரைசோவின் மத்தியப் பகுதியில் காட்டுத் தீ பரவி வருவதோடு, உயிரிழப்புகள் அதிகரிக்கலாம் என அந்நாட்டு ஜனாதிபதி கேப்ரியல் போரிக் ஞாயிற்றுக்கிழமை எச்சரித்துள்ளார்.

மேலும், கேப்ரியல் போரிக் தனது நாடு ‘மிகப்பெரிய அளவிலான சோகத்தை’ எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பேரழிவிலிருந்து மக்களை காப்பாற்றுவதாக உறுதியளித்தோடு, போரிக் வெள்ளிக்கிழமை அவசரகால



நிலையை அறிவித்துள்ளார்.

காட்டுத்தீயினால் கடற்கரை சுற்றுலா தளமான வினா டெல் மார் நகரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் 200 பேர்



காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடற்கரை சுற்றுலா தளமான அங்கு பாரிய தீ விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. அத்தோடு, வருடாந்திர சர்வதேச இசை விழாவிற்கு பெயர் பெற்ற நகரத்தின் கிழக்கு பகுதிகள் எரிந்து நாசமாகியுள்ளன.

திங்கட்கிழமை மேலும் 10 பேர் தீயில் சிக்கி உயிரிழந்தனர். அத்தோடு, உயிழப்புகளின் எண்ணிக்கை 122 ஆக அதிகரித்துள்ளதாக என சிலியின் தடயவியல் மருத்துவ சேவையின் இயக்குனர் மரிசோல் பிராடோ தெரிவித்துள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, இலத்தீன் அமெரிக்க நாட்டின் மத்திய மற்றும் தெற்குப் பகுதிகளில் கிட்டத்தட்ட 26,000 ஹெக்டயர் (64,000 ஏக்கர்) நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளதாக அந்நாட்டு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையமான செனாப்ரெட் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காட்டு தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர, சுமார் 1,400 தீயணைப்பு வீரர்கள் மற்றும் 1,300 இராணுவ வீரர்கள், அத்துடன் 31 தீயணைப்பு ஹெலிகப்டர்கள் மற்றும் விமானங்கள் சேவையில் ஈடுப்பட்டுள்ளன.

சிலி நாட்டில் கோடை காலங்களில் காட்டுத்தீ ஏற்படுவது வழக்கமாக ஒன்றாக உள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு தென் மத்திய பிராந்தியத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 27 பேர் உயிரிழந்துள்ளனர். இதே வேளை 2017 ஆம் ஆண்டில் 11 மட்டுமே உயிரிழந்துள்ளனர்.

இவ் ஆண்டு ஏற்பட்டுள்ள காட்டு தீ வரலாற்றில் மிகவும் மோசமானதாக உள்ளது.

அண்டை நாடான அர்ஜென்டினாவைச் சேர்ந்த போப் பிரான்சிஸ் தனது ஞாயிற்றுக்கிழமை உரையின் போது, “சிலியில் ஏற்பட்ட பேரழிவுகரமான தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்காகவும் காயமடைந்தவர்களுக்காகவும்” பிரார்த்தனை செய்ய அழைப்பு விடுத்தார்.

மத்திய சிலியில் எல் நினோ வானிலை நிகழ்வின் தாக்கத்தினால் அதிக வெப்பநிலை, குறைந்த ஈரப்பதம் மற்றும் அதிக காற்றின் வேகத்தைத் தொடர்ந்து காட்டு தீ ஏற்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வெப்பமயமாதலால் ஏற்பட்டுள்ள அதிகரித்த வெப்பத்தால் காட்டுத்தீ போன்ற இயற்கை அனர்ந்தங்கள் அதிகமாக ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

# நூறு ஆண்டுகளுக்கு பின் பாரீசில் ஒலிம்பிக் போட்டி!

ஜனவரி 20, 2023

விளையாட்டு உலகில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒலிம்பிக் விளையாட்டு தொடர் எதிர்வரும் யூலை மாதம் பிரான்ஸ் நாட்டில் தொடங்க உள்ளது.

இந்த சூழலில் பாரரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தில் ஈபிள் டவரின் உலோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது குறித்த சுவாரஸ்ய தகவலை பாரீஸ் ஒலிம்பிக் ஏற்பாட்டாளர்கள் பகிர்ந்து உள்ளனர்.

இந்தியா உட்பட பல்வேறு நாடுகளை சேர்ந்த வீரர்களும், வீராங்கனைகளும் எதிர்வரும் பாரீஸ் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் முனைப்புடன் தீவிர பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.






மொத்தம் 329 விளையாட்டுக்கள் இதில் நடத்தப்பட உள்ளது. சுமார் 10,500 பேர் இதில் போட்டியாளர்களாக பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாட்டினை ஏற்பாட்டாளர்கள் ஒருங்கிணைத்து வருகின்றனர். இந்த சூழலில் பதக்கம் குறித்து சுவாரஸ்ய தகவல் வெளியாகி உள்ளது.

வழக்கமாக ஒலிம்பிக் பதக்கத்தின் உருவாக்கத்தில் புதுமையை கடைபிடிக்க போட்டியை நடத்தும் நாடுகள் முற்படும். கடந்த முறை டோக்கியோ ஒலிம்பிக்கை நடத்திய ஜப்பான் நாடு, பயன்படுத்தப்பட்ட பழைய மொபைல் போன்களை கொண்டு பதக்கங்களை உருவாக்கியது.

அது போல பிரான்ஸ் என்றதும் உலக மக்கள் அனைவருக்கும் சட்டென நினைவில் வரும் டவரின் டவரின் உலோகத்தை தற்போது பதக்கத்தில் பயன்படுத்தி உள்ளது அந்நாடு. பதக்கத்தின் First Look வெளியான நிலையில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது பாரீஸ் ஒலிம்பிக் பதக்கத்தின் மையப்பகுதியில் ஈபிள் டவரின் உலோகம் ஹெக்சகன் வடிவில் இடம் பெற்றுள்ளது.

பார்க்க நம் நாட்டின் 10 ரூபாய் நாணயம் போல உள்ளது. இது கடந்த காலங்களில் ஈபிள் டவரை புதுப்பிக்கும் பணி மேற்கொண்ட போது எடுத்த உலோகம் என்றும். அது சேமிப்பு கிடங்கில் பத்திரமாக வைக்கப்பட்டு இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதக்கதின் மற்றொரு பக்கத்தில் நவீன ஒலிம்பிக்கின் தொடக்கத்தை குறிப்பிடும் வகையில் அமைந்துள்ளது.

# பாகிஸ்தான் தேர்தல் முடிவுகள்; எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லை!

பெப்ரவரி 11, 2024

பாகிஸ்தான் பாராளுமன்றம், செனட் (Senate) எனும் மேல்சபை மற்றும் தேசிய அசெம்பிளி (National Assembly) எனும் கீழ்சபை ஆகிய இரு அவைகளை கொண்டது. தேசிய அசெம்பிளியில் 342 இடங்கள் உள்ளன. இவற்றில் 266 இடங்களுக்கான உறுப்பினர்கள் பொதுமக்களால் வாக்களித்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இவற்றை தவிர 70 இடங்கள் பெண்களுக்கும், மைனாரிட்டி வகுப்பினருக்கும், 6 இடங்கள் மலைவாழ் மக்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.கடந்த சில வருடங்களாக பாகிஸ்தான் பொருளாதாரம் நலிவடைந்துள்ளது. இந்நிலையில், கடந்த பிப்ரவரி 8 அன்று மக்களவைக்கான தேர்தல் நடைபெற்றது. பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் (Election Commission of Pakistan) இன்று முடிவுகளை வெளியிட்டது. இணையதொடர்பு தட்டுப்பாடு காரணமாக சுமார் 60 மணி நேரம் கடந்து தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரிக்-இன்சாஃப் (Pakistan Tehreek-Insaaf) கட்சியை சேர்ந்தவர்கள், முடிவு அறிவிக்கப்பட்ட 264 இடங்களில் 101 இடங்களில் வென்றுள்ளனர்.

இம்ரான் கான் கட்சியை சேர்ந்த பலர் சுயேட்சை வேட்பாளர்களாக களம் இறங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. பிடிபி கட்சி, அரசு அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மைக்கு குறைவாக 32 இடங்களே பெற்றுள்ளது. முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீஃபின் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் (Pakistan Muslim League) கட்சி 73 இடங்களில் மட்டுமே வென்றது. பிலாவல் பூட்டோ ஜர்தாரியின் பாகிஸ்தான் மக்கள் கட்சி (Pakistan People's Party) வேட்பாளர்கள் 54 இடங்களில் வென்றுள்ளனர். வாக்கு எண்ணிக்கையில் பெரும் முறைகேடுகள் நடந்துள்ளதாக பரவலாக பலர் குற்றம் சாட்டினர். இம்ரான் கான், அதிபராவதை தடுக்கும் முயற்சியாக நவாஸ் ஷெரீப் மற்றும் பூட்டோ இருவரும் கூட்டணி ஆட்சி அமைக்க பேச்சு வார்த்தையை தொடங்கி விட்டனர். வரும் நாட்களில் அதிபர் யார் என்பது உறுதியாகி விடும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவித்தனர்.



# இந்து சமுத்திரத்தில் செங்கடல் நிலைமை ஏற்படலாம்!

## அவுஸ்திரேலிய வெளிவிவகாகர அமைச்சர் பெனிவொங்

பெப்ரவரி 11, 2023

இந்து சமுத்திரத்தில் விபத்துக்கள் மற்றும் தவறான கணிப்பீடுகள் குறித்து அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் எச்சரித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் தவறானகணிப்பீடுகள் மற்றும் விபத்துக்களிற்கு எதிரான வெளிப்படைத்தன்மை மற்றும் உறுதிப்பாடு தேவை என இந்திய வெளிவிவகார அமைச்சர் இலங்கை ஜனாதிபதி ஆகியோர் மத்தியில் உரையாற்றுகையில் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பெனிவொங் தெரிவித்துள்ளார்.

செங்கடலில் ஈரான் ஆதரவு ஹௌத்தி கிளர்ச்சியாளர்கள் தங்கள் ஆளில்லா விமானதாக்குதல்களை தொடர்கின்றனர் அமெரிக்காவும் பிரிட்டனும் அவர்களிற்கு எதிராக தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன அவுஸ்திரேலியா இந்த தாக்குதல்களிற்கு ஆதரவு வழங்கியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை ஜனாதிபதியும் இந்திய வெளிவிவகார அமைச்சரும் கலந்துகொண்ட நிகழ்வில் உரையாற்றிய அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் சீனா போன்ற விஸ்தரிப்பு சக்திகள் இந்து சமுத்தி பிராந்தியம் குறித்து அதிக ஆர்வம் காட்டுவதால் செங்கடல் நிலைபோன்ற ஒன்று இந்து சமுத்திரத்தில் ஏற்படலாம் என தெரிவித்துள்ளார்.

தாய்வான் மலாக்காநீரிணை போன்றவற்றினால் மூளக்கூடிய மோதல்கள் மிகவும் ஆபத்தானவையாக காணப்படும் என தெரிவித்துள்ள பெனிவொங் மோதல் என தெரிவிக்ககூடிய ஏனைய மோதல்கள் குறித்தும் கரிசனை வெளியிட்டுள்ளார்.

இந்துசமுத்திரத்தின் ஊடாகவே உலகின் சரக்குகப்பல் போக்குவரத்தும் உலகளாவிய எண்ணெய் ஏற்று மதியும் பெருமளவிற்கு இடம்பெறுகின்றது என தெரிவித்துள்ள அவர் கடற்கொள்ளை சர்ச்சைகள் குழப்பங்கள் காரணமாக பாதிப்பு ஏற்பட்டால் சர்வதேச அளவில் பாரிய பாதிப்பு ஏற்படும் செங்கடல்



விடயத்தில் இதனை அவதானிக்க முடிந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

# எவ்-35 போர் விமானப் உதிரிப்பாகங்களை இசுரவேலுக்கு ஏற்றுமதி செய்யத் தடை விதித்தது நெதர்லாந்து நீதிமன்றம்!

பெப்ரவரி 12, 2024

காசாவில் இசுரவேல் படைகளின் இராணுவத் தாக்குதல் குறித்த கவலைகள் காரணமாக இசுரவேலுக்கான எவ்-35 போர் ஜெட் பாகங்களின் அனைத்து ஏற்றுமதிகளையும் நிறுத்த வேண்டும் நெதர்லாந்து அரசாங்கத்திற்கு என நெதர்லாந்து மேல் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஏற்றுமதி செய்யப்பட்ட எவ்-35 போர் விமானங்களின் பாகங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கடுமையான யுத்த மீறல்களில் பயன்படுத்தப்படும் தெளிவான ஆபத்து உள்ளது என்பதை மறுக்க முடியாது என்று நீதிபதி பாஸ் போலே தீர்ப்பில் கூறினார்.

இசுரவேல் தனது தாக்குதல்களை நடத்தும்போது பொதுமக்களுக்கு ஏற்படும் விளைவுகளைப் பற்றி போதுமான அளவு கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை நீதிமன்றம் கூறியது.

இந்த தீர்ப்பை நிறைவேற்றிய ஏழு நாட்களுக்குள் நெதர்லாந்து அரசாங்கம் இந்த உத்தரவுக்கு இணங்க வேண்டும் என்று ஹேக்கில் உள்ள மேல்முறையீட்டு நீதிமன்றம் கூறியது.

எவ்வாறாயினும், இந்த உத்தரவை எதிர்த்து நெதர்லாந்தின் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவதாக நெதர்லாந்து அரசாங்கம் தெரிவித்துள்ளது.

காஸாவில் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்று இசுரவேல் மறுத்துள்ளது.

Oxfam's Dutch affiliate, PAX மற்றும் The Rights Forum ஆகிய மூன்று மனித உரிமை குழுக்களால் கடந்த ஆண்டு நெதர்லாந்து அரசாங்கத்திற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.

இசுலாமியப் போராளிக் குழுவான ஹமாஸுக்கு எதிரான போரில் இசுரவேல் செய்யும் போர்க் குற்றங்களுக்கு நெதர்லாந்து உடந்தையாக இருக்கும் என்பதால், போர் விமானத்தின் பாகங்களை வழங்குவதால், ஏற்றுமதி உரிமத்தை மறுமதிப்பீடு செய்ய வேண்டும் என்று குழுக்கள் வாதிட்டன.



# டிரம்ப் ஜனாதிபதியானால் அமெரிக்காவை நேட்டோவிலிருந்து வெளியேற்றுவார்!

பெப்ரவரி 13, 2024

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றால் அவர் அமெரிக்காவை நேட்டோவிலிருந்து விலக்குவார் என டிரம்பின் முன்னாள் ஆலோசகர்கள் தெரிவித்துள்ளார்.



நேட்டோ அமைப்பின் வரவு செலவு திட்டத்திற்கு நிதி வழங்காத உறுப்பு நாடுகளிற்கு எதிராக ரஸ்யா தாக்குதலை மேற்கொள்ளவேண்டும் என்ற டிரம்பின் கருத்தினால் அமெரிக்காவில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ள அதேவேளை மீண்டும் ஜனாதிபதியானால் டிரம்ப் நேட்டோவிலிருந்து அமெரிக்காவை விலக்கிக்கொள்வார் எனமார்ச் மாதம் வெளியாகவுள்ள நூலில் டிரம்பின் முன்னாள் ஆலோசகர்கள் தெரிவித்துள்ளனர்.

வல்லரசுகளின் மீள்வருகை The Return of Great Powers என்ற தனது நூலில் டிரம்ப் மற்றும் பைடன் நிர்வாகத்தில் உயர் அதிகாரியாக பணியாற்றிய ஒருவர் இதனை தெரிவித்துள்ளார்என சிஎன்என் செய்தி வெளியிட்டுள்ளது.

டிரம்ப் பைடனை தோற்கடித்தால் அமெரிக்கா நேட்டோவிலிருந்து வெளியேற்றப்படும் என அவர் சிஎன்என்னிற்கு தெரிவித்துள்ளார்.

நேட்டோ உண்மையான நெருக்கடிக்குள் தள்ளப்படும் என ஜோன்பொல்டன் தெரிவித்துள்ளார்.

டிரம்ப் நேட்டோவிலிருந்து வெளியேற முயல்வார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேட்டோவை ஒரு பயனுள்ள அர்த்தமுள்ள விடயமாக டிரம்ப் கருதவில்லை என டிரம்பின் வெள்ளை மாளிகை பிரதானியாக பணியாற்றிய ஓய்வுபெற்ற ஜெனரல் ஜோன்கெலி அந்த நூலில் தெரிவித்துள்ளார்.




டிரம்ப் தென்கொரியாவிலும் ஜப்பானிலும் அமெரிக்க படையினரை நிலைகொள்ளச்செய்திருப்பதை கடுமையாக எதிர்க்கின்றார் என தெரிவித்துள்ள ஜோன்கெலி விளாடிமிர் புட்டினும் கிம்ஜொங் அன்னும் சரியான நபர்கள் என டிரம்ப் கருதினார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடகொரியாவை அமெரிக்காவே தனிமைப்படுத்திவிட்டது என டிரம்ப் கருதினார் எனவும் கெலி அந்த நூலில் குறிப்பிட்டுள்ளார்.

# இடம்பெயரும் உயிரினங்களில் ஐந்தில் ஒரு பகுதி அழிந்து போகும் அபாயம்!

ஐ.நா. அறிக்கை

பெப்ரவரி 14, 2023

காலநிலை மாற்றம் மற்றும் மனித செயற்பாடுகளின் விளைவாக உலகில் இடம்பெயரும் உயிரினங்களில் ஐந்தில் ஒரு பகுதி அழிந்து போகும் அபாயத்தில் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயரும் மிருகங்கள் பற்றிய அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் 100 கோடி விலங்குகள் பாலைவனங்கள், சமவெளிகள் அல்லது பெருங்கடல்கள் வழியாக இனப்பெருக்கம் மற்றும் உணவுகளை தேடி இடம்பெயர்வை மேற்கொள்கின்றன.

இந்நிலையில், இடம்பெயரும் உயிரினங்களின் மீது திணிக்கப்படும் நீடிக்க முடியாத அழுத்தங்கள் அவற்றின் எண்ணிக்கையை குறைவடைய செய்வதோடு, உணவு விநியோகத்தை சீர்குலைத்து வாழ்வாதாரத்தை அச்சுறுத்துகிறது என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் ,

1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் இடம்பெயரும் விலங்குகளை பாதுகப்பதற்கான மாநாட்டில் 1,189 இனங்கள் இருப்பதாக பட்டியலிடப்பட்டது. அதில் 44 சதவீதம் குறைவடைந்துள்ளதோடு, 22 சதவீதம் முற்றிலும் அழிந்துவிடும்.

இந்த தரவினை 1970 முதல் 5,000 க்கும் மேற்பட்ட உயிரினங்களின் எண்ணிக்கையை ஒருங்கிணைக்கும் இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் (IUCN) மற்றும் உலகளாவிய உயிரியல் பன்முகத்தன்மையின் நிலையைக் குறிக்கும் லிவிங் பிளானட் இன்டெக்ஸ் (எல்பிஐ) வழங்கிய மதிப்பீடுகள் மற்றும் தரவுகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

வேட்டையாடுதல், மீன்பிடித்தல் மற்றும் பிற வகையான அதீத சுரண்டல் உள்ளிட்ட செயல்பாடுகளால், மனிதர்கள் மிகப்பெரிய அச்சுறுத்தலாக உள்ளனர், இதனால், ஐக்கிய நாடுகள் சபையின் பட்டியலில் உள்ள 70 சதவீதமான உயிரினங்கள் பாதிப்படைகின்றன.

வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களால் வறட்சி அல்லது காட்டுத் தீ போன்றவை வானிலையில் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக இடம்பெயர்வு காலத்தை சீர்குலைக்கிறது.

இதேவேளை, வாழ்விடங்கள் அழிந்து வருவதால் 75 சதவீதமான உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இது தனிமைப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் கட்டமைப்புக்கு இடையே அதிக இணைப்பு தேவை என்பதை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அணைகள், குழாய்கள் அல்லது காற்றாலைகள் போன்ற உள்கட்டமைப்பை நிறுவும் போது வாழ்விடங்கள் மற்றும் இடம்



பெயர்வு பாதைகளை சீர்குலைப்பதைத் தவிர்க்குமாறு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய உலகளாவிய உயிர்ப்பல்வகைமை ஒப்பந்தத்தின் கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் உலகின் 30 சதவீதமான நிலம் மற்றும் கடல் பிரதேசங்களை இயற்கைக்காக ஒதுக்கி வைப்பதற்கான 2022 ஆம் ஆண்டு உறுதிமொழியை மதிக்குமாறு வலியுறுத்தியுள்ளது.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgagecliniccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER=RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதிபூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பர்”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள், கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல. அவர்களது பங்களிப்பு அளப் பரியது என்றுதான் சொல்வேன். இலைமறைகாயாக இருந்து விடுதலைப் போராட்டத்திற்கு தோள் கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்றுதான் அழைக்க வேண்டும்.

நீண்ட காலமாகவே போராட்டத்தின் பெரும் பளுவை பொதுமக்களே சுமந்து வருகின்றார்கள். சாவும், அழிவும், பசியும், பட்டினியும், இரத்தமும், கண்ணீருமாக எமது மக்கள் எதிர் கொண்ட தங்கொணாத் துன்பத்தைச் சொற்களில் சித்தரிக்க முடியாது.

உலகில், எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொது சனங்களே. ஏனென்றால் அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தை விடப் பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகிறார்கள். ஆனால் இந்த முயற்சிகள் ஒரு பொழுதும் வெற்றியளிப்பதில்லை. மக்களின் விடுதலை உணர்வை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது. உலக வரலாறு பகரும் உண்மை இது. ஏனென்றால், விடுதலை உணர்வே மனித ஆன்மாவின் சாரமாக, உயிர் மூச்சாக இயங்குகிறது. மனித வரலாற்றை இயக்கும் மகத்தான சக்தியும் அதுவே.

சிங்களப் பேரினவாத அடக்குமுறையானது எமது மக்களுக்கு சாவையும், அழிவையும் தாங் கொணாத்துயரையும் கொடுத்த போதும் என்றுமில்லாத வகையில் தேசியப் பற்றுணர்வையும் சுதந்திர தாகத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது. தமிழரின் தேசிய ஆன்மாவை விழித்தெழச் செய்திருக்கின்றது.

இந்தச் சுதந்திர அறைகூவல் எமது எதிரியின் காதுகளுக்கு எட்டாமல் இல்லை. சீற்றம் கொண்ட பூகம்பத்தின் குமுறலாக எழும் எமது இனத்தின் எழுச்சிக்குரலை சிங்கள தேசமும், சர்வதேச சமூகமும் அசட்டை செய்யமுடியாது. இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பார்கள். இந்த வரலாற்றின் படைப்பாக, எமது தேசிய மண், ஒரு சுதந்திர பூமியாக பிறப்பெடுக்கும் என்பது திண்ணம்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்


உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


அழைப்பிதழ்
சொற்கோ வி.என். மதிஅழகன்
தமிழ் ஒலிபரப்பில்
பொற்காலப் பதிவு
நூல் அறிமுகவிழா
காலம் :
23.03.2024 (சனிக்கிழமை) பிற்பகல் 2.00 மணி
இடம் :
ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபம்
SCARBOROUGH CIVIC CENTRE AUDITORIUM
300 Borough Drive ON.M1P 4N7
மேற்படி நிகழ்வு கனடா தமிழ்
எழுத்தாளர் இணையத்தின் ஆதரவில்
பல்கலைவித்தகர் அகணி சுரேஸ்
(தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்)
அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கின்றோம்
நூல் அறிமுகவிழாவில் பங்கேற்று சிறப்பிக்க
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நன்றி
அன்புடன்
வி.என். மதிஅழகன்
மற்றும்
விழா ஒருங்கமைப்பாளர்கள்


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி

# நீங்கள் நீங்களாகவும் நாங்கள் நாங்களாகவும் முடியுமானால் நண்பர்களாகவும்



எத்தனை தடவையென்று சொல்லியாயிற்று
ஏற்பதாயில்லையே நீங்கள்.
அபசுரம் விழுத்தும் ஒரு அதிகாரப்பாடலைப் பாடியபடி
சபையேறிப் பிரசங்கிக்கின்றீர்கள்.
உங்களைக் கைதட்டி வரவேற்கவும் சிலர்
எம்மிடையேயும் உளர்.
உங்கள் கொற்றக் கோலோச்யிசத்தின்
கடைக்கூற்றிற்தான்
குடை – கொடி – ஆலவட்டங்களும்
யானை – குதிரை – தேர்ப்பவனிகளும்
இனி இல்லையென்றாகும் றுகுணு மன்னர்களுக்கு.
எம்மை ஆண்டனுபவிக்கும் பொசிப்பிழந்து
வற்றப்போகிறது உங்கள் வம்சம்பொய்கை.
எத்தனை தடவையென்றுதான் சொன்னோம்
நீங்கள் ஏற்பதாயில்லையே.
ஒன்றான காணி உரிமையாளரெலும்
சோந்தை மறுத்து
நீவிர் வேலியரக்கும் போதிலெல்லாம் சொன்னோமே
வேண்டாம் இந்த விளைவிளையாட்டென்று
எவரும் கேட்பதாயில்லையே.

உங்கள் அழகிய ஊர்களை நாமறிவோம்.
மலையும்
மஞ்சள் வெய்யிலும்
பாதாதிகேசம் வருடும் குளிர்ந்த காற்றும்
இடையொடித்து நடைபயிலும் குமரிவனப்பில்
உடல் வளைத்துவரும் கங்கைகளும்
பச்சென்றிருக்கும் பன்னீர்மரங்களும்
கொக்குகள் தவமிருக்கும்கு குயிற்தோப்புகளும்
அம்சம் நிறைந்த அழகு மயில்களும்
ஊருக்கே குடைவிரித்த அரசமரமும்
அதன் கீழே சித்தார்த்தனின் அனந்தசயனமும்
எல்லாமும் எமக்குமென்றிருந்த சொந்தத்திற்தானே
இடி விழுத்தினீர்.

திரும்பத் திரும்பச் சொல்லியாயிற்று
ஏற்பதாயில்லையே நீங்கள்.
போதும் உங்கள் முன்னான மன்றாட்டம்
போதும் நீங்களெம் கழுத்திற் பூட்டிய நுகத்தடி.
போதும் நரகில் உழலும் நம் வாழ்வு
இனியும் வேண்டாம் உம்மோடான இணைப்பு.
சிறுநீரகம் செயலிழந்து போனது
அறுவைச்சிகிக்சைக்கு அனுமதியளிப்போம்.
எல்லைபோடும் இடங்களைக் குறித்து
பிள்ளைப்பங்கைப் பிறிவிடல் செய்வோம்.
அப்பத்தைப் பங்கிடப் பூனையை அழைக்க வேண்டாம்.
உலாந்தாக்களை எமக்குள்ளேயே தீர்மானிப்போம்.
மலைகளை நீங்களே வைத்திருங்கள்.
பனைகளை எமக்கெனத் தந்துவிடுங்கள்.
மகாவலிகங்கை உங்களுக்கென நுசித்துக்கொள்கிறோம்
மீன்பாடும்வாவி எமக்கென ஏற்றுக்கொள்ளுங்கள்.
சிவனொளிபாதம் உங்களுக்கு
திருகோணமலை எங்களுக்கு
ஆண்மையற்றவன் மனைவியைச் சந்தேகிப்பதுபோல
நீங்கள்தரும் உத்தரிப்பு வேண்டாம் இனியும்
விவாகரத்தை விரைவுபடுத்துவோம்.
நீங்கள் நீங்களாகவும்
நாங்கள் நாங்களாகவும்
முடியுமானால் நண்பர்களாகவும் இருக்க முற்றசிப்போம்.

-புதுவை இரத்தினதுரை

எரிமலை யூலை -அகத்து 2008




# 1961 பெப்ரவரி சாத்வீகப் போராட்டம்!







1960ம் ஆண்டு ஆடி மாதம் இடம் பெற்ற இலங்கையின் 5வது பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தோற்கடிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் 75 ஆசனங்களைப் பெற்ற சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க பிரதமந்திரியாக தெரிவு பெற்றார். இவரது கணவரான காலஞ்சென்ற பண்டாரநாயக்காவுடன் தந்தை செல்வா 1957ல் செய்துகொண்ட உடன்பாட்டிற்கு முரண்படும் வகையில் சிங்கள மொழியைத் திணிக்கும் முயற்சியில் ஈடுபடலானார்.

பிரதமராக நியமிக்கப்பட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா போதிய அரசயில் அனுபவமற்றவர். அவர் தமது உறவினரான பிலிப்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் முடிவுகளுக்கு ஒப்பம் போடும் ஒருவராகவும் எத்தகைய முடிவுகளுக்கும் மறுப்புத் தெரிவிக்காதவராகவுமே இருந்தார். திரு பிலிஸ் டயஸ் பண்டாரநாயக்கா, 1961ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் சிங்கள மொழியை அரச கரும மொழி என்ற அடிப்படையில் இலங்கைத் தீவு முழுவதும் வெளியிட்டார்.

இதன் முதற்கட்டமாக சிங்கள சிறீ எழுத்துப் பொறிக்கப்பட்ட ஊர்திகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பிவைக்க இலங்கை அரசாங்கம் முடிவு செய்தது. இதற்கு இலங்கை தமிழரசுக்கட்சி தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டது. இதற்கு எதிராக வெகுஜன எழுச்சிப் போராட்டங்களை நடத்தப்போவதாகவும் அறிவித்தது. அதன் படி செயற்பாட்டுத்திட்டங்களும் வகுக்கப்பட்டன.

நீதிமன்ற மொழி சிங்கள மொழி

ஒருபுறத்தே பீலிக்ஸ் டயஜ் பண்டாரநாயக்கா உத்தியோக மொழி அறிவிப்புச்செய்ய மறுபுறம் அப்போதைய நீதியமைச்சர் சி. பெர்ணாண்டோ நீதிமன்ற மொழி மசோதாவை பாராளுமன்றில் சமர்ப்பித்தார். இம் மாசோதாவில் இலங்கைத்தீவு முழுமைக்கும் நீதிமன்ற மொழியாக சிங்கள மொழி இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

1960ம் ஆண்டு நவம்பர் மாதம் இறுதிவாரத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நீதி மன்ற மொழி மசோதா 30.11.1960 அன்று பாராளுமன்றத்தில் முழு நாளும் விவாதிக்கப்பட்டது. வடக்கிலும் - கிழக்கிலும் தமிழ் மொழியும் நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தங்கள் யாவும் பேரினவாதிகளால் முற்றாக நிராகரிக்கப்பட்டன. எத்தனை தியாகம் வேண்டும். திருமதி சிறிமாவின் அரசின் முடிவைக்கண்டித்து 31.12.1960 அன்று ஒரு அறிக்கையைத் தந்தை செல்வா விடுத்தார்.

அந்த அறிக்கையில் தமிழின ஒழிப்புக்கு எதிராக தமிழ்மக்கள் தமது பலமான எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டும் என்றும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் எத்தகைய துன்பங்களை எதிர் காலத்தில் சந்திக்க வேண்டிவரினும் அவற்றை எதிர்கொள்ள மிகப்பெரிய தியாகங்களைச் செய்யத்தயாராக இருக்க வேண்டும் என்றும் அவர் அறிக்கையில் குறிப்பிட்டார். மேலும் நீதிமன்ற மொழி நிராகரிப்புக்கு எதிராகவும் பேரினவாதிகளின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தமிழ்பேசும் மக்களது எதிர்ப்பைக்காட்டு முகமாக 02.01.1961 அன்று தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கு எங்கும் ஹர்த்தால், கடையடைப்பு, பாடசாலை பகிஸ்கரிப்பு, அரச அலுவலகங்கள் மற்றும் தமிழ்ப் பிரதேச நீதிமன்றங்களில் பணிப்புறக்கணிப்பும் இடம்பெறும் என்றும் தந்தை செல்வா அறிவித்தார்.

இதன்படி அன்றை குறிப்பிட்டதினம் ஏற்பாடு செய்யப்பட்ட வடக்கு - கிழக்கு கடையடைப்பு ஹர்த்தால் என்பன பூரண வெற்றி பெற்றன. இவ்வெற்றி காரணமாக 21.01.1961ம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக்கட்சியின் ஏழாவது மாநில மாநாட்டுத் தீர்மானப்படி 1961 பெப்ரவரி மாதம் 18ம் திகதி வடக்குகிழக்கிலுள்ள கச்சேரிகள் அரச அலுவலகங்களின் வாசல்முன் மறியல் போராட்டமும் சத்தியாக்கிரகமும் செய்வதென்று முடிவு எடுக்கப்பட்டது.

சாத்வீகப்போராட்டமும் இராணுவ அடக்குமுறைகளும்



1961ம் ஆண்டு திட்டமிட்டபடி இலங்கைத் தமிழரசுக்கட்சியால் பெப்ரவரி மாதம் 18ம் திகதி யாழ்ப்பாணம் பழைய கச்சேரி வாசலில் சாத்வீகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது பின்னர் படிப்படியாக தமிழர் தாயகம் எங்கும் விரிவாக்கப்பட்டது. யாழ்ப்பாணம் கச்சேரிவாசலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சித்தலைவர் தந்தை செல்வநாயகம் தலைமைதாங்கினார். தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் தா. சிவசிதம்பரமும் கலந்துகொண்டார். வல்வெட்டித்துறையிலிருந்து கைக்குழந்தைகளோடு தயாமார்களும் பல பொதுமக்களும் கலந்துகொண்டனர். மாதர் அணிகள், இளைஞர் அணிகள், மாணவ அணிகள், தொழிலாளர்கள் ஊழியர்கள் துறைசார் உத்தியோகஸ்தர்கள், விவசாயிகள், மதகுருமார்கள் என எல்லாத்தரப்பினரும் தமது சொந்தக்கிராமங்களிலிருந்து ஊர்வலமாக வந்து கலந்துகொண்டனர்.

புங்குடுதீவு பெரியார் ஏரம்பமூர்த்தி மாஸ்டர், வல்வெட்டித்துறை ஞானமூர்த்தி ஐயா, உடுப்பிட்டி சிவசம்பு, கரவெட்டி தாமரைக்குளம் செல்லையா, அரியாலை கணபதிப்பிள்ளை மாஸ்டர், அத்தியடி சதாசிவம், உடுவில் முத்துலிங்கம், இணுவில் இராசையா மாஸ்டர், அளவெட்டி சிறிமுருகன், கொக்குவில் அருணாசலம் என கிராமம் கிராமமாக தமிழ் உணர்வாளர்கள் மக்கள் மத்தியில் பரப்புரைசெய்ததோடு சத்தியாக்கிரகிகளையும் அழைத்து வந்து தாமும் கலந்துகொண்டனர். மக்கள் மத்தியில் தமிழ் உணர்வும் உரிமைப் போராட்டவேட்கையும் மேற்கிளம்பியது. ஏனைய மாவட்டங்களின் நிலைமைகள். யாழ்ப்பாணம் கச்சேரியில் ஆரம்பிக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டம். படிப்படியாக ஏனைய மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.





மட்டக்களப்பு கச்சேரிவாசல் பட்டிருப்புத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் மட்டு எம்.பி. இராசதுரை, அறப்போர் அரியநாயகம், கல்குடா தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கே. டபிள்யூ, தேவநாயகம் முதலானோர்களோடு பெரும் தொகையான சமயத்தலைவர்களும் சமூகத்தலைவர்களும் பங்குபற்றினார்கள்.

இதே போல திருகோணமலை கச்சேரிவாசலில் பாராளுமன்ற உறுப்பினர் என். ஆர். இராஜவரோதயம், மூதூர் முதல்வர் ஏகாம்பரம் முதலான தலைவர்கள் தலைமையில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் பெகுஜன எழுச்சியை ஏற்படுத்தியது.

இதே போல மன்னார் கச்சேரி வாசலில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு மன்னார்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு வீ. ஏ. அழகக்கோன் தலைமை தாங்கினார். அங்கு திருக்கேதிஸ்வர ஆலய பரிபாலனசபைத்தலைவரும் ஐ.தே.க பிரமுகருமான சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களும் மற்றும் பல சமூகத்தவர்களும் மதத்தலைவர்களும் பங்குபற்றினார்கள்.

இதே போல வவுனியாக் கச்சேரிவாசலில் இடம்பெற்ற சத்தியாக் கிரகப் போராட்டத்திற்கு அப்போதைய தமிழரசு, காங்கிரஸ் கட்சிப் பிரமுகர் தா. சிவசிதம்பரம் அடங்காத்தமிழர் முன்னணித் தலைவர் சி. சுந்தரலிங்கம் அவர்களும் மற்றும் பலரும் கலந்து கொண்டார்கள். இப்படியாக எழுச்சியுடன் வடக்குக்கிழக்கு மாகாணம் எங்கும் இடம்பெற்ற இந்த வெகுஜன எழுச்சிப் போர். கிராமம் கிராமமாக நகரங்கள் தோறும் உரிமைப் போராட்ட உணர்வுகள் உந்தித்தள்ளியது. இதே வேளையில் அப் போதைய செனட்சபையில் உரையாற்றிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது அரசாங்கம் கடந்த மூன்று மாத காலமாக வடக்கு கிழக்கில் செயலற்றுப் போய்விட்டது என்றும் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளின் பார்வையில் இப்போராட்டம்




1961ம் ஆண்டு இடம்பெற்ற இந்த சாத்வீக வெகுஜன எழுச்சிப் போர்பற்றி விடுதலைப்புலிகள் தமது நூல் ஒன்றில் பின்வரு மாறு குறிப்பிட்டுள்ளார்கள். “1961ம் ஆண்டில் தமிழீழ அரசியல் அரங்கில் பிரவாகமெடுத்த சாத்வீகப்புரட்சி வெள்ளம் எமது விடுதலைப்போராட்ட வரலாற்றில் ஒரு மகத்தான வரலாற்று நிகழ்வாகும், சத்தியாக்கிரகமாக ஒத்துழையாமை இயக்கமாக வெடித்த அரசியல் கிளர்ச்சி. மாபெரும் தேசிய எழுச்சியாக உருவம் எடுத்தது. ஒன்றுபட்ட மக்களின் எதிர்ப்பு. இயக்கமாக அது வடிவம்பெற்றது.” (ஆதாரம் “சோசலிசத் தமிழீழம்” பக்கம் 06)

தனியான தமிழ்த் தபாற்சேவை




இலங்கை அரசின் நிர்வாகச்சட்டங்களை மீறி நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பரிமாணங்கள் மேலும் வீச்சுப்பெற வேண்டும் என விரும்பிய முன்னாள் ஊர்காவற்துறை பாராளுமன்ற உறுப்பினர் நாட்டுப்பற்றாளர் வி. நவரத்தினம் அவர்கள் இலங்கையின் தபாற்சட்டங்களை மீறி மத்திரையும் கடித உறைகளையும் தபால் அட்டைகளையும் வெளியிடும் ஒரு இயக்கத்தை நடைமுறைப்படுத்த ஆலோசனை வழங்கினார் தந்தை



செல்வா அதனை ஏற்றுக்கொண்டார். தபால் மா அதிபராக செனட்டர் சுப்பிரமணியம் நடராசா என்பவர் நியமிக்கப்பட்டார். பல இடங்களுக்கும் தொண்டர்கள், தமிழ்தபால் முத்திரை ஒட் டப்பட்ட தபால்களை விநியோகம் செய்தனர். அப்போதைய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் எம் சிறிகாந்தாவுக்கு முதல் தபால் உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் வி. தர்மலிங்கம் அவர்களால் வழங்கப்பட்டது. இப்படியாக இந்த சட்டமறுப்பு போராட்டம் மேலும் மேலும் விரிசலாக்கப்பட்ட நிலை கட்டுக் கடங்காமல் போவதையும் அடக்கு முறைகளை மக்கள் உடைத் துக் கொண்டு ஊர்வலம், ஆர்ப்பாட்டம் என ஈடுபடுவதையும் அவதானித்த திருமதி சிறிமாவோ அம்மையாரும் அவரது ஆலோசகரும் அமைச்சருமான பீலிக்ஸ் டயஜ் பண்டாரநாயக் காவும் முப்படைகளின் தளபதிகளையும் அழைத்து மாநாடு கூட்டினார்கள். இம்மகாநாட்டின் முடிவில் நாடுமுழுவதும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதென் றும் யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவது என்றும் கடுமையான நடைமுறை களைப் பின்பற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.





இராணுவமயமானது தமிழர் தாயகம்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தை நசுக்குவதற்காக யாழ்ப்பாண மாவட்ட கட்டளை அதிகாரியாக நியமனம் பெற்ற கேணல் ரிச்சர்ட் உடுகம தலைமையில் ஒரு படையணி அங்கு அனுப்பிவைக்கப்பட்டது. மட்டக்களப்புக்கு இராணுவ அதிகாரியான லெப். கேணல் கிராமநாயகாவை அனுப்பிவைத்தது. திருகோணமலைக்கு இராணுவ அதிகாரி லெப். கேணல் எல்.என். விக்கிரமசூரிய தலைமையில் ஒரு இராணுவப்படை அனுப்பப்பட்டது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கு



இராணுவ மேஜர் ரி.எஸ். பி. சாலி தலைமையில் ஒரு படை அங்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதேவேளை 17.04.1961 அன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அப்போதைய இலங் கையின் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் விஜயகோன் யாழ்ப்பாணத்தில் இருந்த சகல படைகளையும் தனது நேரடிக் கண்காணிப்பில் கொண்டு வந்தார். இதன்படி தமிழர் தாயக மான வடக்குக் கிழக்கில் உள்ள சகல தமிழ் மாவட்டங்களிலும் இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு இராணுவ இரும்புப் பிடிக்குள் வைக்கப்பட்டார்கள். தமிழர் தலைவர்கள் யாவரும் கைதுசெய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்கள். இவ் வாறாகத் தமிழ்பேசும் மக்களது நியாயமான கோரிக்கைகளை யும் இராணுவரீதியாக ஒடுக்கியதோடு இராணுவத் தலைமை களிடம் சிவில் நிர்வாகமும் ஒப்படைக்கப்பட்டது. அன்றைய காலம் தொடக்கம் இற்றைவரை கொடூரமான இராணுவ ஆட்சி இன்னும் தொடர்கிறது. தமிழ் மக்களது பிறப்புரிமைகள் சுய நிர்ணய உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு இராணுவ சப்பாத் துக்களின் கீழ் மதிபடும் அவலநிலையை பேரினவாதம் வியா பித்து விட்டுள்ளது. இதற்கு எதிராக மக்கள் மயப்படுத்தப்பட்ட தேசிய விடுதலைப்போராட்டம் முனைப்படைந்து எழுந்து நின்றது.







நன்றி: பொன் பூலோகசிங்கம் - எரிமலை பெப்ரவரி 2007




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# உடும்பன்குளம் படுகொலை 19.02.1986

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக்கள் விவசாய நிலங்களில் அறுவடை செய்யும் காலமாகும். உடும்பன் குளத்தில் தங்களது வயல்களில் நூற்றுக்கணக்கான குடம்பங்கள் கொட்டகை அமைத்து வயல் வேலைகள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்து தமது அறுவடையினை முடித்துககொண்டு நெல் மூட்டைகளுடனேயே திரும்புவது வழக்க மாகும். இவ்வாறே 1986ஆம் ஆண்டு மாசி மாதமும் வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுடன் தங்கி யிருந்து வயலில் அறுவடை செய்து கொண் டிருந்தார்கள். 1986.02.19 அன்று காலை 6.30 மணியளவில் கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங் களில் வந்த இராணுவத்தினரால் உடும்பன் குள வயல்களில் அறுவடை செய்து கொண் டிருந்தவர்களும், அங்கு தங்கியிருந்தவர் களும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டு கைகள், கண்கள் கட்டப்பட்டார் கள். இவ்வாறு கைது செய்தவர்களில் பெண்கள் இராணுவத்தினராற் பாலியல் வல்லுறவிற்குட்படுத் தப்பட்டார்கள். ஆண் களின் ஆண் உறுப்பு வயலில் நெல் வெட்டு வதற்கு பயன்படுத்தப்படும் அரிவாளினால் வெட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள் பலர் இராணுவத் தினரின் துன்புறுத்தலினாலேயே தமது உயிரினை இழந்தார்கள். பின்னர் எஞ்சியிருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்ததுடன், அவர்களின் உட லினை அறுவடை செய்யப்பட்ட நெற்சூட்டினுள் ஒன்றாகப் போட்டு எரித்தார்கள். இவ்வாறு 1986.02.19 அன்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயலில் வேலை செய்துகாண்டிருந்தவர்கள், வாடியில் தங்கியிருந்தவர்கள் என நூறறு முப்பத்து மூன்று பேரிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தார்கள். இவர்களில் ஒரு சிலர் பலத்த காயங் களுடன் உயிர் தப்பியிருந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து 21.02.1986 அன்று மட்டக் களப்பு பிரசைகள் குழு வணபிதா சந்திரா பெர்ணான்டோ, நாளேட்டாளர்கள் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று




அரைகுறையாக எரிந்த நிலையிலிருந்த தொண்ணூற்றெட்டுப் பேரினது உடல்களை எடுத்து அடக்கம் செய்தார்கள். உடும்பன் குளத்தில் வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்கள் மீதான தாக்குதலை நடத்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக லெப்டினன்ட் சந்திரபால தலைமை தாங் கினார். இச்சம்பவத்தில் இராணுவத்தினருடன் இணைந்து முசுலிம் குழுக்களும் தாக்குதல் களை நடத்தியிருந்தார்கள்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. இராசையா தவேந்திரன் 18
02. இராமசாமி கந்தையா 48
03. ந.கோபாலகிருஸ்ணன் -
04. ந.விநாயகமூர்த்தி –
05. க.பாக்கியராசா –
06. கதிரேசபிள்ளை வைரமுத்து –
07. குமரவேல் நாகராசா 27
08. கணேசமூஉத்தி பேரின்பன் 28
09. கணேசபிள்ளை மோகனராசா 22
10. கணபதி வடிவேல் 27
11. பத்மநாதன் –
12. மைலன் தியாகராசா 18
13. த.உமன் 22
14. தாசப்பு செபமாலை –
15. தாசப்பு செல்லையா –
16. துரை இராமலிங்கம் -
17. தம்பிப்பிள்ளை குமாரவேல் -
18. மயில்வாகனம் தியாகராசா. 13
19. மார்க்கண்டு ரவீந்திரன் -
20. முத்துப்போடி சுமனாவதி –
21. முத்துசாமி முத்துலிங்கம் -
22. மசன்னா ஜெயராஜ் -
23. ஆ.நல்லதம்பி –
24. ஆ.சோமசுந்தரம் -
25. பொன்னன் இராசதுரை –
26. பொன்னம்பலம் யோகராசா 18
27. சோமசுந்தரம் கருணாநிதி 21
28. வெங்கிட்டன் குழந்தை –
29. ஞானமுத்து புவனேந்திரன் -
30. சுந்தரம் சின்னவன் 20
31. சீனித்தம்பி –
32. சீனித்தம்பி தவநாகன் 30
33. சீனித்தம்பி அருள்செல்வன் 18
34. சில்வஸ்ரர் இன்னாச்சி 32
35. சுவாமி டேவிட் 29
36. வயிரமுத்து சுந்தரலிங்கம் -
37. வர்ணகுலசிங்கம் புண்ணியமூர்த்தி 21
38. விஸ்வகேது இராசா 23
39. ரங்கன் போல் -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை.

# வங்காலை படுகொலை 17.02.1991

வங்காலைக் கிராமமானது, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குத் திசையாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்த்தீவின் நுழைவாயிலிலுள்ள பாரிய சங்கிலிப் பாலமும் தொடருந்துப் பாலமும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை உண்டா கியதன் காரணமாக தாழ்வுப்பாட்டுக் கடற்கரையிலிருந்து கடல் வழியாக கற்பிட்டியூடாகக் கொழும்புக்கு மக்கள் பிரயாணம் செய்தனர். இந்நிலையில் வங்காலையைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளினால் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். வீடுகளிலிருந்து வெளியேறாதவர்களை இராணுவத்தினர் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு வீடு களிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தையும் சூறையாடினார்கள். வங்காலை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய செபமாலை அவர்களும் ஜஸ்டின் லம்பேட் என்ற வங்காலையைச் சேர்ந்த ஆசிரியரும் இன்னும் சிலரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகக் கற் பிட்டி வழியாக கொழும்பு சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு 16.02.1991 இல் படகில் தாழ்வுப்பாட்டுக்கு வந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து மறுநாள் 17.02.1991ன்று காலை பத்து மணிக்கு துவிச்சக்கர வண்டியில் வங்காலை வழி யாக காத்தான்குளம் சென்றார்கள். இவர்கள் வங்காலைப் பாடசாலைச் சந்திக்கு வரும்போது இராணுவத்தினர் செப மாலை (அதிபர்), ஜஸ்டின் லம்பேட் (ஆசிரியர்), சூசையப்பு (ஆசிரியர்), நவரட்ணம் குருவிக்கந்தையா ஆகியோருடன் ஒரு சிறுவனையும் தடுத்து நிறுத்தி கயிற்றினால் கைகளையும் துணியினால் கண்களையும் கட்டிவிட்டு சூசையப்பு ஆசிரியரைக் கத்தியால் குத்தினார்கள். பின்னால் வந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நேரிற் பார்த்துககொண்டு சென்று முருங்கன் பங்குத்தந்தையிடம் முறையிட்டனர். மறுநாளாகியும் கைது




செய்யப்பட்டவர்கள் வீடு திரும்பாததினால் உறவினர்களும் பங்குத்தந்தையும் தள்ளாடி இராணுவமுகாமிற்குச் சென்று உத்தரவுபெற்று அவர்களைத் தேடுவதற்கு வங்காலைக்கு வந்தபோது வங்காலைச் சந்தியிலிருந்து உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர். அப்படியிருந்தும் உறவினர்களில் இருவர் மட்டும் சென்று, சந்திக்கு அருகிலிருந்த பூர்சியல் பீரிஸ் ஆசிரியரின் பூட்டியிருந்த வீடு திறந்திருந்ததைக் கண்டு அதனுள் சென்றபொழுது அந்த வீட்டு அறைகளெல்லாம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. இரத்தத் தடயங்களின் வழியே சென்று பார்த்தபொழுது வீட்டின் பின்னாலிருந்த கிணற்றுக்குள் ஐந்து சடலங்களும் துண்டங்களாக்கப்பட்டுப் போடப்பட் டிருந்தது. எனினும் அப்போதைய சூழ்நிலையில் உடனடியாக சடலங்களை மீட்க முடியாதிருந்தது.

1993ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பூர்சியன் ஆசிரியரின் வீட்டிற்குப் சென்று பார்த்தபொழுது கிணறு மட்ட மாக்கப்பட்டிருந்தது. பூர்சியன் ஆசிரியரின் வீட்டுக் கிணற்றில் முன்னர் ஐந்து சடலங்கள் போடப்பட்டிருந்தன என்பதைக் காவற்றுறையினருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் உதவி யுடன் உயிரிழந்த ஐவரினதும் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன. பின்னர் ஐவரின் எலும்புக்கூடுகளும் மேலதிக பரிசோதனைகக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இனறு வரை இவை தொடர்பாக எந்த மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோனி கொபின்லெம்பேட் ஆசிரியர் 36
02. அந்தோனிப்பிள்ளை செபமாலை பாடசாலை அதிபர் 49
03. அப்புக்குட்டி கந்தையா கமம் 51
04. செபமாலை அந்தோனி விவசாயம் 30
05. சீமான் தற்குரூஸ் சூசையப்பு பாடசாலை உப அதிபர் 43

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

# வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு - 28.02.1991

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலா் பிரிவில் வட்டக்கச்சி என்னும் கிராமம் காணப்படுகிறது. இங்கு வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். அத்தோடு சிலா் பகுதிநேர நன்னீா் மீன்பிடி மற்றும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரதேசத்தில் “அரச நெற்பண்ணை” என்னும் பெயரில் நெல்வயல்கள் காணப்பட்டன. இங்கு வேலை செய்பவா்கள் தங்கி வேலை செய்வதற்காக வட்டக்கச்சி மூன்றாம் வாய்க்காற் பகுதியில் அரச நெற்பண்ணை விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர்கள் தங்கியிருந்தனா்.

28.02.1991ன்று காலை 7.00 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக விவசாயிகள் விடுதிகளில் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையில் விமானப்படையினரின் இரண்டு “பொம்பா்” விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றிவந்து மூன்று குண்டுகளை வீசியது. இதில் ஒரு குண்டு விடுதிக்குள் வெடிக்க மற்றைய இரண்டும் வயற்பிரதேசங்களிலும் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒன்பது போ் உயிரிழந்தனா். மூன்று போ் காயமடைந்தனா். உயிரிழந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் உடல்கள் சிதறுண்டு உருக்குலைந்துபோக ஏனைய மூன்று பேரின் உடல்களையும் காயப்பட்ட மூவரையும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து தம் உறவுகளை இழந்த நிலையில் அக்குடும்பங்கள் விடுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயா்ந்து சென்றன. இந்தச் சம்ப்பவத்தின் போது சம்பவ இடத்திலிருந்த்த இராமையா பரமசுந்த்தரம் அவா்க்கள் தெரிவித்ததாவது,

“நான் நெற்பண்ணையில் இருந்த வேளை 28.02.1991ன்ற பொம்மா் விமானம் வந்து குண்டு போட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒன்பது போ் கொல்லப்பட்டார்கள். மூன்று போ் காயமடைந்தார்கள். காயமடைந்தவா்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு போய் காப்பாற்றிவிட்டார்கள். இறந்தவா்கள் அனைவரையும் ஒரே குழியிற் போட்டு புதைத்தோம். இச்சம்பவத்தில் பண்ணையிலிருந்த கிட்டத்தட்ட நாற்பது ஆடுகள், இருபது கோழிகள் இறந்தன. அவற்றையும் மனித உடல்களுடன் ஒரே குழியிற் போட்டுப் புதைக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனென்றால் திரும்பவும் புக்காரா வந்து குண்டு போடுமோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு சா்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்து பார்வையிட்டுச் சென்றது. மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த இடத்தில் குண்டு போட்டதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் காலையில் தொழிலுக்குப் போகமுன் 7.30 மணியளவில் வந்து குண்டு போட்டால் எல்லோரும் இறப்பார்கள் என்ற திட்டம்தான். இன்று நேற்றல்ல, 1990ம் ஆண்டிலிருந்தே சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை கொலை செய்து கொண்டுதான் இருக்கிறது.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம்

01. இராசேந்திரம் சித்திரம்மா
02. நாகமுத்து ஆறுமுகம்
03. முனியாண்டி செல்வம்
04. முருகையா சுமதி
05. முருகையா சித்திரா
06. ஆறுமுகம் இராசேந்திரன்
07. ஆறுமுகம் கமலாதேவி
08. ஆறுமுகம் விஜயலட்சுமி
09. சின்னத்தம்பி உமாதேவி

# சுண்டிக்குளம் மீனவா் படுகொலை - 18.02.1994

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலா் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரசேத்திலுள்ள ஒரு மீனவா் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவா்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும். 18.02.1994 அன்று அதிகாலை 5:15 மணியளவில் இப்பகுதி மீனவா்கள் மீன் பிடிப்பதற்காகக் கட்டு மரங்களில் கடலை நோக்கிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த கடற்படையின் “டோறாப்படகு” மீனவா்கள் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை அங்கிருந்த மீனவா்கள் சிலா் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவா்கள் வலைகளை அறுத்து விட்டும் கரையை நோக்கிக் கட்டுமரங்களை நகா்த்திய வண்ணமும் இருந்தனா். கடற்படையினரோ மீனவா்களை நோக்கித் தொடா்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்க தங்கள் உறவுகள் மீன் பிடிக்கச் சென்றதை எண்ணி ஏங்கிக் கரையை நோக்கி ஓடி வந்து அவா்கள் பார்த்தவேளை கடற்படையின் டோறாப்படகு கடற்கரையை மிகவும் அண்மித்து வந்து மீனவா்களைச் சுடுவதைக் கண்டனா். தாக்குதலுக்கு இலக்காகி மீனவா்கள் கடல் நீரில் சோா்ந்து விழுவதைக்கண்டு மக்கள் கதறியழுதனா். கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவா்கள் கடலில் உயிரிழந்தனா். தாக்குதல் நடந்தன்று மூன்று பேரின் உடல்களே கிடைக்கப்பெற்றன. ஏனைய ஏழு பேரது உடல்களும் மறுதினமே கரையொதுங்கியன. இந்த தாக்குதலினால் பீதியுற்ற மீனவா்கள் சிலமாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவா்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனா்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயா் தொழில் வயது)

01. இயக்கோ கபிரியேல்பிள்ளை 29
02. இயக்கோப்பிள்ளை நிக்சன் 20
03. கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் 25
04. மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் 26
05. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை 46
06. அமிா்தநாயகம் யோன்பொ்னான்டோ 35
07. ஆசிா்வாதம் வினஞ்சேநிதிமரிசலின் 44
08. யேசுராசா அலோசியஸ் சாந்தகுமாா் 22

# கிராஞ்சி படுகொலை - 22.02.2008

**கிராஞ்சி படுகொலை – 22 பெப்பிரவரி 2008**

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசசெயலா் பிரிவிலுள்ள கிராஞ்சி சிவபுரம் என்னும் கிராமத்தின் முருகன் கோயிலுக்கு அருகாக உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது 2008 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் சிறீலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை, 04வயதுச் சிறுவன், அவா்களின் தாயார் மற்றும் ஆங்கில ஆசிரியா் ஒருவா் என எட்டுப் பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்படடனா். மேலும் படுகாயமடைந்த நிலையில் 12 பொதுமக்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனா். அவா்களில் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள 07 போ் உடனடியாக நோயாளா் காவுவண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனா். மறுநாள் பூமணி என்ற வயோதிபா் சிகிச்சை பலனளிக்காது மரணமானாா்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயா் வயது)

01. சசிகரன் கௌரிநாயகி, 34
02. சசிகரன் தமிழ்வேந்தன், 06மாதம்
03. சசிகரன் கஜீவன், 04
04. கதிரவேலு திருநீலகண்டன், 79
05. கிருஸ்ணசாமி சிவாநந்தி, 27
06. விஜயகுமாா் விதுஜா, 21
07. இந்திரன் லலிதா
08. சுதாகரன் சுமதி, 30
09. தா்மலிங்கம் பூமணி, 68

22.02.2008 அன்று கிராஞ்சியில் காணமடைந்தவா்களின் விரபம்

1. சசிகரன் காருன்னியன் (08)
2. சிறீபதி இராஜேஸ்வரி (33)
3. சத்தியநாதன் தேவநாயகி (43)
4. சதாசிவம் கமலாதேவி (60)
5. சுதாகரன் பானுசன் (06)
6. விஜயகுமாா் சிவாநந்தினி (36)
7. விஜயகுமாா் டினோசன் (21)
8. அருளாநந்தம் லீலாதேவி (68)
9. அருளாநந்தம் சத்தியவரதன் (43)
10. தேவநாயகி (43)
11. தா்மலிங்கம் பூமணி (68)
12. விஜயகுமாா் கிநோசன் (02)





**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.**





# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே "மகாவம்சம்"

# மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது

## இதுவரை சிங்களத்திலும் பாளி மொழியிலும் மட்டுமே அரசால் வெளியிடப்பட்டுள்ள மகாவம்சம் தொகுதிகள்

தொகுதி 1 – இலங்கையின் பண்டைய கி.பி. 301 வரை– மகாநாம தேரரால் எழுதப்பட்டது.
தொகுதி 2 – கி.பி. 301 முதல் கி.பி. 1815 வரையான ஆங்கிலேயரின் முழுக் கட்டுப்பாட்டில் வரும் வரை.
தொகுதி 3 – 1815 முதல் 1936 வரை.
தொகுதி 4 – 1936 முதல் 1956 பண்டாரநாயக்க ஆட்சியேறும் வரை.
தொகுதி 5 – 1956 முதல் 1978 ஜே. ஆரின் இரண்டாவது குடியரசு ஆட்சி தொடங்கும் வரை.
தொகுதி 6 – 1978 முதல் 2010 தமிழீழ விடுதலைப் போராட்டம் முடிந்த மகிந்த மீண்டும் ஆட்சியேறும் வரை.
ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சிக்காலப்பகுதி (1978 – 1989)
ஆர். பிரமதாச, டி.பி. விஜேதுங்க ஆட்சிக் காலப்பகுதி (1989 – 1994)
சந்திரிகா பண்டாரநாயக்க ஆட்சி காலப்பகுதி (1994 – 2005)
மகிந்த ராஜபக்ஷ ஆட்சிகாலப்பகுதி (2005 – 2010)




முதல் கள்ளத்தோணி விஜயன்




ஈழத்தின் பூர்வீக குடிகள்தமிழர்கள்




இந்தியாவில் தமிழர்கள் தவிர்த்து இலங்கையில் தமிழர்கள் தவிர்த்து நாம் எல்லோரும் ஒரே இனம் ஆரிய இனம் எனவே சிங்களவர்களும் இந்தியாவின் வட மாநில இந்தி இனத்தவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்

பிரசாத் கரியவசம்
19.03.2013 அன்று இந்தியாவில் பதிவு செய்த கருத்து

# தமிழரசுக் கட்சி ஒட்டுமா உடையுமா?

11.02.2024





தமிழரசுக் கட்சிக்குள் சுமந்திரன் அணியெனப்படுவது ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. அது தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்திலேயே இருக்கிறது. தமிழரசுக் கட்சியின் தொடக்கம் ஒப்பீட்டளவில் புரட்சிகரமானதாக இருக்கலாம். ஆனால் அதன் கடந்த 73 ஆண்டுகால வரலாற்றையும் தொகுத்துப் பார்த்தால் அக்கட்சியானது இலட்சியத்தில் சறுக்காத கட்சி என்று கருதத் தேவையில்லை. 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றி, தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் தமிழரசுக் கட்சியே முதன்மையானது. அவ்வாறு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நிறைவேற்றிய ஒரு கட்சி 1981இல் அதாவது ஐந்து ஆண்டுகளில் நடந்த மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் பங்குபற்றியது. 1977இல் நடந்த தேர்தலில், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து அமோக வெற்றிபெற்ற ஒரு கட்சி, ஐந்தே ஆண்டுகளில் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் பங்குபற்றியது. மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குள் எதுவும் இல்லை என்பதனை 1980 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடந்த ஒரு கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்திரபாலா, பாலகிருஷ்ணன், சீலன் கதிர்காமர், மு.நித்தியானந்தன், மு.திருநாவுக்கரசு ஆகியோர் அக்கருத்தரங்கில் பேசினார்கள். அவர்களுடைய கருத்தை, அப்பொழுது தமிழரசுக்கட்சியின் தலைவராக இருந்த அமிர்தலிங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், எது சரி என்பதை வரலாறு பின்னர் நிரூபித்தது.

தமிழ் மிதவாதிகளின் மேற்கண்ட உறுதியின்மை, சமரசப் போக்கு போன்றவற்றின் மீது நம்பிக்கையிழந்த இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தின் பக்கம் போனார்கள். எனவே தமிழரசுக் கட்சியானது தன் இலட்சியத்தில் இருந்து சறுக்காத ஒரு கட்சி என்று எடுத்துக் கொள்ளத்தேவையில்லை. ஏன் அதிகம் போவான்? 2015இல் மன்னாரில் நடந்த “தடம் மாறுகின்றதா தமிழ்த் தேசியம்?” என்ற தலைப்பிலான கருத்தரங்கில், நான் ஆற்றிய உரையில், சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் வெளியாரின் நிர்பந்தங்களின்றித் தானாக ஒரு தீர்வுக்கு இறங்கி வராது என்று கூறினேன். அதற்குப் பதிலளித்த சம்பந்தர் “அது ஒரு வறண்ட வாதம் வறட்டு வாதம்” என்று கூறினார். 2015இல் இருந்து 2018வரையிலும் சம்பந்தர், ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தோடு ஒத்துழைத்து “எக்கிய ராஜ்ய” என்ற ஒரு தீர்வு முயற்சிக்காக உழைத்தார். அதை அவர் சமஷ்டிப் பண்புடையது என்று சொன்னார். ஆனால் சிங்கள அரசியல்வாதிகள் அதனை ஒற்றைட்சியாட்சிதான் என்று சொன்னார்கள். சிங்களத் தலைவர்கள் தமது வாக்காளர்களுக்கு ஒன்றைச் சொன்னார்கள், தமிழ்த் தலைவர்கள் தமது வாக்காளர்களுக்கு வேறு ஒன்றைச் சொன்னார்கள்.

எனவே தமிழரசுக் கட்சி தூய இலட்சியவாதக் கட்சியல்ல. அது கொழும்புடன் சமரசத்துக்குப் போகாத கட்சியுமல்ல. இதில் ஆகப் பிந்திய உதாரணம் சம்பந்தர். அவர் தனது செயல் வழி யைப் பலப்படுத்துவதற்காக உள்ளே கொண்டு வந்தவர்தான் சுமந்திரன். சுமந்திரன் மட்டுமல்ல சாணக்கியனும் அப்படிப்பட்டவர்தான். அண்மையில் யாழ்ப்பாணம் ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் நடந்த ஓர் இளையோர் ஒன்றுகூடலில் சாணக்கியனும் உரையாற்றினார்.அதில் அவர் எனது உரையை மேற்கோள்காட்டி பிரச்சனைகளைத் தீர்ப்பதே தன்னுடைய அரசியல் செயல்வழி என்று சொன்னார். பின்னர் அவரோடு உரையாடும்போது நான் அவரிடம் சுட்டிக் காட்டினேன் “அது அரசு சார்பற்ற நிறுவனங்களின் அகராதியில் உள்ள ஒரு வார்த்தை... நீங்கள் தமிழ் மக்களின் தாயகத்தை ஒன்றிணைக்க வேண்டிய பொறுப்பை ஏற்றிருக்கும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். உங்களுடைய அரசியல் ஒழுக்கம் என்பது தேசத்தை நிர்மாணிப்பது” என்று. அதற்கு அவர் திரும்பிக் கேட்டார் “அதுவும் ஒரு பிரச்சனைதானே? அந்தப் பிரச்சினையையும் தீர்க்க வேண்டும்தானே?” என்று. அப்பொழுது நான் சொன்னேன்...” தேச நிர்மாணம் என்பது ஓர் அரசியல் பதம். பிரச்சனைகளைத் தீர்ப்பது என்பது அரசு சார்பற்ற நிறுவனங்களின் அகராதியில் அதிகம் உள்ள ஒரு வார்த்தை. நீங்கள் தமிழ்த் தேசியக்கட்சி ஒன்றின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அரசியல் அடர்த்தி மிக்க வார்த்தையைத்தானே பயன்படுத்தலாம் ?”என்று.




சுமந்திரன் சாணக்கியனைப் போன்றவர்களின் சிந்தனாமுறை அது. தமிழரசுக் கட்சிக்குள் ஏற்கனவே இருந்து வந்த ஒரு பாரம்பரியத்தின் தொடர்ச்சியது. அக் கட்சிக்குள் அது ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல. எனவே சுமந்திரன் அணி என்பது கட்சிக்குள் ஒரு புதிய தோற்றப்பாடு அல்ல.

எனவே, சுமந்திரனுக்கு வாக்களித்தவர்களை துரோகிகள் என்று முத்திரை குத்தத் தேவையில்லை. அப்படித்தான் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் பிள்ளையானுக்கும் வாக்களிக்கும் தமிழ் மக்களை தமிழ்த் தேசத்துக்கு எதிரானவர்கள் என்று முத்திரை குத்தலாமா? இல்லை. அவர்கள் தமிழ் மக்கள். அவர்களை எப்படித் தேசத் திரட்சிக்குள் உள்ளீர்ப்பது என்றுதான் சிந்திக்க வேண்டுமே தவிர அவர்களை தேசத்துக்கு வெளியே தள்ளிவிட முடியாது. இது சுமந்திரன் அணிக்கும் பொருந்தும். இந்த தமிழ் யதார்த்தத்தை சிறீதரன் உள்வாங்க வேண்டும். தேசத் திரட்சியை எப்படிப் பலப்படுத்துவது என்று அவர் சிந்திக்க வேண்டும்.





கிளிநொச்சியில் அவருடைய நடவடிக்கைகளை விமர்சிக்கும் அவருடைய அரசியல் எதிரிகள் அவரை “கிளிநொச்சியின் ஜமீன்” என்று அழைப்பார்கள். தமிழரசுக் கட்சியின் ஏனைய மாவட்டக் கிளைகளோடு ஒப்பிடுகையில் கிளிநொச்சியில் தமிழரசுக் கட்சியானது அதன் அரசியல் எதிரிகளை துரோகிகள் அல்லது இனப்படுகொலையின் பங்காளிகள் என்று வகைப்படுத்துவது உண்டு. போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டம் என்பதனால் கிளிநொச்சியில் அப்படிக் கூறமுடிந்தது. ஆனால் இப்பொழுது சிறீதரன் ஒரு மாவட்டத்தின் பிரதிநிதி அல்ல. தமிழ்த் தேசிய அரங்கில் உள்ள பெரிய கட்சியின் தலைவர்களில் ஒருவர். ஏனைய கட்சிகளையும் இணைத்து ஒரு கூட்டு முன்னணியை உருவாக்கப் போவதாக வேறு



கூறிவருகிறார். எனவே அவர் அதற்கு வேண்டிய தகுதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

சுமந்திரன் அணியின் எழுச்சி என்பது தேர்தலோடு ஏற்பட்ட ஒரு தோற்றப்பாடு அல்ல. தேர்தலோடு அது மேலும் பலமடைந்தது என்பதே சரி. அது கட்சிக்குள் ஏற்கனவே காணப்பட்ட ஒரு தோற்றப்பாடு. இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டது போல மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றுக் கொள்கின்ற் ஐக்கிய ராஜ்ஜியத்தை ஏற்றுக் கொள்கின்ற ஒரு தரப்பு கட்சிக்குள் எப்பொழுதும் இருந்து வந்துள்ளது.

எனவே அந்த உட்கட்சி யதார்த்தத்தை உள்வாங்கி சிறீதரன் கட்சியைச் சீரமைக்க வேண்டியவராக இருக்கிறார். சுமந்திரன் கட்சியைத் தேசிய நீக்கம் செய்தார் என்று அவர் கருதினால், கட்சியை முன்னரை விட அதிகமாக தேசிய மயப்படுத்த வேண்டியது இப்பொழுது சிறீதரனுடைய பொறுப்பு.

குறிப்பாக கட்சியின் பொதுச்செயலாளர் தெரிவு தொடர்பான சர்ச்சைகளின் விளைவாக கட்சிக்குள் மற்றொரு சிறு பிளவு மேற் கிளம்பும் ஆபத்துத் தெரிகிறது. அது மட்டக்களப்பு - திருகோணமலை என்ற முரண்பாடு. கிழக்கை யார் பிரதிநிதித்துவப்படுத்துவது என்பதில் மட்டக்களப்பா? திருக்கோணமலையா? என்ற ஒரு போட்டி அங்கே தோன்றியிருக்கிறது. சம்பந்தரின் தலைமைத்துவம் தமிழரசுக் கட்சிக்கு விட்டுச் சென்றிருக்கும் மற்றொரு தீங்கான விளைவு அது. கிழக்கை மையமாகக் கொண்ட சம்பந்தர் தலைவராக இருந்த ஒரு கால கட்டத்தில்தான் கிழக்கில் பிள்ளையானின் கட்சிக்கு பலமான வாக்காளர் வங்கி ஒன்று உருவாகியது. அது கிழக்கின் யதார்த்தங்களில் ஒன்று. பிள்ளையானின் வாக்காளர்களில் குறிப்பிடத்தக்க தொகையினர் முன்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் வசித்தவர்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதுவும் கிழக்கின் யதார்த்தம்தான். இவ்வாறு ஏற்கனவே வடக்குக் கிழக்காகப் பிரிந்து போயிருக்கும் தமிழ்த் தேசிய அரசியற் பரப்பில், இப்பொழுது கிழக்குக்குள்ளேயே ஒரு பிரிவு தோன்றக்கூடிய ஆபத்துத் தெரிகிறது. அதாவது ஏற்கனவே பல துண்டுகளாக உடைந்து போயிருக்கும் ஒரு தமிழ்த் தேசிய பரப்பில் ஒரு புதிய உடைவுக்கான அறிகுறிகள் தெரிகின்றன. சிறீதரன் அதையும் கையாள வேண்டியுள்ளது.

அவர் பதவியேற்றவுடன் மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்றார். அது கொழும்பில் உள்ள மேற்கத்திய தூதரகங்களால் பெரிய அளவிற்கு ஆர்வத்துடன் பார்க்கப்படவில்லை என்று சுமந்திரனுக்கு நெருக்கமான சிலர் கூறியதாக அறிகிறேன். எனினும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பின் மேற்கு நாடுகளின் தூதுவர்கள் சிலர் சிறீதரனை சந்தித்திருக்



கிறார்கள். அவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டதும் சிங்கள ஊடகவியலாளராகிய சுனந்த தேசப்பிரிய பின்வருமாறு ருவிற் பண்ணியிருந்தார் “தமிழரசுக் கட்சியின் தலைவருக்கான தேர்தலில் சுமந்திரனை சிறீதரன் வென்றமையானது தமிழ் அரசியல் தீவிரப்போக்கடைவதைக் காட்டும் ஒரு சமிக்ஞையாகும்”

அதாவது சிறீதரனின் தலைமைத்துவம் தமிழ் அரசியலில் தீவிரவாத போக்கை மேலும் அதிகப்படுத்தப்போகிறது என்று கொழும்பில் இருப்பவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சிங்களக் கடும்போக்கு வாக்குகளைக் கவர விரும்புகிறவர்களுக்கு அது வழிகளை இலகுவாக்கிக் கொடுக்குமா? குறிப்பாக நடந்து முடிந்த சுதந்திர தினத்திலன்று சிறீதரன் தலைமையில் கிளிநொச்சியில் நடந்த ஆர்ப்பாட்டமும் அதில் சிறீதரன் நடந்து கொண்ட விதமும், அவர் கட்சியை எந்த திசையில் செலுத்த விரும்புகிறார் என்பதனை உணர்த்துகின்றதா? சில சிங்கள ஊடகவியலாளர்கள் கூறுவதுபோல தமிழ் மக்களுக்கு மேலும் ஒரு கஜேந்திரகுமார் கிடைத்திருக்கிறாரா?

சுதந்திர தினமன்று நடந்த ஆர்ப்பாட்டத்தில் சிறீதரன் நடந்து கொண்ட விதம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாணியிலானது. கட்சிக்குள் தன்னுடைய நிலையைப் பலப்படுத்துவதற்கு அது சிறீதரனுக்கு உதவும்.

சிறீதரன் முதலில் கட்சிக்குள் தன்னை பலப்படுத்த வேண்டியிருக்கிறது. சம்பந்தரின் தலைமைத்துவத்தின் கீழ் கட்சியானது கொழும்பை நோக்கி அதிகம் அதிகம் திருப்பப்பட்டு விட்டது. அதை மீண்டும் வாக்காளர்கள் நோக்கித் திருப்ப வேண்டும். அதே சமயம் கட்சி அதன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறுவதுபோல ஒரு சமஸ்ரியை அடைவதற்கான வழி வகைகளையும் கண்டுபிடிக்க வேண்டும். சுதந்திர தினத்தன்று ஆதரவாளர்களுக்கு வீரமாகத் தலைமை தாங்குவது கட்சிக்குள் சிறீதரனை பலப்படுத்த உதவலாம். அதற்குமப்பால் சமஸ்ரியை அடைவதற்கான செயல்பூர்வமான வழியை அவர் தனது தொண்டர்களுக்குக் காட்ட வேண்டும் மக்களுக்கும் காட்ட வேண்டும்.

நன்றி: நிலாந்தன்


15ஆம் ஆண்டு
வீரவணக்கம்
20.02.2009
வான்கரும்புலி
கேணல் ரூபன்
வான்கரும்புலி
லெப். கேணல்
சிறித்திரன்
காற்றிலேறி
விண்ணையும் சாடுவோம்
விடுதலைப்புலிகள்
வான் படை
SKY TIGERS
வான் ஏறி, வீரவரலாறு வரைந்தவர்!
புதிதாய் எழுதப்பட்ட பக்கங்களின் அகரமானவரே!
விரிந்த வானத்திலும் தியாகப் பெருநெருப்பை வளர்த்து விட்டுச் சென்றவரே!
இருள் கிழித்து வான் எழுந்த திருமுகத்தின் ஒளிமுகங்களே!
எங்கள் வானத்தின் விடிபொழுதுக்கானது உங்கள் பறப்பு.
தாய்மண் மீதுள ஒவ்வொரு உயிர்ப்பிலும் உங்களின் நினைப்பு.
புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



வான் கரும்புலித் தாக்குதலில் பங்கேற்று வீரச்சாவைத் தழுவிய வான் கரும்புலி கேணல். ரூபன் வான் கரும்புலி லெப். கேணல் சிரித்திரன் ஆகியோர் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுடன்.









# முதலாவது வான் கரும்புலித் தாக்குதல்

## 20.02.2009 – இரவு 9:10 மணி

காற்றிலேறி விண்ணையும் சாடுவோம்
விடுதலைப்புலிகள் வான் படை
SKY TIGERS







JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com




அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும், தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203




The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com




Call today to Save energy
Broken Glass...? (Door & window)
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
● Replacement (Door & Windows)
● Custom Door & Windows
● Front Door & Patio Door
● Garden Door
● Door & Windows Re-Caulking (Important)
● Painting Doors & Windows
● Basement Separate Entrance Door
● Home Painting
● Spotlights installation
● California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# வன்னியில் புராதன கால இரும்பு உலைகள்!

3000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இரும்பு உருக்கு உலைகள் வன்னியில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.



வன்னியில் கிளிநொச்சி மாவட்டம் அக்கரான் குளத்தின் அலை கரைப்பகுதியில் இரும்பு உருக்கு உலைகள் 2002 ஆம் ஆண்டு தொல்லியற் தேடலாளர் ந. குணரட்ணத்தினால் கண்டு பிடிக்கப்பட்டது.

வட்டவடிவ இரும்பு உருக்கு உலையின் அடித்தளம் உலையின் ஊதுலையாக இருந்த மண் துருத்திகள், குவியல்களாக இரும்புக் கசடுகள் என்பன இப்பகுதியிற் கண்டு எடுக்கப்பட்டன. இந்த உருக்குலையின் கசடுகள் வேதியில் பகுப்பாய்வுக்குட்படுத்தப் பட்டபோது அதில் 68.12 விழுக்காடு இரும்பு இருந்தது உறுதி செய்யப்பட்டது. இதேபோன்ற இரும்பு உலைக்கசடுகள் முறிகண்டி - அக்கராயன் சாலையோரம், கோணாவிலில் அக்கராயன் கழிவாறின் கரையோரம், முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேசத்தின் கோட்டைகட்டினகுளம் என்பவற்றிலும் கொக்காவிலிலும் காணப்படுகின்றன.

கொக்காவிலிற் கண்டுபிடிக்கப்பட்ட இரும்பு உருக்குலைப் பகுதிகள் எ-9 சாலை புனரமைப்புக்காக கிரவல் மண் அள்ளப்பட்ட வேளையில் அழிக்கப்பட்டுவிட்டன. ஏனைய உலைகள் அப்படியே உள்ளன. இரும்பு உருக்குலைப்பகுதிகள் காலக்கணிப்புக்குட்படுத்தப்பட்டுள்ளன. இதன் பெறுபேறு இந்த உலை கி.மு. 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை உறுதி செய்தது.



இதைவிட 3000 ஆண்டுகள் வரை தொன்மையான புத்தளம் பொம்பரிப்பு முதுமக்கள் தாளிகளில் எடுக்கப்பட்ட இரும்புப் பாகங்களும் இத்தீவில் இரும்புப் பயன்பாட்டை உறுதிசெய்தது. தமிழர் தாயகப் பகுதிகளில் பூநகரியில் மேலாய்வு மேற்கொள்ளப்பட்டு இரும்பு உருவாக்கங்கள் எடுக்கப்பட்டபோதிலும் அவை காலக்கணிப்பு மூலம் இதுவரை காலம் உறுதிசெய்யப்படவில்லை.

தமிழரின் பெருங்கற்காலம் எனப்படும் (கி.மு. 0 – முதல் 1000 வரையான) காலம் இரும்புக்காலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. பெருங்கற்காலத்திலேயே தமிழர்கள் இரும்பினைப் பயன்படுத்தியதால் இது இரும்புக்காலம் எனவும் குறிப்பிடப் படுகின்றது. இத்தகைய இரும்பு உலைகள் தமிழர் தாயகத்தில் இருப்பதான் விடயங்கள் ஆதாரபூர்வமாக இதற்குமுன்னர் வெளிவரவில்லை. ஆதாரபூர்வமாக காலக் கணிப்புடன் தமிழர் தாயகத்தில் இரும்பு உலைகள் பற்றிய விடயம் வெளியாவது

**பெருங்கற்காலத்திலேயே தமிழர்கள் இரும்பினைப் பயன்படுத்தியதால் இது இரும்புக்காலம் எனவும் குறிப்பிடப்படுகின்றது. இத்தகைய இரும்பு உலைகள் தமிழர் தாயகத்தில் இருப்பதான விடயங்கள் ஆதார பூர்வமாக இதற்குமுன்னர் வெளிவரவில்லை. ஆதார பூர்வமாக காலக் கணிப்புடன் தமிழர் தாயகத்தில் இரும்பு உலைகள் பற்றிய விடயம் வெளியாவது இதுவெ முதல் தடவையாகும்.**

இலங்கைத்தீவில் சிறீலங்கா தொல்லியற் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வுகளின்படி மிகத்தொன்மையான இரும்பு உருக்குலை 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இது அநுராதபுரத்திற் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த இரும்பு உருக்கு உலையே சிங்கள வரலாறு கூறம் விஜயன் வருகை என்பதற்கு முன்பாகவே இலங்கைத்தீவில் மனிதர்கள் வாழ்ந்து வேளாண்மை, மந்தை மேய்ப்பு, இரும்புப்பயன்பாடு என்பவற்றை மேற்கொண்டிருந்தனர் என்ற அறிக்கையை சிறீலங்காவின் தொல்லியற் திணைக்கள முன்னாள் ஆணையாளர் S.U. தெரனியகலையினை வெளியிடச்செய்தது.

ஆனால் அக்கராயனிற் கண்டுபிடிக்கப்பட்ட இரும்பு உலை காபன்-14 கதிரியக்க காலக்கணிப்பு செய்யப்பட்டு அது கி.மு. 1300 ஆண்டுகள் தொன்மையானது என அறிவியல் ரீதியான உறுதி செய்யப்பட்டுள்ளது.

நவீன அறிவியல் உலகில் தொல்லியற் சான்றுகள் காலக் கணிப்பு மூலம் உறுதி செய்யப்படும்போதே அவை அங்கீகரிக்கப்படுகின்றன. ஒப்பீட்டுக் காலக்கணிப்பு முறைகள் தொல்லியல் என்ற அறிவியற்துறையில் ஏற்புடையதாக்கப்படுவதில்லை. அந்த ரீதியில் அக்கராயன் இரும்பு உலை அறிவியல் மூலம் காலக்கணிப்பு செய்யப்பட்டுள்ளது.

இதுவே முதல் தடவையாகும்.

தமிழர் தாயகத்தில் இரும்புத்தாது திருக்கோணமலையின் சேருவலையில் உள்ளது. இந்த இரும்புத்தாதுதான் தமிழர் தாயக இரும்பு உலைகளில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறமுடியாது. ஏனெனில் சேருவில இரும்புத்தாது இன்னமும் பயன்படுத்தாத நிலையிற்தான் இருக்கின்றது.

இந்த நிலையில் தமிழகத்தில் இருந்து அது வந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

தொழில்நுட்பங்கள் எல்லாமே ஒரே இடத்திற் தோன்றின என



அடிப்படைவாதம் பேசினால் அதுவே உண்மை. வரலாற்றின் தவறாகும். ஆக எமக்கு இரும்பு நுட்பம் வேறொங்கோ இருந்தே கிடைத்திருக்க வேண்டும். 16 ஆம் நூற்றாண்டில் வருகை பரிந்த பிரிட்டிஸ் பயணியான "றொபேட் நொக்ஸ்" தான் இத் தீவில் பாரம்பரிய இரும்பு உருக்கு உலைகளைக் கண்ட தாகவும் கூறி அதன் நுட்பத்தையும் வெளியிட்டிருக்கிறார். நவீனத்துவம் வரும்வரை இப்பாரம்பரிய உருக்குலைகள் இத் தீவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் தமிழர் தயாகத் திலும் மிகப்புராதனமான இரும்பு உருக்குலைகள் உள்ளன. என்பதனை வன்னி இரும்பு உருக்குலைகள் எடுத்துக் கூறுகின்றன.

- தி. தவபாலன் - எரிமலை மார்ச் 2006







விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203

# பிறமொழிச் சொல் நீங்கிய தமிழ்மொழி






திராவிட மொழிக் குடும்பத்திலே தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளே இலக்கிய வளங்கொண்டன. இவற்றுள். தமிழ் மொழியிலேயே கி,மு. 300 தொடக்கமாக இயற்றப்பட்ட இலக்கியங்கள் உள்ளன. ஏனைய மூன்று மொழிகளுக்கும் பிற்பட்ட காலத்திலேயே இலக்கிய வரலாறு தொடங்குகின்றது (கல்வெட்டுச் சான்றுகளின்படி, கன்னட மொழியிலே கி.பி. 450 அளவில், காலத்தால் முந்திய இலக்கியப் புனைவு தொடங்கியதெனலாம்). தமிழ் மொழியினைவிட ஏனைய மூன்று மொழிகளும் பெருமளவிலே வடமொழிச் செல்வாக்குக்கு உட்பட்டன. தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளின் ஒலியமைப்பு. வரிவடிவ அமைப்பு, சொல்லமைப்பு, இலக்கண அமைப்பு ஆகியன வடமொழியின் பாதிப்புக்குட்பட்டன. இந்த வகையில், தமிழ் மொழியில் வடமொழிச் செல்வாக்கு மிகக்குறைந்த அளவிலேயே ஏற்பட்டது. எனினும், இன்றைய தமிழ் மொழியினை எடுத்து நோக்கும் பொழுது அம்மொழியிலே பெருந்தொகையான பிறமொழிச் சொற்கள் பயின்று வருவதைக் காண்கிறோம். பிறமொழிச் சொற்கள் தமிழிலே வந்து சேர்ந்து வரலாற்றை முதலிலே நோக்குவோம்.

### தமிழில் பிறமொழிச் சொற்கள் வந்த வரலாறு

எமது பண்டைய தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியப் பாடல்களும் தோன்றிய காலத்திலே, ஆரியருடைய பண்பாடு தமிழகத்திலே பெருமளவு பரவவில்லை இதனால் இந்நூல்களிலே வடமொழியாகிய சமஸ்கிருதத்தின் சொற்கள் பெருந்தொகையாகக் கலக்கவில்லை. எனினும், இந்நூல்களிலே சில வடசொற்கள் காணப்படுகின்றன. கி.மு. 200 அளவில் தமிழ்நாட்டுக்கும் கிரேக்க - உரோமப் பேரரசுக்குமிடையே நடைபெற்ற வணிகத்தின் பயனாகச் சில கிரேக்கச் சொற்கள் தமிழிலும், சில தமிழ்ச் சொற்கள் கிரேக்க மொழியிலும் கலக்கலாயின. கி.பி. 300 இற்குப் பின்னர் எழுந்த தமிழ் நூல்களிலே, படிப்படியாக வட மொழிச் சொற்களின் சேர்க்கை பெருகத் தொடங்கியது. புத்த, சமண சமயக் கோட்பாடுகளையும், மறைநூற் கோட்பாடுகளையும் உள்வாங்கத் தொடங்கிய தமிழ்ச் சமூகம், அவற்றுக்குரிய சொற்களையும் கடன்வாங்குவது இன்றியமையாததாயிற்று. கி.பி. 600 அளிவல் தமிழ் நாட்டில் ஆட்சி தொடங்கிய பல்லவ மனனர்கள், வடமொழியை அரச மொழியாகப் பயன்படுத்தினர். கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் பேரரசு ஒன்றினை நிலைநிறுத்திய சோழப் பெருமன்னர்கள் வடமொழிக்கு ஆதரவு நல்கியது மட்டுமன்றித் தங்கள் பெயர்களையும் வடமொழியிலேயே அமைத்துக்கொண்டனர். அரசியல், பண்பாடு ஆகியவற்றின் விளைவாலே பெருந்தொகையான வடசொற்கள் தமிழிலே சேரலாயின.

வடமொழி தவிர்ந்த வேறு சில பிறமொழிகளிலிருந்தும் தமிழிலே சொற்கள் வந்து சேர்ந்தன. திராவிட மொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிச் சொற்கள் தமிழிலே பயின்று வந்தன. இஸ்லாமியருடைய தமிழகப் படையெடுப்புகளின் விளைவாகச் சில உருது, அரபுச் சொற்களும் வந்து சேர்ந்தன. கி.பி. 16 ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர்களுடைய வருகையால், போர்த்துக்கேய, டச்சு, ஆங்கில, பிரெஞ்சு, ஜெர்மன் சொற்களும் தமிழிலே கலக்கத் தொடங்கின. வடமொழிச் செல்வாக்குத் தமிழ் மொழியிலே பெரிய அளவிலே பதிந்ததுபோல், ஆங்கில மொழிச் செல்வாக்கும் பதியலாயிற்று.

பிறமொழிச் செற்களைத் தன்மொழிப்பாங்காக்கும் போக்கு எல்லா மொழிகளிலுமே காணப்படுகின்றது. தமிழ் மொழியின் அணைக்கட்டு என்னுஞ் சொல்லினையும், மிளகுதண்ணீர் என்னுஞ் சொல்லினையும் ஆங்கிலமொழி முறையே, Anicut என்றும் Mulligatawny என்றும் தன்மொழிப்பாங்காக்கியுள்ளது இதே போல் Table என்னும் ஆங்கிலே மொழிச் சொல்லினை தேபுரு என்றும் India என்னும் சொல்லினை இந்தோ என்றும் யப்பானிய மொழி மாற்றியமைத்துள்ளது. ஒவ்வொரு மொழி பேசுவோரும் தம் மொழியின் ஒலியமைப்புக்கேற்ப, தாம் ஒலிக்கின்ற பாங்கிற்கேற்பவே பிறமொழிச் சொற்களை அமைத்துக்கொள்வர். தமிழ் மொழி பேசுவோரும் அமைத்துக்கொள்வர். தமிழ் மொழி பேசுவோரும் இதற்கு இயைபுடையவரே. இதனாலே தான் Verandah என்னும் சொல்லை விறாந்தை என்றும், Vassa என்னும் பாளிமொழிச் சொல்லை வசி என்றும் அமைத்துக்கொண்டனர். படிப்பறிவற்ற தமிழ் மக்கள் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தினால், அவற்றைத் தமிழ் மொழி ஒலிக்கேற்பவே கிளர்ந்தனர். படித்த தமிழ் மொழிதான் வடமொழிச் சொற்களை அம்மொழி ஒலிகளுடனும் ஆங்கில மொழிச் சொற்களை அம் மொழி ஒலிகளுடனும் கிளர்ந்து வந்துள்ளனர். இவர்களுடைய இந்நிலைப்பாட்டினாலேயே பிறமொழிச் சொல்லாதிக்கம் எம்மொழியிலேற்பட்டுள்ளது. இந்த நிலை நீக்கப்படவேண்டுமென்ற கருத்துத் தற்போது முனைப்புப் பெற்று வருகின்றது.



ரொபெர்ட் கோல்ட்வெல்

### தனித்தமிழ் உணர்வின் தோற்றமும் வரலாறும்

தமிழ்மொழியின் தனித்துவம் பற்றிக் குறைவாகக் கூறும் எதிர்த் தூண்டல்களின் விளைவாகவே, தனித்தமிழ் உணர்வு வளர்ச்சியடைந்தது. இவ்வெதிர்த்தூண்டல்களின் உச்ச நிலையாக அமைந்தது, 18ஆம் நூற்றாண்டில், பியோக விவேகம் என்னும் இலக்கண நூலின் ஆசிரியர் சுப்பிரமிணய தீட்சிதரின் முயற்சியாகும். இவர் தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் இலக்கணம் ஒன்றே எனச் சாதித்தார். அத்துட்ன தமிழ் என்னுஞ் சொல்லையே திரமிள என்னும் வட சொல்லினின்றும் தோன்றியதாகக் கூறினார். 19 ஆம் நூற்றாண்டில் தமிழ் மொழியைக் கற்றறிந்த மேலைப்புல அறிஞரும் எங்கள் நாட்டு அறிஞரும் தமிழ் மொழியின் தனிச் சிறப்பியல்புகளைத் திராவிட மொழிக் குடும்பப் பின்னணியிலே ஆராயந்து கூற முற்பட்டனர். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை (1856) வெளியிட்ட ஆயர் ரொபெர்ட் கோல்ட்வெல், வின்சுலோ போன்ற மேலைத்தேய அறிஞர்கள் குறிப்பிடப்பட வேண்டியவர் கோல்ட்வெல் அவர்களே முதன்முதலாக திராவிட மொழிக்குடும்பம் ஒன்றினை இனங்கண்டு, அதில் சிறப்புத்தன்மை வாய்ந்தது தமிழ் மொழி எனக்கொண்டு, அம்மொழி வடமொழியினின்றும் பிறக்கவில்லை அதற்கெனத் தனித்துவமான பல சிறப்புப் பண்புகள் உண்டு என்பதையும் விளக்கிக் கூறினார். தனித்தமிழ் உணர்வினைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையினுடைய மனோன்மணியம் நாடகத்தில் அமைந்துள்ள தமிழ் வாழ்த்துப் புலப்படுத்துகின்றது.

“கன்னடமும் களிதெலுங்கும் கிவன்மலையாளமும் துளுவும்

உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்

ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்

சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே”

என்று சுந்தரம்பிள்ளை பாடிய தமிழ்த் தெய்வ வணக்கம் தமிழ் உணர்வின் வெளிப்பாடாயமைந்தது. சோமசுந்தர நாயகர், பரிதிமாற்கலைஞர், பாம்பன் குமரகுருபர சுவாமிகள், மறைமலையடிகள், நீலாம்பிகை அம்மையார், தேவநேயப்பாவாணர் போன்றோர் தனித்தமிழ் உணர்வினைத் தம் எழுத்துக்களாலும் இயக்கம் ஊடாகவும் வளர்த்தவர்கள். மறைமலையடிகள் தொடங்கிய தனித்தமிழ் இயக்கத்துக்கு ஓர் சமூக - பண்பாட்டு - அரசியற் பின்னணி இருந்தது. அதுபற்றி இங்கு நோக்கவேண்டிய தேவை இல்லை. மொழியியல் அடிப்படையிலே இவ்வியக்கத்தினை நோக்குமிடத்து, அது சிறப்பாகத் தமிழிலே இருந்து வந்துள்ள வடமொழிச் செல்வாக்குக்கும் பொதுவாக விறமொழித் தாக்கத்துக்கும் எதிராகச் செயற்பட்டு, தனித்தமிழச் சொற்களையே பயன் படுத்தி நாள் வேலைகளை நலமுடன் செய்வதற்கு ஊக்கம் அளித்த இயக்கமெனக் கொள்ளலாம்.

### தமிழில் மக்கட் பெயர்

பண்டைக்காலத் தமிழ்மக்கள் தமிழிலேயே தம் பெயர்களை வைத்துக்கொண்டனர். நெடுஞ்செழியன், சேரலாதன், செல்வக் கடுங்கோ, பாரி, கரிகாலன், கோப்பெருஞ்சோழன் என்றெல்லாம் மன்னர் பெயர்கள் அமைந்தன. கணியன்




பூங்குன்றன், பரணர், பொத்தியார், நச்செள்ளை, நெட்டிமை, பேயன் என்னும் பெயர்கள் கொண்ட புலவர்கள் வாழ்ந்துள்ளனர். எம்முடைய பண்டைத் தமிழ் இலக்கியங்களாகிய சங்க இலக்கியங்களிலே பெயர் தெரியாத புலவர்கள் பலர், பாடல்கள் பாடியுள்ளனர். சங்கப் பாடல்களைத் தொகுத்த பிற்கால ஆசிரியர்கள், அத்தகைய புலவர்களுக்குப் பெயர் வழங்குவதற்கு ஓர் புதிய வழியினைக் கையாண்டனர் அப்புலவர்கள் தங்கள் பாடல்களிலே கையாண்ட கருத்து நயமுள்ள தொடர்களை அல்லது உவமைகளை அவர்களுக்குப் பெயர்களாக இட்டனர். குறுந்தொகை 41 ஆவது பாடலிலே தலைமகனைப் பிரிந்திருக்குதம் தலைவியினுடைய மனநிலையைப் பலப்படுத்த “அணிலாடு முன்றில்” போல என்னும் உவமை ஆளப்பட்டுள்ளது மக்கள் நடமாட்டம் இல்லாத வெறும் வீட்டின் முற்றத்திலேதான் அணில்கள் விளையாடுவதை நாம் காணலாம். தலைவியினுடைய மனம் அணில் விளையாடும் வீட்டு முற்றத்தைப் போலுள்ளது எனப் புலவர் உவமை கூறுவதன் மூலம், தலைவியினுடைய தனிமையினையும் அவள் மனத்து வெறுமையினையும் வெளிப்படுத்துகின்றார். இதனால் இப்புலவர் அணிலாடு முன்றிலார் என்னும் பெயரைப் பெற்றார். காதல்கொண்ட இரு நெஞ்சங்கள் இரண்டறப் பிரிக்க முடியாதவாறு கலந்தன என்னும் கருத்து நிகழ்வைச் “செம்புலப் பெயல் நீர்போல” என்னும் உவமையைக் கையாண்டு, செம்மண் நிலத்திலே பெய்த மழைநீர் போல அம்மண்ணோடு கலந்து அதன் தன்மையை அடைவது போல என்னும் விளக்கத்தாலே காட்சி நிகழ்வாகக் காட்டுந்திறனை நோக்கி இப்புலவருக்கு, செம்புலப் பெயல் நீரார் என்னும் பெயர் வழங்கப்பட்டது. இவ்வாறு வெள்ளி வீதியார், மீனெறி தூண்டிலார், தேய்புரிப் பழங்கயிற்றினார், ஓரிற் பிச்சையார், கங்குல் வெள்ளத்தார் எனப் பல பெயர்கள் புலவர்களுக்கு வழங்கப்பட்டன. எல்லாப் பெயர்களுமே தனித்தமிழ்ப் பெயர்கள். இப்பெயர்களை இன்று கேட்போருக்கு இவை வேடிக்கையானவையாய் அமையலாம். ஆனால், பிறமொழிகளிலே அமைந்துள்ள சில பெயர்களை அறியின், இந்தமிழ்ப் பெயர்கள் வேடிக்கையானவையாகத் தோன்ற மாட்டா. Woodhouse - “மரவீடு”, Coldwater - “பொன்னீர்”, Bush - “பற்றை”, Riverbank - “ஆற்றங்கரை” என்னும் ஆங்கிலப் பெயர்களையும்; Oyama - “பெருமலை”, Nakamura - “நடுஊர்”, Haruko - “வேனில் மகள்”, Mori - “பெருங்காடு” என்னும் யப்பானியப் பெயர்களையும் கேட்பவர்கள், அவை வேடிக்கையாவை என்றுதான் கூறுவார்கள்.




எங்களுக்கு எங்களுடைய பெயர்களையே பிறமொழிச் சொற்களிலே பூணும் அளவுக்குப் பிறமொழி ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. எந்த மொழியிலும் (ஆதாவது, இந்தியத் துணைக் கண்டத்துக்கப்பாற்பட்ட நாடுகளிலே பேசப்படும் மொழிகளில்) இந்நிலை ஏற்பட்டதில்லை. மக்கட் பெயர்களைப் பிற மொழிகளிலே இடுவதால் வரும் இடர்ப்பாடுகள் பற்றியும் நாம் இங்கு மனங்கொள்ள வேண்டும். நல்ல பொன்னிற மேனியுடைய பெண்பிள்ளைக்குப் பொன்னி என்னும் பெயருக்குப் பதிலாக சியாமாளா (கறுப்பி) என்று பெயர் வைத்தால் எப்படியிருக்கும்? தமிழர் மண்ணின் இயற்கைப் பின்னணியிலே மக்கட் பெயர்கள் அமைவதற்குப் பதிலாகக் கடவுட் பெயர்கள் சூட்ட வேண்டும் என்னும் நிலைப்பாடு எம் சமூகத்திலே உருவாகியதனால், பல வடமொழிப் பெயர்களும் ஆங்கிலக் கிறித்தவப் பெயர்களும் பரவலாக இடம்பெறத் தொடங்கின. தமிழர்கள் என்று எம்மைத் தனித்துவமாக இனங்காட்டிக்கொள்வதற்கு, நாமும் எம்முன்னோரும் விட்ட பிழையை, வருங்கால இளைய தலைமுறையினர் திருத்தித்தம் பிள்ளைகளுக்கு இனிய தமிழ்ப் பெயர்களை இடுவதன் மூலமும், நாம் எல்லோரும் இயன்றளவு தமிழ்ச் சொற்களையே நடைமுறைப் பயன்பாட்டுக்கு அளுவதன்மூலமும் பிறமொழிச் செல்வாக்கினைக் குறைத்துக் கொள்ளலாம். ஆண்மையிலே வெளிவந்த மக்கட் பெயர் அகர வரிசை என்னும் நூலில் 453 மகளிர் பெயர்களும், 587 ஆடவர் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. எல்லாம் தமிழ்ச் சொற்களாலே ஆன பெயர்களாகும். மக்களைப் பெறும் புதமணத்தவர்க்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமையும்.

நாம் ஒவ்வொரு நாளும் பயன்படுத்தும் எத்தனையோ பிற மொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்கள் எம் மொழியிலே இருக்கின்றன. அவற்றை வழங்கத் தொடங்கினால் கால ஓட்டத்தில் அவை நிலைபெற்ற வழக்கினைப் பெற்றுவிடும். நாம் நாடோறும் பெரும்பாலும் பயன்படுத்தும் சில சொற்களையும் அவற்றுக்கு நிகரான தமிழ்ச சொற்களையும் எடுத்துக்காட்டுகளாகக் கீழே தருகிறோம்.

அங்குலம் – விரற்கிடை
அஞ்சலி – வணக்கம்
அந்தரம் – பரபரப்பு
அறியாயம் – முறையின்மை
அநுதினம், நாளாந்தம் – நாடோறும்
அநேகம் – பல
இலகு – எளிது
உத்தியோகம் – தொழில்
காரியம் – செயல்
மசோதா – சட்டமூலம்

சில சொற்களைக கேட்டவுடன். இவை பிற மொழிச் சொற்களா எனப் பலர் வியப்படைவதுண்டு. அந்தளவுக்கு, “தேவர் யார் கயவர் யார்” என்று வேறுபாடு காணமுடியாதபடி, பிறமொழிச் சொற்கள் எம் மொழியிலே கலந்துவிட்டன. அச்சொற்கள் உணர்த்தும் பொருளை உணர்த்தக் கூடிய தமிழ்ச் சொற்கள் இருப்பின் அவற்றைப் பயன்படுத்துவதே சாலச் சிறந்ததாகும். இது தொடர்பாக ஒரு சிறப்பான நிலைப்பாட்டினை நாம் நெஞ்சிருத்த வேண்டும். அதாவது, தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்த வேண்டுமென்ற நோக்கினால், மக்கள் விளங்க முடியாத, கரடுமுரடான, கடுஞ் சொற்களை எழுதுவதிலோ பேசுவதிலோ பயன் எதுவும் இல்லாமற்போய்விடும். ஆனால், நாடோறும் நாம் பயன்படுத்தும் ஒரு பொருளைத் தமிழ் மொழியிலே அழைக்க வேண்டுமெனில், அதற்கு இலகுவான தமிழ்ச் சொல் வாய்க்காவிட்டாலும், அறிமுகப்படுத்தப்படும் எச்சொல்லும் நாளடைவில் மக்கள் வாயிலே வந்து சேரந்துவிடும். இன்று, யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் வாயிலே தவழும் அங்காடி, குளிரோடை, சுவையருவி போன்ற சொற்களை எடுத்துக்காட்டுகளாகக் காட்டலாம்.

ஒவ்வொருவரும் எம்மால் இயன்றவரையில் பிற மொழிச் சொற்களுக்குப் பதிலாகத் தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதென ஓரளவு நினைவுறுதியுடன் முயற்சிப்பின், தனித்தமிழ்ப் பயன்பாடுபரவலாகிவிடும். புதுப்புதுக் கருதுகோள்களும், கொள்கைகளும், பொருட்களும் எம்மிடையே வந்து சேரும்பொழுது, அவற்றுக்கான புதுப்புதுத் தமிழ்ச் சொற்களை நாம் ஆக்கும்போது, எம்முடைய மொழியும் வளர்ச்சியடையும், பெருந்தொகையான புதியசொற்கள் சொற்களஞ்சியத்திலே இடம் பெறும். உலக வளர்ச்சிகளையெல்லாம் எதிர்கொள்ளத்தக்க வகையிலே தனித் தமிழ்ப் பயன்பாட்டைச் செம்மைசெய்ய வேண்டியவர்களாக நாம் முயற்சிக்கவேண்டியது, இன்றியமையாததாகும்.

பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர், தமிழ்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
தமிழீழ நோக்கு – ஆனி 1993




விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca

# அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் தமிழர் சுயநிர்ணய உரிமையை நசுக்குகிறது!



***தமிழ மக்கள் இலங்கையின் அரசியலமைப்புகளையே ஏற்றுக்கொள்ளவில்லை***

இலங்கைத்தீவு முழுவதும் என்று ஒரே அரசியலமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டதோ அன்றிலிருந்து இன்றுவரை,

1. கோல்புறூக் - கமெரன் அரசியல் திட்டம் - 1833
2. குறூ — மக்கலம் அரசியல் திட்டம் - 1910
3. மானிங் தற்காலிக அரசியல் திட்டம் - 1921
4. மானிங் அரசியல் திட்டம் - 1924
5. டொனமூர் அரசியல் திட்டம் - 1931
6. சோல்பரி அரசியல் திட்டம் - 1947
7. கொல்வின் அரசியல் திட்டம் - 1972
8. ஜெயவர்த்தனா அரசின் அரசியல் திட்டம் - 1978

என எட்டு அரசியல் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை எவையும் தமிழ் மக்களின் ஒப்புதலுடனேயோ அல்லது ஒத்துழைப்புடனேயே கொண்டுவரப்பட்டவை அல்ல.

மாறாக, 1931 இல் கொண்டு வரப்பட்ட டொனமூர் அரசியலமைப்பிலிருந்து நடைமுறைக்கு வந்த எல்லா அரசியலமைப்புச் சட்டங்களும் தமிழ் இயக்கங்களின், தமிழ் மக்களின் கடுமையான எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே தமிழ் மக்களின் உணர்வுகளை உதாசீனம் செய்துவிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

மேற்படி அரசியலமைப்புகளை ஆதரித்த தமிழ் பேசும் தலைவர்களோ உறுப்பினர்களோ பின்னர் நடந்த தேர்தல்களின் தமிழ் மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். 1972-ம் ஆண்டு சிறீமாவோ ஆட்சியினால் கொண்டுவரப்பட்ட ஏற்கெனவே இருந்துவந்த தமிழ் மக்களின் அரை குறை உரிமைகளையும் புறக்கணித்த குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தை தமிழ் அமைப்புக்கள் அனைத்தும் கடுமையாக எதிர்த்தன. சிங்கள கட்சிகளிலிருந்த தமிழ் பேசும் உறுப்பினர்களும், சுயநலங்களுக்காக தமிழ் இயக்கங்களில் இருந்து கட்டுப்பாட்டை மீறிய சில தமிழ் பேசும் உறுப்பினர்களும் அந்த அரசியலமைப்பை ஆதரித்துக் கையெழுத்திட்டனர். அவர்கள் அனைவரும் தமிழீழ மக்களால் (வடகிழக்கு மாகாண மக்களால்) அடுத்த தேர்தலில் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டனர்.

மேற்படி அரசியலமைப்பை ஆதரித்து கையெழுத்திட்ட ராஜன் செல்வநாயகம், சி. எக்ஸ். மார்ட்டின், குமாரசூரியர், அருளம்பலம், தியாகராஜா, பதியுதீன் மொகமட், எம்.சி. அகமட், ஏ.எல். அப்துல்மஜீத் ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி சிறீமாவோவின் அரசியலமைப்பையும் ஆட்சியையும் ஆதரித்த தம்பிராசா, M.M. முஸ்தபா ஆகியோரும் அடுத்து வந்த 1977-ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலோர் கட்டுப்பணத்தைக்கூடப் பெற முடியாத அளவுக்கு பரிதாபகரமான முறையில் தோல்வியைத் தழுவினர்.

அதேபோன்று 1978-ல் ஜெயவர்த்தனாவால் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த ஆளுங் கட்சியைச் சேர்ந்த தமிழ்ப் பிரதிநிதிகளும், பின்னர் அரசயில் சட்டத்துக்கும் ஜெயவர்த்தனா அரசுக்கும் ஆதரவாகச் செயற்பட்ட தமிழ் பேசும் பிரதிநிதிகளுமான K. அப்துல் மஜீத், ராஜதுரை, K.W. தேவநாயகம், மன்சூர், மஃரூப் ஜலால்தீன், ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோர் 1989-ம் ஆண்டு தேர்தலில் தமிழீழ மக்களால் தோற்கடிக்கப்பட்டனர். அல்லது தேர்தலில் போட்டியிட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டனர்.



எனவே கடந்தகால வரலாற்று நிகழ்வுகளிலிருந்து தமிழீழ மக்கள் சிறீலங்காவின் அரசியலமைப்பை ஏற்றோ, அதற்குக் கட்டுப்பட்டோ தாம் நடக்க விரும்பியவர்களல்லர் என்பதை தமக்குக் கிடைத்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

***தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவே ஆறாவது திருத்தச் சட்டம்***

ஒரு தேசிய இனத்துக்கு உரிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனித்துவமான அரசொன்றை அமைத்து தமது தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும் என்று தெளிவான முடிவெடுத்த தமிழீழ மக்கள் அதற்காக உறுதியாக நின்று போராடிவரும் விடுதலைப்புலிகளுக்கு தங்களின் பேராதரவையும் ஒத்துழைப்பையும் கொடுத்துவருகின்றனர்.

அடக்கு முறைகளுக்கு எதிராக வரலாற்று ரீதியாக தொடர்ந்து வரும் தமிழ் பேசும் மக்களின் எதிர்ப்புகளை முனை மழுங்கச் செய்யவும், தமிழினத்தின் சுயநிர்ணய உரிமையை நசுக்கவும், தமிழ் பேசும் மக்களை தொடந்து அடிமைகளாக வைத்திருக்கவும் ஒரு கருவியாகவே ஜெயவர்த்தனா ஆட்சியாளரால் 1983 ஆகஸ்ட் 08-ம் நாள் அரசியல் அமைப்பில் 06-வது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

அத்திருத்தச் சட்டத்தின்படி,

157 A

(1) எந்த மனிதனும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தனிநாடு ஒன்றை சிறீலங்காவின் எல்லைக்குள் அமைக்க, சிறீலங்காவின் எல்லைக்கு உள்ளேயோ வெளியேயோ இருந்து தூண்டவோ, நிதியளிக்கவோ, ஊக்கப்படுத்தவோ, பிரச்சாரம் செய்யவோ, ஆலோசனை தரவோ ஆதரவளிக்கவோ கூடாது.

(2) சிறீலங்காவின் எல்லைக்குள் தனி நாடு அமைப்பதை எந்தவொரு அரசயிற் கட்சியோ - சங்கமோ - அமைப்போ தன் கொள்கைகளிலொன்றாகக் கொண்டிருக்கக் கூடாது.

என்று கூறப்பட்டுள்ளது. இவற்றை மீறுபவர்கள் நீதிமன்றில் விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால்,



- மீறும் தனநபர் ஏழு ஆண்டுகள் அரசயில் உரிமையை இழப்பார்.
- அவரது சொத்துக்கள் நீதிமன்றத் தீர்ப்பினால் பறிமுதலாகும்.
- பாராளுமன்ற உறுப்பினராயின் அவர் பதவி பறிக்கப்படும். பின்னர் 7 ஆண்டுகளுக்கு உறுப்பினராகும் வாய்ப்பை அவர் இழப்பார்.
- கடவுச்சீட்டைப் பெறும் உரிமை, பரீட்சைகள் எதிலும் பங்குபற்றும் உரிமை, அசையாச் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமை, சட்டத்துக்கு அமைய அனுமதிப் பத்திரமோ, பதிவோ அன்றி அரசின் ஒப்புதலோ தேவைப்படும் வணிகத்திலோ தொழிலிலோ ஈடுபடும் உரிமை இவைகளை நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து அவர் இழப்பார்.

பிரிவினைக் கொள்கையைக் கொண்டிருப்பதாக அரசியற் கட்சியொன்றோ - அமைப்போ - சங்கமோ குற்றஞ்சாட்டப்பட்டு நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்படுமிடத்து மேலே குறிப்பிட்ட தண்டனைகள் அக்கட்சியின் - அமைப்பின் - சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.

அதுமட்டுமல்ல, இச்சட்டம் நடைமுறைக்கு வந்து ஒரு மாத காலத்துக்குள், பாராளுமன்ற உறுப்பினர்களோ அரசு அதிகாரிகளோ “இலங்கை அரசின் அரசயிலமைப்புச்சட்டத்தை ஏற்றுக்கொண்டு அதற்குப் பாதுகாப்பாகச் செயற்படுவதுடன் சிறீலங்காவின் ஆட்சிப் பகுதிக்குள் நேரடியாகவோ, மறைமுகமாகவோ, சிறீலங்காவுக்கு உள்ளேயொ, வெளியேயோ இருந்து கொண்டு தனி நாடொன்றை உருவாக்கும் கொள்கையைக் கொண்டிருக்கவோ, அதற்கு நிதியுதவியளிக்கவோ, ஊக்கம் கொடுக்கவோ ஆதரவாக பிரச்சாரம் செய்யவோ மாட்டேன்” என்று சத்தியப்பிரமாணம் எடுத்தல் வேண்டும். இச்சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின் நியமனம் பெறும் பாராளுமன்ற உறுப்பினரோ, அரசு அலுவலகர்களோ, நியமனம் பெற்ற ஒரு மாத காலத்துக்குள் மேற்படி சத்தியப்பிரமாணத்தை எடுக்க வேண்டும்.

அப்படி சத்தியப்பிரமாணம் எடுக்கத் தவறினால் அவர்கள் பதவியை இழப்பார்கள் என்றும் அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் கூறுகிறது.

***இந்தச் சட்டமானது தமிழர்களின் உரிமைகளைமட்டும் பறிக்கவில்லை; நசுக்கவில்லை. தமிழர்கள் தம் உரிமைகளுக்காகப் போராடும் உரிமைகளையும் கூட இச்சட்டம் நசுக்குகிறது.***

1983-ம் அண்டு ஆகஸ்ட் மாதம் அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய அரசியலமைப்புக்கு விசுவாசமாக பிரிவினைக்கு எதிராகச் சத்தியப்பிரமாணம் செய்ய சூழ்நிலை சாதகமாக, பாதுகாப்பாக இல்லாததால் பதவி பறிபோனாலும் சத்தியப் பிரமாணம் எடுக்கமாட்டோம் என்று பத்தினி வேடம் போட்டு வீரம் பேசி வெளிநாட்டுக்கு ஓடிவிட்டு, அதனால் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை இழந்த கூட்டணித் “தம்பிரான்கள்” தாம் பிரிவினைக்கோஷத்தை முன்வைத்து எம்.பி. பதவியைப் பெற்றதையும் மறந்து, கொண்ட கொள்கைகளைக் கைவிட்டு, இன்று தமிழ் மக்களின் நலன்களைப் புறக்கணித்து எம்.பி. பதவிக்காக சிங்கள ஏகாதிபத்தியவாதிகளிடம் சரணடைந்து, பிரிவினை கேட்கமாட்டோம் பிரிவினைக்கு ஆதரவளிக்கமாட்டோம். அது எங்கள் கொள்கை அல்ல நாம் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கு விசுவாசமாக இருப்போம் என்று சத்தியப்பிரமாணம் செய்து தேர்தலில் நின்றனர். இவர்கள் அனைவரையும் தமிழீழ மக்கள் தேர்தலில் படுதோல்வி அடையச் செய்திருக்கின்றனர்.

தமிழீழ மக்கள் விழிப்புடனேயே இருக்கிறார்கள். அவர்களை சுயநலவாதிகளும் பச்சோந்திகளும் என்றும் ஏமாற்றிவிட முடியாது. திம்பு பேச்சுவார்த்தையின்போது “இலங்கை அரசுடன் சமரசம்பற்றி பேசுவதானால் தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை என்பன அங்கீகரிக்கப்படவேண்டும்” என்பது உட்பட நாலு நிபந்தனைகளை விடுதலைப் புலிகளுடன் கூட்டணியும் மற்றும் நான்கு அமைப்புக்களும் இலங்கை அரசுக்கு விதித்தன. பின்னர் இந்திய அரசின் நெருக்குதல் காரணமாக இலங்கை அரசு நிபந்தனை எதையும் நிறைவேற்றாத போதிலும் விடுதலைப் புலிகள் தவிர்ந்த ஏனைய அமைப்புகள் இலங்கை அரசியலமைப்பின் கீழ் நடைபெற்ற தேர்தல்களில் பங்கேற்றன.







தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஒரு படிமேலே போய் திம்பு பேச்சுவார்த்தையின்போது இலங்கை அரசுக்கு விதித்த நிபந்தனைகள் நான்கும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்ற நிபந்தனை உட்பட நிறைவேற்றப்பட்டால்தான் இலங்கை அரசியல் அமைப்பின் 06-வது திருத்தச் சட்டத்துக்கு அமைய தாம் சத்தியப்பிரமாணம் எடுக்க முடிவெடுத்ததாக தமது தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருந்தனர்.

சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? ஒரு தேசிய இனம் தன் தலைவிதியைத் தானே முடிவு செய்யும் உரிமை அதாவது பிரிந்து செல்லும் உரிமை. அந்த உரிமையை இலங்கை அரசு வழங்கிவிட்டதாக பொய் கூறிய கூட்டணியினர் தமிழர்களை ஏமாற்ற முனைந்தனர்.

ஆனால் சுட்டணியினர் ஏற்றுக்கொண்ட அரசியலமைப்பின் 06-வது திருத்தச் சட்டம் கூறுவதெனன்? இலங்கை ஆட்சிப் பகுதிக்குள் பிரிவினை ஏற்படுத்தும் கொள்கையை எவரும் எந்த அமைப்பும் கொண்டிருக்கக்கூடாது. அப்படிக் கொண்டிருப்பவர்கள் கொண்டிருக்கும் இயக்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் குடியுரிமையை இழப்பர், சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும், பதவிகள் பறிக்கப்படும், இதில் எங்கே தமிழர்களின் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டிருக்கிறது? தமிழர்கள் சுயநிர்ணய உரிமை கேட்கக்கூடாது - அதன் அடிப்படையில் தனியரசு அமைக்க எண்ணக்கூடாது - அதைக் கொள்கையாகக் கொண்டிருக்கக்கூடாது என்றுதானே 06-வது திருத்தச் சட்டம் கூறுகிறது.

நன்றி: தமிழீழம் - ஏப்ரல் 1989 - குரல் 10

# தமிழரசுக் கட்சியை அக்கட்சிக்காரரர்களிடமிருந்தே காப்பாற்றுவது யார்!

04.02.2024



சில மாதங்களுக்கு முன்பு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த பசுபதிப் பிள்ளை நினைவு நாள் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டடது. அதில் நினைவுரை ஆற்றிய இக்கட்டுரையாசிரியர் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். இரண்டு தேர்தல்கள் நடந்தால் அவை தமிழ் மக்களின் தோல்வியை வெளிக் கொண்டுவரும் என்று. ஒன்று, தமிழரசுக் கட்சிக்குள் நடக்கும் தேர்தல். இரண்டாவது, மாகாண சபைத் தேர்தல். அண்மையில், தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தல் தமிழ் அரசியலின் சீரழிவை வெளிக்கொண்டு வந்திருக்கிறது.

அரசியல் விமர்சகர் ஜோதிலிங்கம் கூறுவதுபோல, தமிழ்மக்கள் மத்தியில் கட்சிகள் கிடையாது, தேர்தலில் வாக்குக் கேட்கும் குழுக்கள்தான் உண்டு என்பது சரியா? ஏனென்றால் கட்சிகளுக்குரிய கட்டுக்கோப்பு; யாப்பு; கூட்டுப; பொறுப்பு என்பன இருந்திருந்தால் பொதுச் செயலாளர் தெரிவில் அப்படி ஒரு குழப்பம் நடந்திருக்காது.

அந்தக் குழப்பம் பின்வரும் விடயங்களை நமக்கு உணர்த்துகின்றது. முதலாவது, தமிழரசுக் கட்சி ஒரு கட்டுக்கோப்பான கட்டமைப்பாக இல்லை. அது சிதைந்து போய்விட்டது. ஒரு பொது முடிவை எடுக்க முடியாத அளவுக்கு கட்சி அதன் கூட்டுணர்வை இழந்துவிட்டது. இரண்டாவது, சிறீதரனின் தலைமைத்துவத்தை அவருடைய எதிரணி ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தோல்வியை ஏற்றுக்கொள்ளத்தயாரில்லை. அதாவது தொகுத்துப் பார்த்தால் தமிழரசுக் கட்சி தலைவருக்கான தேர்தலோடு இரண்டாகி நிற்கின்றது.

ஆனால் இதுவிடயத்தில் தமிழரசுக் கட்சியின் சீத்துவக்கேட்டை விமர்சிக்கும் ஏனைய கட்சிகள் மட்டும் ஜனநாயகக் கட்டமைப்பாக உள்ளனவா? அங்கேயும் பரம்பரைத் தலைவர்கள் கேள்விக்கிடமற்ற நிரந்தரத் தலைவர்கள் என்ற ஏற்பாடுகள்தானே உண்டு? கட்சி மாநாடுகள் வைக்கிறார்கள். ஆனால் திரும்பத் திரும்ப ஒருவரே தலைவராகத் தெரிவு செய்யப்படலாமென்றால் அதன் பொருள் என்ன? கட்சிக்குள் வேறு தலைவர்கள் வரவில்லை என்பதா? அல்லது இருக்கின்ற தலைவர் கடவுளா?

எனவே தமிழரசுக் கட்சியை விமர்சிக்கும் யோக்கியதை ஏனைய கட்சிகளுக்கு கிடையாது. தமிழரசுக் கட்சியைப் பின்பற்றி ஏனைய கட்சிகளும் தமது உயர்மட்டப் பொறுப்புகளை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்க வேண்டும். உட்கட்சி ஜனநாயகத்தைப் பாதுகாக்கவில்லையென்றால், தமிழ் அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்த முடியாது. தமிழ் அரசியலின் ஜனநாயக இதயத்தைப் பலப்படுத்தவில்லையென்றால் தமிழ்த் தேசியத்தைப் பலப்படுத்த முடியாது. ஏனென்றால், தேசியத்தின் இதயம் ஜனநாயகம்தான். தேசியவாதம் தொடர்பான மேற்கத்திய அறிஞர்களின் மேற்கோள்களின்படி, தேசியவாதத்தின் உள்ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண்டும். கட்சிகளுக்குள் ஜனநாயகம் இல்லையென்றால், அவை தங்களைத் தேசியக்கட்சிகள் என்று கூறிக் கொள்வதில் பொருள் இல்லை. எனவே தமிழரசுக் கட்சிக்குள் நடந்த தேர்தல் எல்லா விதமான விமர்சனங்களோடும் முற்போக்கானது.

அது ஜனநாயகத்தின் மீது கொண்ட நம்பிக்கையால், அல்லது கட்சிக்குள் உட்கட்சி ஜனநாயகம் செழித்தோங்கியிருக்கிறது என்பதற்காக நடத்தப்பட்ட ஒரு தேர்தல் அல்ல. கட்சிக்குள் ஜனநாயகமே இல்லை; கூட்டு முடிவுகள் எடுக்கப்படுவதில்லை; தனியோட்டங்கள்தான் உண்டு சுமந்திரனும் சம்பந்தரும் தங்களுக்கு இடையே பேசி முடிவுகளை எடுத்தார்கள்; சுமந்திரன் யாரையும் பொருட்படுத்தாமல் தனியோட்டம் ஓடினார் என்ற குற்றச்சாட்டுக்கள் பல ஆண்டுகளாக இருந்து வருகின்றன.

ஆனால் சுமந்திரன் கூறுகிறார், கூட்டுப் பொறுப்பு என்று கூறி ஏனைய கட்சி முக்கியஸ்தர்களையும் அழைத்துக்கொண்டு சந்திப்புகளுக்குச் சென்றால், சந்திப்பு முடிவதற்கு இடையில் ஊடகங்களுக்குத் தகவல்கள் கசிய விடப்படுகின்றன என்று. அதாவது கட்சியின் முக்கியஸ்தர்கள் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை என்று. அவ்வாறு கட்சியின் கூட்டுப் பொறுப்பை சிதைத்தமைக்கு அவருடைய தனி ஓட்டங்கள்தான் காரணம் என்று கட்சியின் மேல்மட்ட உறுப்பினர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு கட்சிக்குள் ஜனநாயகம் சிதைந்து போயிருந்த ஒரு காலகட்டத்தில், தலைமைப் பொறுப்புக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைமைகளை சுமந்திரனை உருவாக்கினார். அவர் அதை உருவாக்கக் காரணம் கட்சிக்குள் ஜனநாயகத்தை பலப்படுத்த வேண்டும் என்பதற்காகவா? அல்லது கதிரைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் சம்பந்தரையும் மாவையும் கதிரைகளை விட்டு அகற்ற வேண்டும் என்பதற்காகவா? நடப்பு நிலைமைகளைத் தொகுத்துப்பார்த்தால், இருவரையும் கதிரைகளை விட்டு அகற்றுவதற்காகத்தான் சுமந்திரன் ஒரு தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தினார் என்று எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு தேர்தல் நடந்தால் அதில், தான் வெல்வேன் என்று அவர் உறுதியாக நம்பினார். அதற்குரிய வேலைகளை அவர் ஏற்கனவே செய்துவிட்டார். எனவே, வெற்றி நிச்சயம் என்று நம்பியபடியால்தான் அவர் தேர்தலை நோக்கி நிலைமைகளை நகர்த்தினார். தனக்கு வெற்றி நிச்சயம் என்பதனால், கட்சியை ஒரேடியாகத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடலாம் என்று அவர் நம்பினார்.

ஆனால் சிறீதரன் தொடக்கத்திலிருந்து நம்பிக்கை தளராமல் உழைத்தார். கடைசிக் கட்டத்தில் தளம்பிக் கொண்டிருந்த வாக்காளர்கள் தமிழ்த் தேசிய உணர்வுக்குப் பயந்து விட்டார்கள். தமிழ்த் தேசிய உணர்வின் அடிப்படையில் சிறீதரன் வெல்லலாம் என்ற சந்தேகத்தில், தளம்பிக் கொண்டிருந்த வாக்காளர்கள் சுமந்திரனுக்கு எதிராக முடிவெடுத்தார்கள். வீட்டுச் சின்னத்துக்கு விழும் வாக்குகள் ஒரு கூட்டுணர்வின் அடிப்படையில் விழும் வாக்குகளே. அக்கூட்டுணர்வுதான் தமது ஆதரவுத் தளம் என்று நம்பும் அரசியல்வாதிகள் அதற்குப் பயப்படுவார்கள். ஆனால் அதற்காக, அதை ஒரு முழுமையான கொள்கை வெற்றியாக வியாக்கியானம் செய்யத் தேவையில்லை. குறிப்பாக இது கட்சிக்குள் நடந்த தேர்தல். இதில் பங்குபற்றியவர்கள் அரசியல்வாதிகள். பொதுமக்கள் அல்ல. அதாவது அரசியல் விலங்குகள். அரசியல் விலங்குகள் கொள்கைக்கு உண்மையாக இருக்கும் என்றெல்லாம் கற்பனை செய்யத் தேவையில்லை.

அது சுமந்திரன் எதிர்பாராத தோல்வி. அவருடைய ஆதரவுத் தளம் நலன்களின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது. கட்சிக்குள் நுழைந்ததிலிருந்து அவர் எப்பொழுதும் ஒரு "கிங்மேக்கராகவோ" அல்லது பட்டத்து இளவரசனாகவோதான் தன்னைக் கட்டமைத்துக் கொண்டார். அதற்கு சம்பந்தரும் ஆதரவு. கட்சிக்குள் இரண்டாம் மூன்றாம் நிலைகளில் இருப்பதற்கு அவர் பழக்கப்படவில்லை. தோற்கடிக்கப்பட்ட பின் அவரைப் பொறுத்தவரை அவரைவிடத் தகுதி குறைந்தவர் என்று அவர் கருதிய சிறீதரனின் கீழ் அவர் செயற்பட வேண்டியுள்ளது. அதற்கு அவருடைய "ஈகோ" இடம் கொடுக்குமா?

மேலும் இத்தோல்வியானது, அவருடைய எதிர்காலத் தேர்தல் தோல்விகளையும் தீர்மானிக்ககூடும். அப்படிப்பட்டதோர் சூழலில், அவர் தேசியப் பட்டியல் ஆசனத்தைக் குறி வைக்கக்கூடும். அதற்கு செயலாளர் அவருடைய ஆளாக இருக்க வேண்டும். அதனால்தான் தன்னைச் செயலாளராக நியமிக்கக் கேட்டிருக்கிறார். அது நடக்கக்கூடிய காரியம் இல்லையென்று அவருக்கே தெரியும். ஆனால் அதன் மூலம் கிழக்கில் உள்ள தன்னுடைய ஆளை செயலாளராக நியமிக்குமாறு நிர்பந்திக்கலாம் என்பதை அவர் சரியாகவே கணித்திருந்தார். இது அவர் எதிர்காலத்தில் தேசியப் பட்டியல் ஆசனத்தைக் கைப்பற்றுவதற்கான முஸ்தீபு. அதாவது சுமந்திரன் கட்சிக்குள் தொடர்ந்தும் தனது முதன்மையைத் தக்கவைக்க முற்படுகிறார் என்று பொருள். அவர் சிறீதரனுக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில் அது தெரிகிறது.

கடிதம் எழுத வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? சிறீதரனோடு அதை நேரடியாக காதும் காதும் வைத்ததுபோல ஏன் பேச முடியவில்லை? அது இருவரும் தூரமாக இருப்பதைக் காட்டுகின்றதா?அதனை பகிரங்கப்படுத்துவதன் மூலமும், அதை எழுத்தில் முன்வைப்பதன் மூலமும், குறிப்பாக கடிதத்தில் சில சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக்காட்டுவதன் மூலமும் எதிர்காலத்தில் சிறீதரனின் அணிக்கு எதிராகச் சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்ற மிரட்டல் அங்கே உண்டா?

கட்சிக்குள் தன்னுடைய முக்கியத்துவத்தைத் தக்கவைக்க முடியவில்லை என்றால் அவர் கட்சிக்கு வெளியே போவாரா? ஒரு புதிய கட்சியை உருவாக்குவாரா? அதாவது தமிழரசுக் கட்சி உடையுமா? சுமந்திரன் ஒரு "கிங் மேக்கர்"தான். ஒரு "கிங் கைப்" போல ஒரு புதிய கட்சியைக் கட்டியெழுப்புவாரா?

ஆனால் செயலாளர் தெரிவில் ஏற்பட்ட குழப்பம் மக்கள் மத்தியில் சுமந்திரனுக்குப் பாதகமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தியிருக்கின்றது. சுமந்திரன் தோல்வியை ஒப்புக்கொள்ள மறுத்து அளாப்புகிறார் என்ற அபிப்பிராயம் மேலெழுந்திருக்கிறது. அவர் சிறீதரனுக்கு எழுதிய கடிதம் சாதாரண மக்களை அதிகம் சென்றடையாது. அரசியல் ஈடுபாடுடைய் அரசியல் கட்டுரைகளை வாசிக்கின்றவர்கள் மத்தியில் அதற்கு ஒரு கவனிப்பு இருக்கும். ஆனால் சாதாரண வாக்காளர்கள் சுமந்திரனை ஓர் அளாப்பியாகத்தான் பார்க்கிறார்கள்.

சிறீதரனைப் பொறுத்தவரை அவர் பழைய கூட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்று ஆசைப்படுகிறார். ஆனால் ஏனைய கட்சிகளை ஒருங்கிணைக்க முன்பு அவர் தன்னுடைய சொந்தக் கட்சிக்குள் தன்னுடைய நிலையைப் பலப்படுத்தி கட்சியை ஒரு கட்டிறுக்கமான நிறுவனமாகக் கட்டியெழுப்ப வேண்டியவராகக் காணப்படுகிறார். கட்சி இரண்டாக உடைவதைத் தடுப்பதென்றால் இப்போதைக்கு சுமந்திரன் அணியை அனுசரித்துப் போகவேண்டும்.

கடந்த சில தசாப்தங்களுக்குள் தென்னிலங்கையில் இரண்டு பாரம்பரியக் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் ஏற்கனவே சிதைந்து விட்டன. அது ஈழப் போரின் நேரடி விளைவு. ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் ஈழப் போரின் நேரடி விளைவாக இரண்டு பாரம்பரிய கட்சிகளும் இப்பொழுதும் அரங்கில் நிற்கின்றன. அவை பண்புருமாற்றத்துக்குத் தயாரா?

பல ஆண்டுகளுக்கு முன் தமிழகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது தனிப்பட்ட சந்திப்பின்போது இக்கட்டுரை ஆசிரியரிடம் சொன்னார்- "உங்களுடைய தலைவர்களில் பலர் தீர்ந்து போன சக்திகள் - Spent Forces - என்று". தீர்ந்துபோன சக்திகளை வைத்துக்கொண்டு கட்சிகளைப் புதுப்பிக்கலாமா ?

பல தசாப்தங்களுக்கு முன்பு செல்வநாயகம் சொன்னார் -தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று. ஆனால் இப்பொழுது அவருடைய கட்சியை அவருடைய கட்சிக்காரரிடம் இருந்தே காப்பாற்றுவது எப்படி?

நன்றி: நிலாந்தன்

# வெளிவந்துவிட்டது

## உலக வணிகம்
## ULAGA VANIKAM
## 2024




# விளம்பரமின்றி வியாபாரமில்லை

தங்கள் வணிகத்தை மேம்படுத்திக்கொள்ள உலக வணிகத்தில்
உங்கள் விளம்பரமும் இடம்பெற அழையுங்கள்

www.ulagavanikam.ca

**437-345-4203**

# ஊனங்கள் உடலிற்தான்

– வல்லையூரான்



நான் இயக்கத்தில் வந்து சேர்ந்து வருடங்கள் நான்கு கழிந்து விட்டன.

***இந்த நான்கு வருடங்களிலும் என்றுமே வீட்டுக்குச்செல்ல வேண்டுமென்றோ, எனது பெற்றோர்களை சந்திக்க வேண்டும் மென்றோ உடன் பிறப்புக்களை சந்திக்க வேண்டுமென்றோ ஆசைப்பட்டவளுமல்ல.***

***இயக்கத்தில் உள்ள பிள்ளைகளில் பலர் வீடுகளுக்கு விடுமுறையில் சென்று வந்துள்ளார்கள். என்னைப் பொறுத்த வரையில் நான் வீடு செல்லாததற்குச் காரணம், நான் வீட்டிற்குச் சென்றால் வீட்டிலுள்ளவர்கள் என்னை மறித்து விடுவார்கள் என்றோ அழுது ஒப்பாரி வைப்பார்கள் என்பதாலோ அல்ல.***

வீட்டிற்குச் செல்லவேண்டும்; பெற்றோரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏனோ எனக்கு ஏற்படவில்லை. அவ்வளவு தான்.

பொதுக் கூட்டங்களில் பேசப்பட்ட ஆவேசப் பேச்சுக்களைக் கேட்டு விட்டோவெறுமனே உணர்ச்சியினால் உந்தப்பட்டோ நான் திடீரென்று இயக்கத்துக்கு வந்து சேர்ந்துவிட்டவள் அல்ல.

நான் பிறந்து வளர்ந்த வடமாராட்சிப் பகுதி, அடிக்கடி சிங்கள ஆட்சியாளர்களின் அடாவடித்தனங்களால் அழிக்கப்பட்ட நிகழ்வுகள் என் மனதில் கொஞ்சம் கொஞ்சமாக போராட்ட உணர்வை வளர்த்துக்கொண்டே வந்தன.

ஆனாலும் பெண்கள் பூரணமாகத் தங்களை போராட்டத்துடன் இணைத்துக் கொள்ளாத நாட்கள் அவை.

ஆரம்பத்தில் “சுதந்திரப் பறவைகள்” அமைப்பிலேயே என்னை இணைத்துக் கொண்டேன். முதலுதவிச் சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டு சிங்கள இராணுவத்தினரின் தாக்குதல்களினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு சிகிச்சைகள் செய்வது போன்ற செயல்களில் என்னையும் ஈடுபடுத்திக்கொண்டு வந்தேன்.

உண்ணாவிரதங்கள், ஊர்வலங்கள், பொதுக்கூட்டங்கள் என்று நான் திரிந்த ஆரம்ப நாட்களில் எனது வீட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது.

“பொம்பிளைப் பிள்ளையள் கண்டபாட்டிலை வீட்டைவிட்டு வெளிக்கிடக் கூடாது. புலிக்கொடியைத் தூக்கிக்கொண்டு ஊர்வலமெண்டும் உண்ணாவிரதம் எண்டும் றோட்டில் திரியிறது அவமானம். பொடியளும் பெட்டையளும் சேர்ந்துகொண்டு திரிஞ்சா பாக்கிறவை என்ன சொல்லுவினம்...?” என்றெல்லாம் அம்மா அடிக்கடி சொல்லிக்கொள்வா.

“அவையளோடை சேரக்கூடாது... இவையளோடை பழகக் கூடாது...”. என்றெல்லாம் நச்சரிப்புக்கள் வேறு.

“சாதி குறைந்தவர்கள் என்று கருதப்பட்டவர்களோடு நான் பேசினால், பழகினால், சேர்ந்து திரிந்தால் அவர்களோடு நான் ஓடிவிடுவேன்” என்ற அச்சம் அம்மாவுக்கு ஏற்பட்டிருக்கவேண்டும்.

இந்த அழுத்தங்கள் அனைத்தும் போராட்டத்தின் பக்கம் என்னை இழுத்துச் சென்றனவே தவிர யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஒரு சாதாரண பெண்ணுக்கு ஏற்படுகின்ற படிக்க வேண்டும், திருமணம் செய்ய வேண்டும், குழந்தைகளைப் பெறவேண்டும் என்பது போன்ற சராசரி வாழ்க்கைக்கு இட்டுச் செல்லவில்லை.

எனது நெஞ்சத்தினுள் வித்தாக விதைக்கப்பட்டு சின்னஞ்சிறு செடியாக வளர்ந்து கொண்டிருந்த எனது போராட்ட உணர்வுகள் பாரியதோர் விருட்சமாக வளர்வதற்கு ‘வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன்” நடவடிக்கை வழிசமைத்தது.

சிறீலங்கா அரசின் திட்டமிட்ட அந்தப் பெரிய தாக்குதல்களின் போது அப்பகுதி மக்கள் எல்லோரும் பாடசாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

முதலுதவிச் சிகிச்சை நிலையமொன்றில் கடமை புரிந்து கொண்டிருந்த நானும், சினேகிதிகள் சிலரும் எங்கள் பெற்றோர்களோடு கோயில் ஒன்றில் தஞ்சம் புகுந்த போதுதான் எங்களது மக்களின் மனோநிலையை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

“இஞ்சார் பெட்டையள் நீங்கள் இங்கை இருக்க வேண்டாம் எங்கையாவது ஓடிவிடுங்கோ... நீங்கள் இங்கை இருக்கிறதாலை எங்கடை பெம்பிளைப்பிள்ளைளையும் ஆமிவந்து பிடிச்சுக் கொண்டு போயிடுவான்... நீங்கள் எங்கையாவது ஓடுங்கோ... அல்லது ஆமியிட்டைப் போய்ச் சரண் அடையுங்கோ.” என்று கோயில் மண்டபத்தில் கூடியிருந்த எங்கடை ஊர்ச் சனமே எங்களுக்குச் சொன்னபோது, எனக்கு என்னையறியாமலேயே அவர்கள் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

அவ்வளவு நாளும் நாங்கள் நடாத்திக் கொண்டிருந்த முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில், எந்த மக்கள் எங்களிடம் வந்து நோய் நொடியென்று சொல்லி மருந்துகளை வாங்கிப் போனார்களோ, காயங்களுக்கு மருந்து கட்டுவித்துக்கொண்டு சென்றார்களோ, அந்த மக்களே எங்களை அந்த இடத்திலிருந்து “ஓடுங்கோ... ஓடுங்கோ” என்று விரட்டிய போது தான்.
“கட்டாயமாக நான் இயக்கத்திற்குப் போய்ச் சேர வேண்டும்; இயக்கத்தைப் பற்றி போராட்டத்தின் அவசியம் பற்றி மக்களுக்குப் புரியவைக்க வேண்டும்” என்ற உணர்வு ஆத்திரத்தோடு கலந்து கொண்டது.

அமைதிப்படை என்ற பெயரில் இந்தியா இங்கு வந்ததும் நான் அந்தக் காலகட்டத்தில் இயக்கத்தில் என்னை இணைத்துக் கொண்டதும் அலம்பில் காட்டுக்குள் நான் பயிற்சி பெற்றதும் கடந்தகால நிகழ்வுகள்.

இந்தியக்காரனோ... சிங்களவனோ மொத்தத்தில் ஆமியோட சண்டை பிடிக்கிறதெண்டா...

அடிபாட்டுக்குப் போறதெண்டா...




நாங்கள் எங்களுக்குள்ளேயே போட்டி போட்டுக்கொள்ளுவம்...

எங்களை அடிபாட்டுக்கு விடவில்லையெண்டு சொல்லி அண்ணையிலை எத்தனை தடவை கோபப்பட்டிருப்பம்...

ஆனா இப்ப என்னாலை அடிபாட்டுக்கு போக ஏலாமல் இருக்கு எண்டு நினைக்கேக்கை தான்...

கோட்டை அடிபாடு, சிலாவத்துறை அடிபாடு, மாங்குளம் தாக்குதல் எல்லாவற்றிலும் வெற்றிக்களிப்போடு மீண்ட எனக்கு ஆனையிறவு அடிபாட்டிலைதான்...

ஆனையிறவு அடிபாட்டுக்கு நாங்கள் வெளிக்கிட்டதை இப்ப நினைச்சாலும் எவ்வளவு சந்தோசமா இருக்குது...

பெண் போராளிகள் நாங்களும், அண்ணாக்களுமாக பல நூற்றுக்கணக்கானோர் எந்தவித கவலைகளுமின்றி “எப்ப அடிப்பம்...? எப்ப ஆனையிறவைப் பிடிப்பம்...?” என்ற ஆவலோடுதான் சென்றோம்.

நாங்கள் சென்ற இயக்கச்சிப் பகுதி பரந்த வெளிப் பிரதேசம். அந்தப் பகுதியில் இழப்புக்கள் அதிகம் வருமென்பது எங்களுக்கு முன்பே தெரியும். ஆனாலும் இழப்புக்களை நினைத்தால் நாங்கள் சண்டைபிடிக்க முடியாது. நாங்கள் முன்பு கலந்து கொண்ட எத்தனையோ களங்களில் இழப்புக்களையும் சந்தித்திருக்கின்றோம்; வெற்றிகளையும் பெற்றிருக்கின்றோம்.

குழுக்கள் குழுக்களாக நாங்கள் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டோம். முதலில் ஒரு குழு உள்ளே சென்று காயப்பட்டிட்டுது அல்லது இழப்புக்கள் ஏற்பட்டிட்டுது என்பது தெரிந்த பின்போ அடுத்த குழு தாக்குதலுக்குச் செல்லும்.

பாதுகாப்பு வாகனம் ஒன்று முன்னே செல்ல அதன் பாதுகாப்பில் எங்களது முதலாவது குழு சென்று கொண்டிருந்தது. எங்களது காவலரணிலிருந்து நூறு யார் தூரம் வரை எங்கள் வாகனம் சென்றுவிட்டது. எதிரி தரப்பிலிருந்து எந்தவிதமான தாக்குதலும் எங்கள் பகுதியை நோக்கி வரவில்லை. ட்ராக்டர் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருந்தது. ஐந்து நிமிட இடைவெளியின் பின் சிறீலங்கா இராணுவத்தினரின் காவலரண்கள் அனைத்திலுமிருந்தும் சகல விதமான ஆயுதங்களும் பயன்




படுத்தப்பட்டதை எங்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது. எங்கள் பகுதியிலிருந்தும் பதில்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

எங்கள் பாதுகாப்பு வாகனத்தின் மீது எதிரி தரப்பிலிருந்து ஆர்.பி.ஜி. தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதானல் அது தீப்பற்றி எரிந்தது. அதன் பாதுகாப்பில் சென்ற பிள்ளைகள் சிதறி பல பக்கங்களிலும் சென்றபோது அவர்களை நோக்கிச் சீறிப்பாய்ந்து வந்தன ரவைகள். எறிகணைத் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

**“களத்தில் நாங்கள் வீரமரணமடையலாம். எங்கள் கண்கள் பறிபோகலாம். கைகள் போகலாம். கால்கள் போகலாம். நாங்கள் ஊனமுற்றவர்களாகலாம் ஆனாலும் நாமனை வரும் உறுதியோடு இறுதிவரை போராடி எமது இலட்சியத்தை வென் றெடுப்போம். இது திண்ணம்.”**

முன்னுக்குச் சென்ற நால்வர் காயப்பட்டு விட்டதாகவும், அவர்களை அப்புறப்படுத்தும்படியும் லீமா அறிவித்தாள்.

அதன்படி மீட்புக் குழுவினர் சென்று காயப்பட்டவர்களைத் தூக்கி வந்தனர். பிள்ளைகள் உயிராபத்தான நிலையில் இருந்த காரணத்தினால் அவர்களது ஆயுதங்களை மீட்புக் குழுவினரால் எடுத்துவர முடியாது போய்விட்டது.

முன்னே சென்ற இரு குழுக்களைச் சேர்ந்தவர்களும் காயப்பட்டு விட்டதனால் மூன்றாவது குழுவினரோடு நானும் செல்ல நேர்ந்தது.

நான் சென்றபோது எங்கள் தரப்பில் ஆர்.பி.ஜி. கொண்டு சென்றவர்களில் “வீரமரணம் அடைந்திருந்தார். இயக்குபவரும் காயமடைந்திருந்தார். “செல்” நிரப்பியபடி ஆர்.பி.ஜி. கீழே விழுந்து கிடந்தது. காயப்பட்டவரையும் தூக்கி ஆர்.பி.ஜியையும் கொண்டு சென்று பின்புறமாக அனுப்பிவிட்டு மீண்டும் நான் முன்னேறினேன்.

அங்கு சென்றவர்களில் பலரும் வீரமரணத்தைத் தழுவிக்




கொண்டோ, காயப்பட்டே இருந்தனர். அது வெட்டவெளிப் பிரதேசம் என்பதால் காயமுற்றவர்களைத் தூக்கிச் சென்றவர்களும் காயமடைந்து ஆங்காங்கு கிடந்தனர். அவர்களைத் தூக்க முனைந்தால் எதிரியின் காவலரண்களைப் பிடிக்க முடியாது போய்விடும் என்பதால், பக்கத்தில் நின்ற அண்ணாக்களிடம் “பொயின்ரைப் பிடிக்க வேணும். விடியப் போகுது, ஓடிவாருங்கோ” என்று சொல்லிக் கொண்டே நான் முன்னுக்கு ஓடினேன். அண்ணாமாரும் நானும் ஒடிப்போய் ஒரு இடத்தில் நிலை எடுத்திருந்து அடித்து விட்டு மீண்டும் முன்னே செல்வதற்காக எழுந்தபோது அண்ணாக்கள் இருவருக்கு வயிற்றில் வெடிவிழுந்தது.

அவர்கள் தங்களுக்கு வெடிவிழுந்ததை பொருட்படுத்தவேயில்லை…

“அக்கா ஓடுங்கோ அக்கா… பொயின்ரைப் பிடியுங்கோ அக்கா…” என்றுதான் கத்திச்சினம்.

நான் முன்னுக்கு ஓடினன். அங்கை “அருள் 89” லோட் பண்ணியபடி பிள்ளையள் நின்று கொண்டிருந்தினம். எதிரியின் காவலரணிலிருந்து 30 யார் தூரத்துக்குக் கிட்டப் போயிட்டம்.

“இதிலையிருந்து நாங்கள் அடிச்சால் அவன் 203 செல் அடிப்பான். பொயின்றுக்குக் கிட்டவந்து படுத்திருக்கிறது வீண் வேலை. எழும்பி முன்னுக்கு ஓடிப்போய் “சக்கைக்கான் எறிவம்” என்றேன் நான்.

“காந்தி அக்கா, என்னிடம் ரவைகள் முடிஞ்சிது. எனக்கு ரவுண்ட்ஸ் அனுப்பச் சொல்லி வோக்கியில் அறிவியுங்கோ” என லீமா என்னிடம் சொன்னாள்.

வோக்கியில் தொடர்வு எடுக்க முயன்றேன். நான் பேசியது எம்மவர்களுக்குக் கேட்கவில்லை. அவர்கள் பேசியது எனக்குக் கேட்கவில்லை. வோக்கித் தொடர்புகளைத் தொடர்ந்து குழப்பிக் கொண்டிருந்தார்கள்.

எங்கும் ஒரே வெடிச்சத்தம்… வோக்கியில் தொடர்பு எடுக்க முடியாமலேயே இருந்தது.

“முட்கம்பிகளை அகற்றிவிட்டு நாங்கள் முன்னுக்குப் போய் கிரனைட் வீசுவம்” என்று சொல்லிக் கொண்டே எழுந்து முன்னுக்கு ஓடினேன் நான்.

“ரோர்பிடோவின்” (வெடிக்கண்ணி) மூலம் மிதிவெடிகளை வெடிக்கச் செய்வதிலும், முட்கம்பி வேலிகளை அகற்றும் வேலையிலும் ஈடுபட்டிருந்த லீமாவின் குரல் என்னைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

“எனக்குக் காயம் காந்தி அக்கா…” என்று சொல்லியபடியே மார்பைப் பொத்தியபடி லீமா கீழே விழுந்ததுதான் எனக்குத் தெரியும். அவள் வீரமரணமடைந்து விட்டாள் என்பதனை நான் பின்புதான் தெரிந்து கொண்டேன்.

திடீரென்று யாரோ என்னையும் தூக்கிவீசியது போன்றதோர் உணர்வு. கொஞ்சத்தூரம் மேலே போய் கீழே வந்தது மாதிரியான நிலை. காலொன்றில் இனம் புரியாத வலி. ஆனாலும் நான் மயங்கிவிடவில்லை. நிலாவெளிச்சத்துடன் போட்டி போட்டுக் கொண்டிருந்த “பரா லைற்றின்” உதவியோடு கால்களை ஒரு கணம் உற்று நோக்கினேன்.

காலொன்றில் முழங்காலுக்குக் கீழே எதுவும் இல்லை… வெறும் எலும்பும் பிய்த்தெறியப்பட்ட நிலையில் சதைத்துண்டங்களுமாய்…

நான் “மைன்ஸிலை” காலை வைச்சபடியால் எனது காலொன்றை இழந்துவிட்டேன் என்பதனை அப்பொழுதுதான் என்னால் உணர்ந்து கொள்ளமுடிந்தது.



எழும்பினால் அடுத்த காலும் போய் விடுமோ என்ற தயக்க உணர்வு.

ஆனாலும் காலொன்று பறிபோய்விட்ட நிலையிலும் கத்தினேன்.

கால்போனது எனக்குப் பிரச்சினையாய் படவில்லை. என்னாலை எழும்பி ஓட ஏலாமல் கிடக்கு… பொயின்ரைப் பிடிக்க ஏலாமல் போச்சு என்ற ஏக்கமே என் நெஞ்சில் பரவிநின்றது.

அப்பவும் நான் பலமாகக் கத்தினேன்.

“எனக்கு மைன்ஸிலை கால் போயிட்டுது… என்னைத் தூக்க வேண்டாம்… எழும்பி எல்லோரும் ஓடுங்கோ…

பொயின்ரைப் பிடியுங்கோ” என்று தொடர்ந்து கத்தினேன்.

பொழுது விடியத் தொடங்கியிட்டுது… இனி மேலும் படுத்துக் கிடந்தால் ஆமி வந்து பிடிச்சுக்கொண்டு போயிடுவான்… அல்லது ஷெல் அடிச்சு எங்களைச் சாகடிச்சுப் போடுவான்.
நான் சாகிறதுக்கு எப்பவுமே பயப்பிட இல்லை… ஒரு கால் போய்விட்டது என்பதற்காக செத்துவிடவும் முடியாது.

எமது இயக்கத்தில் இரண்டு கண்களும் இரண்டு கைகளும் இழந்தவள் வாயினால் பேனா வைக் கவ்வி எழுதுகிறாள். காலினால் ரவைகளை நிரப்புகின்றாள்…

எனக்கு ஒரு கால்தானே போய்விட்டது…

நான் எதற்காக சாவை அரவணைக்க வேண்டும்.

நாங்கள் எதிரியிடம் பிடிபட்டு விடக் கூடாது என்பதற்காக எங்கள் மானத்தைக் காப்பதற்காக எங்கள் கழுத்தில் தொங்கிக்கொண்டிருக்கும் “சயனைட்டை” ஒருகணம் தொட்டுப் பார்த்துக கொண்டேன்.

ஆனாலும் சாவைத் தேடிக்கொண்டுவிட்டால் சிலவேளை எனது உடலை எம்மவர்களால் மீட்க முடியாது போய் விட்டால் எனது உயிரற்ற உடலைக்கூட அந்த இனவெறி பிடித்த சிறீ லங்கா அரசின் சிங்கள இராணுவத்தினர் சீரழித்து சின்னாபின்னப் படுத்தி விடவும் கூடும்…

மெது மெதுவாக இழுத்து இழுத்து எங்கடை காவலரனுன்கு கிட்ட சென்றுதான் வோக்கியிலை அறிவிச்சன். “என்னை வந்து தூக்குங்கோ” என்று சொல்லி.

நான் இயக்கத்திலை சேர்ந்து நாலு வருசத்துக்குப் பிறகு எனக்குக் கால்போன பிற்பாடுதான் எங்கட வீட்டில் என்ர அப்பா, அம்மா, சகோதரங்கள் எல்லாரையும் கண்டனான்… அதுவரையும் நான் எவரையுமே சந்திக்கவில்லை.

என்னைப் பார்ப்பதற்காக “வைகறைக்கு” வந்த அம்மா, “இனியும் இங்கையிருந்து என்னடி செய்யப்போறாய்…? காலைப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்து விடன்…” என்று சொன்ன போது எனக்கு அம்மா மிது ஆத்திரம் வரவில்லை. அவரது அறியாமையை எண்ணியபோது சிரிப்புத்தான் வந்தது. சில வேளை நீங்களும், “சொத்தி… அதுவும் பொம்பிளைப் பிள்ளை… இனி உன்னாலை சண்டைபிடிக்க ஏலுமே…? விசர்க்கதைகளை விட்டுப்போட்டு வீட்டை போய் ஆத்தை அப்புவோடை இரன்” எண்டுதான் சொல்லுவியள்.

அம்மாவுக்குச் சொன்னதைத் தான் உங்களுக்கும் சொல்லுறன்.

“களத்தில் நாங்கள் வீரமரணமடையலாம். எங்கள் கண்கள் பறிபோகலாம். கைகள் போகலாம். கால்கள் போகலாம். நாங்கள் ஊனமுற்றவர்களாகலாம் ஆனாலும் நாமனைவரும் உறுதியோடு இறுதிவரை போராடி எமது இலட்சியத்தை வென்றெடுப்போம். இது திண்ணம்.”

நன்றி: புலிகளின் குரல்
மாசி 1993 எரிமலை

# 37 ஆம் ஆண்டு
# வீரவணக்கம்



லெப். கேணல் அற்புதன் (பொன்னம்மான்)
(யோகரத்தினம் குகன்
கலட்டி, யாழ் - 23.12.1956)



மேஜர் கேடில்ஸ்
(மகாலிங்கம் திலீபன்
கண்டாவளை கிளி
11.05.1966)



கப்டன் வாசு
(உருத்திராபதி சுதாகர்
வல்வெட்டித்துறை, யாழ்
13.03.1961)



லெப். சித்தார்த்தன்
(வைத்திலிங்கம் வசீகரன
சுண்டுக்குளி, யாழ்
09.05.1959)



2 ம் லெப். பரன்
(கிருட்னர் அர்ச்சுனன்
வல்வெட்டித்துறை, யாழ்
27.05.1967)

**14.02.1987 அன்று கைதடியில் சிறீலங்காப் படையின் நாவற்குழிமுகாமைத் தாக்கும் முயற்சியின்போது எதிர்பாராது ஏற்பட்ட வெடிவிபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்கள்**



வீரவேங்கை குமணன்
(கந்தையா மோகனலிங்கம்
மட்டுவில், யாழ்
20.10.1965)



வீரவேங்கை தேவன்
(தம்பிப்பிள்ளை வசந்தகுமார்
மீசாலை, யாழ்
24.02.1963)



வீரவேங்கை யோகேஸ்
(சுந்தரன் தனபாலசிங்கம்
ஆழியவளை, யாழ்
09.06.1960)



வீரவேங்கை கவர்
(கதிர்காமு நகுலேஸ்வரன்
வவுனியா
23.12.1966)



வீரவேங்கை அக்பர்
(அருளம்பலம் யோகநாதன்
மட்டுவில், யாழ்
22.05.1963)

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

# ஈழத் தமிழர்களின் விடுதலை! தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்ட மத்தியில் பழ. நெடுமாறன் ஆற்றிய வரை!

09 பெப்ரவரி 2024

உலகம் கண்டறியாத வகையில் இனப்படுகொலைக்கு ஆளாகி நலிந்து கிடக்கும் ஈழத் தமிழர் நிலை குறித்து உலக மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இம்மாநாட்டினை தமிழ்நாடு மாணவர் கூட்டமைப்பு கூட்டியுள்ளதை வரவேற்று மனமாறப் பாராட்டுகிறேன்.

“ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான பொது மக்கள் வாக்கெடுப்புக் கூட்டம்” என்ற பெயரில் நடைபெறும் இக்கூட்டத்தின் சார்பில் தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம் வெளியிடப் பட்டுள்ளது. இது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும்.

தமிழ்நாட்டில் பல்வேறு கட்சிகளும் ஒன்றுபட்டு நின்று வெளியிட்டுள்ள இந்த பிரகடனம் இருண்டு கிடக்கும் ஈழத் தமிழர் வாழ்வில் விடிவைக் கொண்டுவருவதற்கு உதவும் என்று உறுதியாக நம்புகிறேன்.

உலக வரலாற்றில் பல்வேறு தேசிய இனங்கள் தங்களின் விடுதலைக்கான பிரகடனங்களை வெளியிட்டு சுதந்திர அரசுகளையும் அமைத்துள்ளன. இந்திய நாட்டின் விடுதலைக்காக அயல்நாடுகளிலிருந்து பல்வேறு வகையான போராட்டங்களை நடத்திய இந்தியப் புரட்சி வீரர்களின் வரலாறு மெய்சிலிர்க்க வைக்கும் வரலாறாகும்.

1915ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாளன்று இராசா மகேந்திர பிரதாப் தலைமையில் ஆப்கானித்தானின் தலைநகரமான காபூலில் முதலாவது இந்திய சுதந்திர அரசு நிறுவப்பட்டுப் பிரகடனம் செய்யப்பட்டது. இந்த அரசின் வெளியுறவுத்துறை அமைச்சராக தமிழன் செண்பகராமன் பொறுப்பேற்றார்.

1917ஆம் ஆண்டில் மூண்டெழுந்த அக்டோபர் புரட்சியின் விளைவாக கொடுங்கோலன் ஜார் ஆட்சி அகற்றப்பட்டு மாபெரும் தலைவர் லெனின் அவர்கள் தலைமையில் சோவியத் ஆட்சி பதவியேற்றது. இந்நிகழ்ச்சி இந்திய விடுதலை வீரர்களுக்கு எழுச்சியையும் புதிய நம்பிக்கையையும் ஊட்டியது. உடனடியாக இராசா மகேந்திர பிரதாப் லெனினைச் சந்திப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டார். 1919ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் நாள் அவர் தலைமையில் ஐவர் கொண்ட ஒரு தூதுக்குழு மாஸ்கோ சென்று லெனின் அவர்களைச் சந்தித்து இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு உதவுமாறு வேண்டிக் கொண்டது. இக்குழுவில் மண்டயம் திருமாச்சாரியா என்னும் தமிழரும் கலந்துகொண்டார் என்பது நமக்குப் பெருமை அளிக்கும் ஒன்றாகும். இவரின் குடும்பம் பாரதியாரைப் போற்றி அவருக்குத் தேவையான உதவிகள் அனைத்தையும் செய்த குடும்பமாகும்.

இரண்டாம் உலகப் போரின் போது நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ஆங்கிலேயர் ஆட்சியின் காவலில் இருந்து தப்பி செர்மனி நாட்டுக்குச் சென்று அங்கு இட்லர் அரசின் உதவியுடன் இந்திய தேசிய இராணுவம் அமைத்ததும், பிறகு சிங்கப்பூர் சென்று அங்கு சப்பானிய அரசின் உதவியுடன் சுதந்திர இந்தியப் பிரகடனத்தை வெளியிட்டு சுதந்திர அரசு ஒன்றை நிறுவியதும் வரலாற்றில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்டுள்ளன.

உலக வரலாற்றில் பல்வேறு நாட்டு மக்கள் இவ்வாறு அடிமைத் தனத்திலிருந்து மீள்வதற்காகத் தொடர்ந்து போராடியதும் சுதந்திரப் பிரகடனங்களை வெளியிட்டதும் பதிந்துள்ளது. அந்த வகையில் இன்று ஈழத் தமிழர்களின் விடுதலைக்காக தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப்பிரகடனம் இந்த கூட்டத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

அத்தகைய நாடுகள் சிலவற்றின் விடுதலைப் போராட்டம் குறித்தும் அவர்களுக்கு எதிராக ஏவப்பட்ட ஒடுக்கு முறைகள் குறித்தும் ஐ.நா. பேரவை தலையிட்டு மக்கள் வாக்கெடுப்பு நடத்தி அந்நாடுகள் விடுதலைபெற வழிவகுத்தமை குறித்தும் சிலவற்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## எரித்திரியா



ஆப்பிரிக்கா கண்டத்தில் உள்ள எரித்திரியா நாடு 1880ஆம் ஆண்டு வரை இத்தாலியினால் ஆக்கிரமிக்கப்பட்ட ஒரு குடியேற்ற நாடாக விளங்கியது. இரண்டாம் உலகப் போரில் இத்தாலி தோற்கடிக்கப்பட்டதின் விளைவாக பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இந்நாடு ஒப்படைக்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு ஐ.நா. பேரவை இந்நாட்டினை எத்தியோப்பியா நாட்டுடன் இணைத்தது. 10ஆண்டுகளுக்குமேல் இந்த இணைப்பு நீடிக்கவில்லை. எரித்திரியா மக்கள் தங்களுக்கு சுயாட்சி உரிமை கோரி போராடத் தொடங்கினார்கள். எத்தியோப்பிய மன்னராட்சி கடும் ஒடுக்குமுறைகளை ஏவி எரித்திரியா மக்களை அடக்கியது.

1974ஆம் ஆண்டில் எத்தியோப்பிய மன்னருக்கெதிராக அந்நாட்டின் மக்கள் செய்த கிளர்ச்சியின் விளைவாக அவர் நாட்டை விட்டு ஓடிவிட்டார். அதற்குப் பிறகு எத்தியோப்பியாவில் கம்யூனிச ஆட்சி மலர்ந்தது. இதற்கு சோவியத் நாடு அனைத்து உதவியையும் செய்தது. மற்ற கம்யூனிஸ்டு நாடுகளும் இதற்கு அங்கீகாரம் அளித்தன. ஆனால், இந்த ஆட்சியை எதிர்த்து போராடிய எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி என்னும் அமைப்புக்கு செஞ்சீனம் உதவ முன்வந்தது.

1980களில் எத்தியோப்பிய அரசுக்கு அளித்த ஆதரவை சோவியத் நாடு விலக்கிக் கொண்டது. எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி தனது போராட்டத்தைத் தீவிரமாக நடத்தி 1991ஆம் ஆண்டு மே மாதத்தில் எத்தியோப்பிய படைகளைத் தோற்கடித்தது. பின்னர் ஐ.நா. தலையிட்டு இருதரப்புக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்தியது. இதன்விளைவாக 1993ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஐ.நா. மேற்பார்வையின் கீழ் எரித்திரிய மக்களின் விருப்பத்தை அறிய பொதுவாக்கெடுப்பு நடத்தப் பட்டது. இவ்வாக்கெடுப்பில் மிகப்பெரும்பான்மையினர் எரித்திரியாவின் விடுதலைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

## கொசோவோ



ஐரோப்பா கண்டத்தில் உள்ள யூகோசுலோவிய நாட்டிலிருந்த ஒரு குடியரசான செர்பியாவின் ஒரு மாநிலமாக கொசோவோ திகழ்ந்தது. கொசோவோவில் வாழ்ந்த மக்களில் பெரும்பாலோர் அல்பேனியர் ஆவார்கள். எனவே செர்பியர்களின் ஆதிக்கத்தின்கீழ் அவர்கள் வாழ்வதற்கு விரும்பவில்லை. கொசோவோ சட்டமன்றம் கூடி, கொசோவோ செர்பியாவிலிருந்து பிரிக்கப்பட்டு தனி மாநிலமாகவேண்டும் என்ற தீர்மானத்தை மிகப்பெரும்பாலான வாக்குகளினால் முடிவு செய்தது. 1968ஆம் ஆண்டில் கொசோவோ தனி மாநிலமாக்கப் பட்டது.

1980களில் யூகோசுலோவியாவில் இருந்த பல்வேறு தேசிய இனங்கள் நடத்திய கிளர்ச்சிகளின் விளைவாக அந்நாடு உடைந்து சிதறியது. 1990ஆம் ஆண்டு சூலையில் கொசோவோ தனி நாடு பிரகடனத்தை வெளியிட்டது. அல்பேனியா நாடு இதற்கு அங்கீகாரம் கொடுத்தது. யூகோசுலோவியா இதற்கு எதிராக தனது படைகளை அனுப்பியது. இதன்விளைவாக கொசோவோ விடுதலைப் படைக்கும் யூகோசுலோவியா படைகளுக்குமிடையே பெரும் போர் மூண்டது. 1999ஆம் ஆண்டில் நேட்டோ அமைப்பு தலையிட்டு யூகோசுலோவியாவிற்கு எச்சரிக்கை விடுத்தது. வேறு வழியின்றி நேட்டோ அமைப்பு தனது படைகளை கொசோவோவுக்கு அனுப்பியது. அதன் விளைவாக அங்கு அமைதி நிலைநாட்டப் பட்டது. 2008ஆம் ஆண்டு கொசோவோ தனது சுதந்திரத்தைப் பிரகடனம் செய்தது. 13ஆண்டு காலத்திற்கும் மேலாக சர்வதேச நாடுகள் இதை புறக்கணித்தன. இறுதியாக சர்வதேச நீதி மன்றம் கொசோவோ பிரகடனம் சர்வதேசச் சட்டபடி சரியானதே எனத் தீர்ப்பளித்தது. அதன்பின் சர்வதேச நாடுகள் கொசோவோ நாட்டை அங்கீகரித்தன.

## கிழக்கு திமோர்



ஆசியா கண்டத்தில் உள்ள கிழக்கு திமோர் இந்தோனேசியாவிற்கு அருகில் உள்ள திமோர் நாட்டை 1976ஆம் ஆண்டு



முதல் 1990ஆம் ஆண்டு வரை இந்தோனேசியா ஆக்கிரமித்து வைத்திருந்தது. இக்காலகட்டத்தில் 1,80,000த்திற்கும் மேற்பட்ட கிழக்கு திமோர் மக்கள் இந்தோனேசியப் படைகளால் இனப்படுகொலைக்கு ஆளாக்கப்பட்டார்கள். மனித உரிமை மீறல்களும் நடைபெற்றன. இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக சுதந்திர நாடு கோரிக்கை எழுந்தது.

கிழக்கு திமோர் மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக போர்ச்சுக்கல், பிலிப்பைன்சு, ஆசுதிரேலியா மற்றும் மேற்கு நாடுகள் பல குரல் கொடுத்தன. ஆனால், அமெரிக்கா இந்தோனேசியாவிற்கு ஆதரவாக தனது படைகளை அனுப்பியது. அமெரிக்காவின் இச்செயல் கிழக்கு திமோர் மக்களால் மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றாலும் கடும் கண்டனத்திற்கு ஆளாகியது. எனவே அமெரிக்கப் படைகள் வெளியேறின. 1999ஆம் ஆண்டு ஆகசுடு 30ஆம் நாள் அன்று கிழக்கு திமோரில் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு கிழக்கு திமோர் சுதந்திர நாடாக வேண்டும் என மிகப்பெரும்பாலான மக்கள் தீர்ப்பளித்தனர். அதை உலகம் ஏற்று கிழக்கு தைமூர் நாட்டிற்கு அங்கீகாரம் அளித்தது.

## உலக ஏற்பு

ஒரு தேசிய இனத்தின் நாட்டினை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டுமானால், அதற்குக் கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.

1.வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி

2.நிரந்தரமான மக்கள் தொகை

3.ஒரு அரசு ஆட்சி

4.மற்ற நாடுகளுடன் உறவு கொள்ளத்தக்க வகையில் அமைந்திருப்பது

மேற்கண்ட நான்கும் இருந்தால் உலக நாடுகள் அதை ஏற்கும். சில நாடுகளின் பகுதிகள் அந்நாடுகளின் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருக்கும். எடுத்துக்காட்டாக, சீனாவின் ஒரு பகுதியான தைவான் தீவகத்தை தேசிய சீன அரசு தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அதற்கு அமெரிக்கா உறுதுணையாக நிற்கிறது. எனவே தைவானை செஞ்சீனம் உள்பட பல நாடுகள் அங்கீகரிக்கவில்லை. அதைப்போல, வடகொரியா, தென்கொரியா ஆகியவை இரு நாடுகளாகத் திகழ்கின்றன. வடகொரியா கம்யூனிஸ்டு நாடாகவும், தென்கொரியா அமெரிக்க சார்பு நாடாகவும் விளங்குகின்றன. தென்கொரியாவை வடகொரியா அங்கீகரிக்கவில்லை.

வேற்று நாட்டின் கட்டுப்பாட்டில் சில நாடுகள் உள்ளன. செர்மானிய கட்டுப்பாட்டில் சுலோவக் குடியரசு உள்ளது. சப்பானின் கட்டுப்பாட்டில் மஞ்சுகோ உள்ளது. பிற நாடுகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை சுதந்திர நாடாக பெரும்பாலான அரசுகள் அங்கீகரிப்பதில்லை.

ஐ.நா. பேரவையில் தற்போது 193 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஐ.நா. பேரவையின் பட்டயத்தில் தேசிய இனம் என வரையறுக்கப்பட்ட இனங்களுக்குத் தன்னாட்சி உரிமை உண்டு என்பது பொறிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 1945ஆம் ஆண்டில் சர்வதேச நாடுகள் கூடி அமைத்த பேரவைக்கு ஆங்கிலத்தில் United Nations என்ற பெயரைச் சூட்டினர். தேசிய இனங்களின் கூட்டமைப்பு என்பது இதன் பொருளாகும். உலகத்தில் உள்ள அனைத்து தேசிய இனங்களும் தங்களுக்கென தனி அரசை நிறுவிக்கொள்ளவும், ஆட்சி நடத்தவும் அதிகாரம் பெற்றவை என்பதை இதன்மூலம் நாம் புரிந்துகொள்ளலாம்.

சுதந்திர நாடுகள் என தன்னை அறிவித்துக்கொண்டிருக்கிற சில நாடுகளை ஐ.நா. பேரவை அங்கீகரிக்கவில்லை. எடுத்துக்காட்டாக, சைப்ரஸ் தீவில் கிரேக்கர்களும், துருக்கியர்களும் வாழ்கிறார்கள். இதில் துருக்கியர்கள் வாழும் பகுதியினர் தனியாகப் பிரிந்து துருக்கிய சைப்ரஸ் நாடு என்ற பெயரில் இயங்




குகிறார்கள். அதை துருக்கிய அரசு அங்கீகரித்திருக்கிறது. ஆனால், உலக நாடுகள் ஏற்கவில்லை.

பல தேசிய இனங்கள் தங்களை ஆதிக்கம் செலுத்தும் நாடுகளிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாக ஆகவேண்டும் என்பதற்காக போராடுகின்றன. திபெத் தனி நாடாக விளங்கியதை செஞ்சீனம் ஆக்கிரமித்து தனது நாட்டிற்குள் இணைத்துக்கொண்டது. இதை எதிர்த்து தலாய் லாமாவும் அவரைச் சார்ந்தவர்களும் திபெத்திலிருந்து வெளியேறி இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். தலாய் லாமாவுக்கு அரசுக்குரிய மரியாதையை இந்தியா வழங்கியுள்ளது. அதன் விளைவாக இந்தியாவில் உள்ள திபெத்தியர்கள் அகதிகளாகக் கருதப்படவில்லை. மாறாக, உலக நாடுகளின் உதவிகளை தலாய் லாமா பெற்று அவருடைய நிர்வாகத்தின் கீழ் இந்த திபெத்திய மக்கள் இங்கு வாழ்கிறார்கள்.

பாகித்தானில் உள்ள பட்டாணியர்கள் தங்களுக்கென்று பக்டுத்தான் நாடு அமைக்கப் போராடி வருகின்றனர்.

இங்கிலாந்திலிருந்து சுகாட்லாந்து பிரிந்து தனி நாடு ஆக வேண்டும் என்பதற்காக போராடி வருகிறது. அதற்காக பொது வாக்கெடுப்பு நடைபெற்றது. அதில் 48% மட்டுமே ஆதரவு தந்ததால் பிரிய முடியவில்லை. ஸ்காட்லாந்தில் ஆங்கிலேயரும், பிற தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களும் வாழ்வதால் தங்களுக்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்று சுகாட்லாந்தியர் கூறுகின்றனர். எனவே மீண்டும் சுகாட்லாந்தியருக்கு மட்டுமே வாக்குரிமை அளித்து தேர்தல் நடத்த வேண்டும் எனப் போராடி வருகின்றனர்.

இதைப்போன்று இன்னும் பல நாடுகளில் பல தேசிய இனங்கள் தங்களின் விடுதலைக்காக தொடர்ந்து போராடி வருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் தமிழீழம் ஆகும். தமிழீழத்தின் பெரும் பகுதியை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மிகச் சிறந்த முறையில் ஆட்சி நடத்தி வந்த விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் அரசை அங்கீகரிக்க உலக நாடுகள் முன்வரவில்லை. அவ்வாறு அங்கீகரிப்பதற்குத் தேவையான வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி, நிரந்தரமான மக்கள் தொகை, ஒரு அரசு, உலக நாடுகளுடன் உறவு கொள்வதற்குத் தேவையான தகுதி அத்தனையும் தமிழீழத்திற்கு இருந்தும் கூட, இந்தியாவின் தூண்டுதலின் விளைவாக 20க்கும் மேற்பட்ட நாடுகள் ஒன்றிணைந்து நின்று சிங்களருக்கு ஆயுத உதவி, நிதியுதவி உள்பட அத்தனையும் அளித்து தமிழீழத்தை மீண்டும் சிங்களப் பேரினவாத ஆட்சி ஒடுக்குவதற்குத் துணை நின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான் இந்த மாநாடு இங்கு கூட்டப்பட்டு ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான “பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்” என்ற கோரிக்கையை முன்வைத்து தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம் அறிவிக்கப்பட்டுள்ளது. அது வருமாறு:

## தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம்

ஆதி காலத்திலிருந்தே, தமிழ்நாட்டு மக்களும், தற்போது இலங்கை என்று அழைக்கப்படும் தீவில் உள்ள ஈழத் தமிழ் மக்களும் இன, மொழி, கலாச்சாரம் மற்றும் மத மரபுகளின் வழியாக ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளதுடன், தமிழ்நாட்டு மக்கள், ஈழத் தமிழர்களுக்கு வரலாற்று ரீதியாக உதவிகளையும் பாதுகாப்பையும் வழங்கி வந்துள்ளனர். ஆகையாலும்

இலங்கைத் தீவின் முதல் பூர்வீகக் குடிகள் ஈழத் தமிழர்கள் மற்றும் 16ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த போரத்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயர்களின் படையெடுப்பு தொடங்கும் வரை, அத்தீவில் தனித்தனி இறைமையுள்ள தமிழ், சிங்கள அரசுகள் இருந்துள்ளன என்பதுடன் மற்றும் 1833இல் இருந்து மட்டுமே, ஆங்கிலேயர்களால் முழுத் தீவும் ஒன்றிணைக்கப்பட்டதுடன், அதன்பின்னர், 1948இல் ஆங்கி லேயர்கள் தீவை விட்டு வெளியேறிய போது, தமிழர்களின் அனுமதியின்றி அதிகாரம் ஒருதலைப் பட்சமாக சிங்களவர் களிடம் ஒப்படைக்கப்பட்ட போது, சுயநிர்ணய உரிமையைப் பயன்படுத்துவதற்கான எந்த வாய்ப்பும் ஈழத் தமிழர்களுக்கு வழங்கப்படவில்லை. ஆகையாலும், மற்றும்

1948ஆம் ஆண்டு முதல் சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்ற இலங்கை அரசாங்கங்கள், ஈழத் தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆட்சி செய்து, பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களைக் கொன்று, தமிழ் இனப்படுகொலை செய்து, முழுத் தீவையும் கைப்பற்றி அதில், ஒற்றை சிங்கள பௌத்த நாட்டை உருவாக்கும் குறிக்கோளுடன், தற்போது தமிழர்களின் தாயகத்தை அடாவடித்தனமாகவும், வேகமாகவும் அழிப்பதில் ஈடுபட்டுள்ளனர். ஆகையாலும்,

எனவே, இப்போது, தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கூட்டாக பின்வருவன பிரகடனப்படுத்தப்படுகின்றன.

1.1987ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில், இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் எனத் தெரி விக்கப்பட்டதன் மூலம், ஈழத் தமிழ் மக்களின் தாயகத்துக்கு சர் வதேச அங்கீகாரம் கிடைத்திருப்பதைச் சுட்டிக் காட்டுவதோடு, ஈழத் தமிழ் மக்களின் ஆறு ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட இயக்கங்களுக்கும், ஈழத் தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும், அன் றைய இந்திய தலைமையமைச்சர் வழங்கிய வாக்குறுதியின் படி, வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பை 19 வருடங் களாக உறுதிப்படுத்திய இந்தியா, 2007ஆம் ஆண்டில் இலங்கை ஒருதலைப்பட்சமாக ஈழத்தமிழ் மக்களின் தாய கத்தை வடக்கு மற்றும் கிழக்கு என இரண்டு மாகாணங்களாக பிளவுபடுத்தியதைக் கருத்திற் கொண்டு, நிலத்தொடர்பான வடக்கு-கிழக்கு மாகாணங்களை மீண்டும் நிரந்தரமாக இணைத்து ஈழத் தமிழர் தாயகத்தைப் பேண இந்தியா தனது வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

2. ஈழத் தமிழர் தாயகத்தை அழிக்கும் இலக்குடன் சிங்கள-இலங்கையானது தமிழர் நில அபகரிப்பு, தமிழர்-வரலாற்று இடங்களை அழித்தல், மேலும் சிங்களக் குடியேற்றங்கள், பௌத்த விகாரைகள் போன்றவற்றை கட்டும் நடவடிக்கைகளில் துரித கதியில் ஈடுபட்டு வருகின்றதை கருத்தில் கொண்டு, இந்த தமிழர் விரோதச் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்தி, ஈழத்தமிழர் தாயகத்தைப் பாதுகாக்க இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.ஏற்கெனவே தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இலங்கையின் அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை, தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக, இந்தியா ஈழத் தமிழ் மக்கள் மீது திணிக்கவோ, நிர்பந்திக்கவோ கூடாது.

4.ஈழத் தமிழ் மக்களின் பிரிக்க முடியாத உரிமையான சுயநிர்ணய உரிமையை இந்தியா முறையாக அங்கீகரித்து, தீவின் வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அவர்களின் பாரம்பரிய தாயகத்தில், சர்வதேச சட்டங்களின்படி அவர்களின் அரசியல் நிலையை சுதந்திரமாகத் தீர்மானிக்க இந்தியா உதவ வேண்டும்.

5.ஈழத் தமிழ் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், இனப்படுகொலை மற்றும் தமிழர்களுக்கு எதிரான கடந்த கால அத்து மீறல்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யவும், தமிழ் ஈழத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் இடைக்கால நிர்வாகத்தை (UN Transitional Administration) நிறுவும் பொருட்டு, சர்வதேச பங்காளி நாடுகளுடனும், ஐக்கிய நாடுகள் சபையுடனும் இந்தியா இணைந்து பணியாற்ற வேண்டும் எனவும், மேலும் சுதந்திர இறையாண்மை கொண்ட தமிழீழத்தின் அரசியல் தகுதியை சட்ட ரீதியாகவும், சனநாயக ரீதியாகவும், அமைதியாகவும் தீர்மானிக்க, புலம்பெயர் தமிழர்கள் உட்பட ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பயன் படுத்துவதற்கு சுதந்திரத்திற்கான பொது மக்கள் வாக்கெடுப்பு




(Independence Referendum) நடத்த இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும்

6.ஈழத் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகளை விசாரிக்க ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (United Nations Human Rights Council) நடவடிக்கைகளை இந்தியா ஆதரிக்கவும், வழி நடத்தவும் வேண்டும். மேலும் இந்த வழக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கும் (International Criminal Court) மற்றும் நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்திற்கும் (International Court of Justice) கொண்டு செல்ல இந்தியா உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.



# முத்தவெளியில் நடந்த இசை நிகழ்ச்சியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை!

14.02.2024



பாடசாலைகள் பல்கலைக்கழகங்களைக் கட்டுவது உன்னதமானது. புலம்பெயர்ந்துபோன எல்லாத் தமிழர்களும் தாயகத்துக்கு திரும்பி வருவதில்லை. தாயகத்துக்கு திரும்பிவரும் எல்லாருமே தாயகத்தில் முதலீடு செய்வதில்லை. தாயகத்தில் முதலீடு செய்பவர்களிலும் மிகச்சிலர்தான் கல்வித்துறையில் முதலீடு செய்கிறார்கள். ஆளில்லா ஊரில் ஆலயங்களைக் கட்டுவதை விடவும் கல்விச்சாலைகளை கட்டுவது மகத்தானது. அப்படி ஒரு முதலீடுதான் கந்தர்மடம் சந்தியில் அமைக்கப்பட்டிருக்கும் நோர்தேன் யுனி என்று அழைக்கப்படும் தனியார் பல்கலைக்கழகம்.

போட்டிக் கல்வி வியாபாரமாகிய ஒரு கல்விச் சூழலில், ஒரு முதலாளி கல்வியில் முதலீட்டைச் செய்யும்பொழுது அங்கேயும் வியாபார இலக்குகள் இருக்கும். ஆனால் தனது முதலீட்டை விளம்பரப்படுத்துவதற்காக சினிமாத் துறைப் பிரபல்யங்களை கொண்டு வரும்போதுதான் சர்ச்சை எழுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவ மிஷனரிகளும் இந்து மத மறுமலர்ச்சியாளர்களும் போட்டிக்குப் பள்ளிகூடம் கட்டிய ஒரு பிரதேசம்தான் யாழ்ப்பாணம். நவீன யாழ்ப்பாணம் எனப்படுவது அவ்வாறு போட்டிக்குப் பள்ளிக்கூடம் கட்டிய ஒரு போக்கின் தேறிய விளைவுதான்.

அமெரிக்காவில் தமது சுகபோக வாழ்க்கைகளைத் துறந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து சன்னியாசிகள் போல வாழ்ந்து பள்ளிக்கூடங்களைக் கட்டிய மிஷினரிமார்கள் பிடியரிசி சேர்த்துக் கட்டப்பட்ட இந்துக் கல்லூரிகள் என்ற மகத்தான முன்னுதாரணங்கள் ஈழத் தமிழர்களுக்கு உண்டு.

இம்மாதம் ஆறாம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில், அக்கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டு 200ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் கொண்டாட்டங்கள் தொடக்கின.

சரியாக 200 ஆண்டுகளுக்கு முன் திருமதி.ஹரியற் வின்சிலோ என்று அழைக்கப்படும் அமெரிக்கப் பெண்மணி உடுவில் மகளிர் கல்லூரியைக் கட்டியெழுப்பினார். தென்னாசியாவில் விடுதி வசதியோடு கூடிய முதலாவது பெண்கள் பள்ளி அது. யாழ்ப்பாணத்தில் ஹரியற் அம்மையார் தங்கியிருந்த காலத்தில் அவருடைய ஐந்து பிள்ளைகள் தொற்று நோய்க்கு இரையானார்கள். அமெரிக்காவுக்கு படிப்புக்காக அனுப்பப்பட்ட அவருடைய ஆண்பிள்ளை கடல் பயணத்தில் இறந்து போனார். தொடர்ச்சியான தனிப்பட்ட இழப்புகளால் நொறுங்கிப்போன போன ஹரியற் தன்னுடைய 37 ஆவது வயதில், இளவயதில் இறந்து போனார். அவரோடு சேர்ந்து பணிபுரிய வந்த அவருடைய இரண்டு சகோதரிகள் அவருக்குப் பின் இறந்து போனார்கள். தன் மூன்று சகோதரிகளோடு சேர்ந்து பணிபுரிவதற்கென்று அமெரிக்காவிலிருந்து வந்த மற்றொரு சகோதரி யாழ்ப்பாணத்தில் வந்து இறங்கிய பின்னர்தான் தன்னுடைய ஏனைய மூன்று சகோதரிகளும் உயிரோடு இல்லை என்பதை அறிந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தின் கல்வியை கட்டியெழுப்புவதற்காக எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்காரர்கள் இங்கு வந்து தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் மதம் மாற்றினார்கள் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவர்களுடைய செயற்பாட்டுகளுக்கு எதிராக இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் பள்ளிக்கூடங்களைக் கட்டி எழுப்பினர்.

மிஷன் பள்ளிக்கூடங்களை எதிர்கொண்டு ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணத்தில் சுதேசிகளின் பள்ளிக்கூடங்களைக் கட்டினார். அவ்வாறு பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு அவர் பிடியரிசித் திட்டம் என்ற ஒரு சமூகப் பங்களிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். கிராமங்கள் தோறும் பிடியரசி சேகரிக்கப்பட்டு, அந்த நிதியில் யாழ்.இந்துக் கல்லூரியும் உட்பட பல்வேறு சுதேச பள்ளிக்கூடங்களை இந்து மறுமலர்ச்சியாளர்களும் இந்து அறக்கட்டளைகளும் கட்டினர்.

உடுவில் மகளிர் கல்லூரியில் இருந்து சில கிலோமீட்டர் தூரத்தில் மருதனார் மடத்தில் இராமநாதனின் கல்லூரி கட்டப்பட்டது. அப்பள்ளிக்கூடத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராகிய திருமதி லீலா இராமநாதன் ஒரு ஒவுஸ்ரேலியப் பெண். அவருடைய சேவையை வியந்து போற்றுபவர்கள் அவருடைய வெண்ணிறப் பாதங்களில் அந்த ஊரின் செம்பாட்டுச் சாயம் நிரந்தரமாக ஒட்டிக் கொண்டிருக்கும் என்று கூறுவார்கள்.

இவ்வாறு எங்கேயோ பிறந்து எங்கேயோ வளர்ந்த வெள்ளைக்கார பெண்களும் ஆண்களும், உள்ளூரில் சைவசமய மறுமலர்ச்சியாளர்களும் கல்விச்சாலைகளைக் கட்டியெழுப்பிய போது அவர்கள் அதை அதிகபட்சம் தொண்டாகவே செய்தார்கள். கல்விப் பணி என்பது உன்னதமான ஒரு தொண்டாகக் கருதப்பட்டு, போற்றப்பட்ட காலகட்டம் அது.

இப்படிப்பட்ட கல்விச்சாலைகளைக் கட்டும் ஒரு பாரம்பரியத்தின் பின்னணியில் வைத்தே நோர்தென் யூனிவர்சிட்டியைப் பார்க்க வேண்டும். அந்த பல்கலைக்கழகம் கட்டப்பட்டிருக்கும் கந்தர் மடம் சந்தியில் இருந்து அரசடிச் சந்தியை நோக்கி வரும் கந்தர் மடம் வீதியில், முன்பு ஒரு சைவப் பிரகாசா வித்தியாசாலை இருந்தது. அங்கே மாணவர்களின் வரவு குறைந்தபடியால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு பின்னர் இடிக்கப்பட்டு அந்த இடத்தில் இப்பொழுது ஏதோ ஒரு அரச கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அச்சிறிய பள்ளிக்கூடத்துக்கு ஈழப்போரில் ஒரு முக்கியத்துவம் உண்டு. 1981 ஆம் ஆண்டு மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடந்த பொழுது சைவப்பிரகாச வித்தியாசாலை ஒரு வாக்களிப்புச் சாவடியாக இருந்தது. மாவட்ட அபிவிருத்தி சபையை ஏற்றுக்கொள்ளாத விடுதலைப் புலிகள் இயக்கம் அந்த சாவடியில் காவலுக்கு நின்ற போலீசாரின் மீது தாக்குதல் நடத்தியதில் ஒருவர் கொல்லப்பட்டார். இப்பொழுது மாணவர்கள் இல்லை என்பதால் அப்பள்ளிக்கூடம் மூடப்பட்டு விட்டது. அது அமைந்திருக்கும் வீதி பலாலி வீதியில் வந்து ஏறும் சந்தியில் நோர்தேன் யூனி கட்டப்பட்டிருக்கிறது.

கனடாவில் வசிக்கும் தமிழ் முதலீட்டாளர் அதைக் கட்டியிருக்கிறார். தனது தாயகத்தில் அவர் முதலீடு செய்ய விரும்புகிறார். குறிப்பாக அதனைக் கல்வித் துறையில் முதலீடு செய்ய விரும்புகிறார். தமிழ் மக்களுக்கு தனியார் பல்கலைக்கழகங்கள் வேண்டும். தமிழ்மக்கள் தங்களுக்கு வேண்டிய துறைகளை விருத்தி செய்வதற்கு அரசாங்கத்தில் தங்குகியிராத அது போன்ற பல்கலைக்கழகங்கள் வேண்டும். அந்த அடிப்படையில் அந்த முதலீட்டை வரவேற்க வேண்டும்.

அந்த முதலீட்டாளரின் மனைவி இந்தியாவின் சினிமாப் பிரபல்யங்களில் ஒருவர். அதனால் அப்பல்கலைக்கழகத்தை விளம்பரப்படுத்த முயன்ற முதலீட்டாளர் தன்னுடைய மனைவியின் துறை சார்ந்து சிந்தித்து விட்டார். தன் மனைவியின் துறை சார்ந்த பிரபல்யங்களை கொண்டு வந்து பெருமெடுப்பில் ஒரு பொழுதுபோக்கு நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்துவதன் மூலம் தனது பல்கலைக்கழகத்திற்குப் பொருத்தமான விளம்பரம் கிடைக்கும் என்று அவர் கருதியிருக்கலாம்.

தமிழ் வெகுசனைப் பண்பாட்டில் சினிமாவின் தாக்கம் வலியது. பெருந்தமிழ் பரப்பில், குறிப்பாக தமிழகத்தில், அரசியல் எனப்படுவது ஏதோ ஒரு விகிதமளவுக்கு சினிமாவின் நீட்சியும் அகட்சியும்தான். ஊடகமாகட்டும் பொழுதுபோக்கு ஆகட்டும், எல்லாவற்றிலும் சினிமாவின் தாக்கம் உண்டு. கேபிள் தொலைக்காட்சி எனப்படுவது சுந்தர இராமசாமி கூறுவதுபோல வீட்டுக்கு வந்த திரைப்படம்தான். அது வீட்டில் வரவேற்பறையில் எப்பொழுதும் இருப்பது. எனவே தமிழ்ப் பொது உளவியலைச் செதுக்குவதில் தமிழ்ச் சினிமா கணிசமான செல்வாக்கைச் செலுத்துகிறது.

தென்னிந்திய வணிக சினிமாவானது மேலோட்டமானது தமிழ் பொதுப் புத்தியைச் சுரண்டுவது அல்லது அவமதிப்பதுதான். தமிழில் ஜனரஞ்சகமானவை பெரும்பாலானவை மேலோட்டமானவைதான்; ஆழமற்றவைதான்; அறிவுக்கு விரோதமானவைதான்.

இந்த அடிப்படையில் பார்த்தால் அறிவைக் கட்டியெழுப்பும் ஓர் உயர்கல்வி நிறுவனத்துக்கு ஜனரஞ்சகமான விளம்பர உத்தி ஒன்றைத் தேர்ந்தெடுத்த விடயத்தில் அந்த முதலீட்டாளர் தவறிழைத்து விட்டார்.

நிகழ்வில் கூடிய கூட்டத்தைக் கட்டுப்படுத்த அவர் மேடையில் பேசுகிறார். தமிழ் மக்களுக்கு நன்மை செய்வதற்காகத் தான் புலம்பெயர்ந்து போன நாட்டில் இருந்து வந்திருப்பதாக கூறுகிறார். ஆனால் கூட்டம் அவருக்கு அடங்கவில்லை. அவருடைய மனைவி ரம்பா பேசுகிறார். கூட்டம் அடங்கவில்லை. போலீஸ் அதிகாரி பேசுகிறார் கூட்டம் அடங்கவில்லை. அப்படி ஒரு கூட்டத்தை எதிர்பார்த்து அதற்கு வேண்டிய முன்னேற்பாடுகள் செய்யப்படாததன் விளைவு அது. புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி அதிகாரத்துக்குள்ள வரையறைகளை உணர்த்திய ஒரு நிகழ்வும் அது.

ஆனால் அந்தக் குழப்பம் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகளுக்கு விரோதமானது அல்ல. முதலீட்டை விளம்பரப்படுத்த எடுத்துக்கொண்ட வியாபார உத்தியின் விளைவு அது. மேலும், ஹரிஹரனின் இசையை பார்வையாளர்கள் அவமதித்ததாகவும் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை. ஒரு தமிழ் முதலீட்டாளர் தமிழ் பொதுப்புத்தியை கையாள்வதில் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் உண்டு என்பதனை உணர்த்திய ஒரு குழப்பம் அது. தாயகத்தில் புலம்பெயர்ந்த தமிழர்களின் முதலீடுகள் தொடர்பாக முதலீட்டாளர்களும் தாயகத்தில் உள்ள அரசியல் சமூகமும் இணைந்து ஒன்றிணைந்த ஒரு வேலைத் திட்டத்துக்குப் போகவேண்டியிருப்பதை உணர்த்திய ஒரு நிகழ்வு அது.

தாயகத்துக்கு முதலீடுகள் அவசியம். தாயகத்தில் தொழில் வாய்ப்புகள் இல்லை; அல்லது மகிழ்ச்சியான ஒரு வாழ்க்கை இல்லை; அல்லது முன்னேறுவது கடினம் என்று கருதும் ஒரு தொகுதி மக்கள் தாயகத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டம் இது. இந்த மண் எங்களின் சொந்த மண் என்று பாடிய ஒரு மக்கள் கூட்டம், அந்த மண்ணை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறது. எனவே தாயகத்தைத் தொழிற்கவர்ச்சி மிக்கதாக மாற்ற வேண்டும். அதற்கு முதலீடுகள் அவசியம். ஆனால் அந்த முதலீடுகளை எந்த நோக்கு நிலையில் இருந்து முன்னெடுப்பது என்பதுதான் இங்குள்ள சவால்.

நாங்கள் தானம் செய்கின்றோம் அல்லது தொண்டு செய்கிறோம் என்ற நிதி அதிகார மனோநிலையில் இருந்து அல்ல, மாறாக, தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவது; அதற்கு வேண்டிய துறைசார் நிறுவனங்களைக் கட்டியெழுப்புவது என்ற நோக்குநிலையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் தாயகத்தில் முதலீடுகளைச் செய்ய வேண்டும் அதாவது தேச நிர்மானத்தின் பங்காளிகள் என்ற அடிப்படையில் முதலீட்டாளர்கள் தாயகத்தை நோக்கி வரவேண்டும். புலம்பெயர்ந்த தமிழ் முதலாளிகளை எப்படி தேச நிர்மானத்தின் பங்காளிகள் ஆக மாற்றுவது என்று தாயகத்தில் உள்ள அரசியல் சமூகம் சிந்திக்க வேண்டும்.

முதலாளிகள், அவர்கள் தமிழர்களாக இருந்தாலும் சரி, சிங்களவர்களாக இருந்தாலும் சரி, வெள்ளைக்காரர்களாக இருந்தாலும் சரி, முதலாளிகள்தான். அவர்களிடம் இலாப நோக்கம் இருக்கும். அவர்கள் முதலீடுகளை இலாப நோக்கத்தோடுதான் முன்னெடுப்பார்கள். முதலாளிகள் அப்படித்தான் சிந்திப்பார்கள். ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை கொழும்புமைய நோக்கு நிலையில் இருந்துதான் அணுகுவார். அவர் அப்படித்தான் சிந்திப்பார். ஆனால், முதலீடுகளை கொழும்பின் நோக்கு நிலையில் இருந்தோ அல்லது தனிய இலாப நோக்கு நிலையில் இருந்தோ செய்வதற்கு பதிலாக தேசத்தைக் கட்டியெழுப்புவதன் ஒரு பகுதியாக அதைச் செய்யுமாறு, தமிழ் அரசியல் சமூகம் முதலீட்டாளர்களை ஊக்குவிக்க வேண்டும். அவர்களை தேச நிர்மாணம் என்ற நோக்கு நிலையில் இருந்து வழிநடத்த வேண்டிய பொறுப்பு தாயகத்தில் உள்ள தமிழ் அரசியல் சமூகத்திற்கு உண்டு.

நன்றி: நிலாந்தன்


19 ஆம் ஆண்டு
வீரவணக்கம்
07.02.2005
மாமனிதர்
சந்திரநேரு அரியநாயகம்
மட்டு – அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர்
லெப்.கேணல் கௌசல்யன்
( இளையதம்பி லிங்கராசா )
மேஜர் செந்தமிழன்
( தம்பிராசா கந்தசாமி )
மேஜர் புகழன்
( சிவலிங்கம் சுரேஸ் )
2ம் லெப்.விதிமாறன்
( சிவபாதம் மதன் )
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்
சங்கத்தமிழ்